

# தமிழரசு

16-10-1987 நி. 1



நாமக்கல் கவிஞர்

இராமலிங்கம்

தோற்றம் : 19-10-1888 மறைவு : 22-8-1972

# இந்த இதழில்



## அகிலம் போற்றும் ஆர்க்காட்டு இரட்டையர்கள்

''ஆர்க்காடு சகோதரர்கள்'' என்று அழைக்கப்படும் இரட்டையர் தமிழகம் தந்த உரம் மிகுந்த வல்லவர்கள்; இந்தியாவின் மேதைகள் ; உலகறிந்த சான்றோர் ; இந்த நூற்றாண்டின் உலக மேதைகளுள் சிலராக மதிக்கப்படுவோர் ஆவர்.

இவ்விரட்டையரது வாழ்வு-மகத்தானது; மகோன்னத மானது ! சூட்டினை ஏற்படுத்தாது ; ஆனால் ஒளியினை உமிழும்.''

பேரறிஞர் அண்ணா

## ஆர்க்காட்டு இரட்டையர்கள் நூற்றாண்டு நிறைவு விழா

சிறப்புக்கட்டுரை



## நாமக்கல் கவிஞர் நூற்றாண்டுத் தொடக்க விழா

சிறப்புக்கட்டுரைகள், செய்திகள்



## சிதம்பரனார் மாவட்டம் ஓராண்டு நிறைவு

சிறப்புக்கட்டுரைகள், அரிய செய்திகள்

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2018

பிரபவ - புரட்டாசி 30

மலர் : 18 இதழ் : 8

16-10-1987

# சிதம்பரனார் மாவட்டம் வளர்ச்சிப் பணிகளுக்கு ரூ. 9.5 கோடி ஒதுக்கீடு

1987-88-ம் ஆண்டில் வளர்ச்சிப் பணிகளை செயல்படுத்த சிதம்பரனார் மாவட்டத்திற்கு ரூ. 9.5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்ட பணிகளுக்கு ரூ. 4.05 கோடி கடன் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் அரசுடமை வங்கிகளின் உதவிகளுடன் செயல்படுத்தப்படும்.

வறுமை கோட்டின் கீழே வசிக்கும் ஏழை மக்களுக்கு கறவை மாடுகள் வாங்க, ஆடுகள் வாங்க, சைக்கிள் கடை, பெட்டி கடைகள் போன்றவற்றிற்கு உதவி வழங்கப்படும்.

தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டத்திற்கு ரூ. 1.18 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் முதல் தவணையாக ரூ. 71 இலட்சம் வெளியிடப்பட்டுள்ளது. இதில் பாதித் தொகை ஆதி திராவிட மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கவும், மீதித் தொகை சமூகக்காடுகள் வளர்க்கவும் ஊருணிகள் அமைக்கவும் செலவிடப்படும்.

நிலமற்ற ஏழைகளுக்கு வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் ரூ. 1.05 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ரூ. 65 இலட்சம் செலவிடப் பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் ஆதி திராவிட மக்களுக்கு 300 வீடுகள் கட்டப்படும்.

பெரு விவசாய திட்டத்தின் கீழ் பாசன திட்டங்களை நிறைவேற்ற ரூபாய் 63.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**திரு பி.ஜி.ஜி. பிச்சை**
திட்ட அலுவலர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,
**சிதம்பரனார் மாவட்டம்**

**திரு ரெ. ஆறுமுகம், இ.ஆ.ப.,**
மாவட்ட ஆட்சியர் மற்றும் தலைவர்
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,
**சிதம்பரனார் மாவட்டம்**

AFCO

# இணையற்ற இரட்டையர்கள்

## 1. டாக்டர் சர். ஏ. இராமசாமி முதலியார்



அரிது, அரிது மானிடராகப் பிறத்தல்; அதனினும் அரிது இரட்டையர்களாகப் பிறத்தல்; இருவரும் கூர்த்த மதியினர் ஆதல் மேலும் அரிது; இருவரும் பயன்பெற வாழ்தல் அருமையினும் அருமையாம்; இருவரும் உலகப் புகழ்பெற்று வாழ்தல் சாலவே அரிதாம்.

இருவரும் சமப்புகழ் ஒளியில் வாழ்தல் மிக மிக அருமை. இருவரும் அழுக்காறின்றி நகமும் சதையும் போல வாழ்ந்து காட்டி, பெரியோர்கள் ஆதல் எப்போதோ ஒருமுறை நடக்கக் கூடிய நிகழ்ச்சி.

இத்தகைய இரட்டையர்கள் நம்மிடையே வாழ்ந்தார்கள். இவர்கள் எவர்? ஆர்க்காடு இராமசாமி முதலியாரும், இலட்சுமணசுவாமி முதலியாரும் ஆவார்கள்.

இரட்டையர்கள் பிறந்தது எப்போது? ஆயிரத்து எண்ணூற்று எண்பத்தேழாம் ஆண்டு. எத்திங்களில்? அக்டோபர் திங்களில்! காந்தியடிகள் பிறந்த அதே திங்களில். பிறந்த நாள் என்னவோ? பதினான்கு.

இவர்கள் எங்கே பிறந்தார்கள்? இப்போது ஆந்திர மாநிலத்தில் உள்ள கர்நூலில் பிறந்தார்கள்.

அலுவல்பற்றித்தமிழ்க்குடும்பம் ஒன்று கர்நூலில் வாழ்ந்து வந்தது. அக் குடும்பத்தின் தலைவர் குப்புசாமி முதலியார் என்பவர். குடும்பத்தலைவி சித்தம்மாள் என்னும் பெயரினர். அம்மையார் ஒரே பேறு காலத்தில் இரு ஆண் குழந்தைகளைப் பெற்றெடுத்தார். முதலில் பிறந்த குழந்தைக்கு இராமசாமி என்று பெயர் சூட்டினர். சில மணித் துளிகளுக்குப் பின் பிறந்தவர், இலட்சுமண சாமி என்று அழைக்கப்பட்டார்.

குழவிப் பருவத்தில், இவர்கள் இடியொன்றைத் தாங்க நேர்ந்தது. இரட்டையர்களின் இரண்டாம் வயதில் அருமைத் தாயை இழந்தார்கள். தாயின் பாசத்தையும், அரவணைப்பையும் வளர்ப்பையும் இழந்தார்கள். என்னே சோதனை! எனினும் தந்தையின் சீரிய குடும்ப வாழ்க்கை இருவரையும் நல்ல வண்ணம் காத்து வளர்த்தது. இருவரையும் அவையத்து முந்தியிருக்கச் செய்த அந்நல்லாருக்கு எப்படி நன்றி கூறுவது?

### பள்ளிப்பருவம்

இருவரும் உரிய பருவத்தில், பள்ளியில் சேர்க்கப் பட்டனர். தொடக்கக்கல்வியை முடித்தனர். நகர் மன்ற உயர்நிலைப் பள்ளியில் தொடர்ந்து கற்று வந்தனர். விளையும் பயிர் முளையிலேயே தெரிந்தது. இருவரும் கருத்தூன்றிக்கற்றனர். பலரும் போற்றப் படித்தனர். சிறப்பாகத் தேர்ச்சி பெற்றனர். இவர்களுக்குப் பாடஞ்

-டாக்டர் நெ.து. சுந்தரவடிவேலு

சொல்லித் தந்த ஆசிரியர்கள் மனமகிழ்ந்தார்கள். பாராட்டினார்கள்.

தங்கள் பிள்ளைகள், வருங்காலத்தில், மிக உயர்ந்த நிலைக்கு வருவார்கள், என்று ஆசிரியர்கள் வாழ்த்தினார்கள். தந்தையார் குப்புசாமி முதலியார் அதைக் கேட்டு இறுமாப்புக்கொள்ளவில்லை.

'எல்லாம் அவன் செயல்' என்று அடக்கமாகப் பதில் கூறினார், திரு குப்புசாமி முதலியார்.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இரண்டாம் ஆண்டு பள்ளி இறுதித் தேர்வு நெருங்கிக் கொண்டிருந்தது. நல்ல எதிர் பார்ப்போடு இரட்டையர்கள் படித்துக் கொண்டிருந்தார்கள்.

வெண்ணெய் திரளும் வேளை, தாழி உடைந்தது. பொதுத் தேர்வுக்குப்பதினைந்து நாட்களே இருந்தன. அப்போது குப்புசாமி முதலியார் மறைந்தார். அந்நேரம் அவருக்கு வயது அய்ம்பத்து இரண்டே. என்னே எதிரிட்ட அதிர்ச்சி! எப்படியோ இருவரும் எதையும் தாங்கும் இதயம் பெற்றார்கள். கவலையில் மூழ்கி விடாமல், தேர்வு எழுதினார்கள் நன்றாகத் தேர்ச்சி பெற்றார்கள். அடுத்து?

**கல்லூரி வாழ்க்கை**

சென்னைக்கு வந்தார்கள் இருவரும். கிறுத்தவக் கல்லூரியில் சேர்ந்தார்கள் பழைய ஆர்வத்தோடு படித்தார்கள். பாடநூல்களைப் பயின்றதோடு நின்றார்களா? இல்லை. விரிவாகப் பயின்றார்கள். நூலகத்தை நன்கு பயன் படுத்திக் கொண்டார்கள். பல் துறை நூல்களை - சிறப்பாக ஆங்கில இலக்கியத்தை விரிவாகப் பயின்றார்கள். அத்தகைய பரந்த படிப்பே அவர்களைப் பண்படுத்தியது; வளப்படுத்தியது. இருவரையும் நல்ல நாவன்மை படைத்தவர்கள் ஆக்கிற்று. சுண்டியிழுக்கும் பேச்சாளர்களாகவே, இருவரும் ஒளி விட்டார்கள். இரட்டையர்கள் எழுத்தாற்றலிலும் சுடர் விட்டார்கள். இவர்களது எழுத்தில் மயங்கி மகிழ்ந்தோர் எண்ணற்றோர்.

கிறுத்தவக் கல்லூரியல் (எப். ஏ) முன் இளங்கலைப் படிப்பைச்சீராக முடித்த பிறகு, என்ன செய்தார்கள்?

இராமசாமி முதலியாரும் இலட்சுமணசாமி முதலியாரும் வெவ்வேறு கல்விப் பாதைகளில் வீறு நடைபோட்டார்கள். இராமசுவாமி இளங்கலைப் படிப்பில் தொடர்ந்தார். அதே கல்லூரியில் கற்றுத் தேர்ந்தார். இராமசாமி பின்னர் சட்டக் கல்லூரியில் சேர்ந்து சட்டம் பயின்றார்.

**மண வாழ்க்கை**

1910-இல் வி. தாமோதர முதலியாரின் மூத்த மகளான காமாட்சி அம்மையாரை மணந்தார்.

**சட்டமும் மருத்துவமும்**

இலட்சுமணசாமி முதலியார், மருத்துவக் கல்வியை மேற்கொண்டார். அப்போதைய மருத்துவப் பட்டமாகிய எல். எம். அண்ட் எஸ். -ஸைப் பெற்றார். தொடர் வளர்ச்சியைப் பின்னர் கவனிப்போம்.

**அரசியல்ஞானி**

சட்டத்தில் பட்டம் பெற்ற இராமசாமி முதலியார், வழக்குரைஞர் தொழிலை மேற்கொண்டார். ரிச்மண்ட் என்னும் மேனாட்டு வழக்கறிஞரோடு சேர்ந்து பணி புரிந்தார். இராமசாமியின் நாவன்மை உதவியது. இவரது புகழ்பரவியது. அந்நிலையில் பொது இயக்கமொன்று, இராமசாமியை ஈர்த்தது; மேடை முழக்கங்களில் ஈடுபடுத்தியது. அவரைச் சொற்போர்களின் முன்னணியில் நிறுத்தியது. திறமையைக் காட்டும் வாய்ப்புகளைத் தந்தது. பதவிகளை அளித்தது. அவற்றின் வாயிலாகச் சமுதாயத்தின் நலத்தைப் பெருக்கிக் கொண்டது.

**புதிய இயக்கத்தின் பிறப்பு**

அந்தப்பொது நல இயக்கம் எது? தென்னிந்திய நல உரிமைக் கழகம் என்பதாம். அது சென்னைமாகாணத்தில் தொடங்கியது. ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பதினேழாம் ஆண்டில் முளைத்தது.



பெரும் தூற்றலுக்கும் வீண் பழிப்புக்கும் ஆளான அவ்வியக்கத்தைத் தோற்று வித்தவர் எவர்? திரு. பி. டி தியாகராயச் செட்டியார்; டாக்டர் டி. எம். நாயர், டாக்டர் நடேச முதலியார் ஆகியோர் ஆவர். முந்தைய இருவரும் இந்திய காங்கிரசில் முன்னோடிகளாக விளங்கி அருந் தொண்டாற்றியவர்கள்.

**பொது நலம் பேணல்**

சமுதாய விழிப்பு, உரிமை வேட்கை, மக்கள் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு கல்வி, பதவி, வாய்ப்புகள், முதலியன கழகத்தின் நோக்கங்களாகும். பொது விவகாரங்கள் பற்றிய பொது மக்கள் கருத்துக்களை முறையாகத் திரட்டும் அங்கமாக நல உரிமைக் கழகம் விளங்க வேண்டும் என்று அமைப்பாளர்கள் விழைந்தனர். சட்டவரம் பிற்குட்பட்ட முன்னேற்றம் என்பது மற்றோர் திட்டம். இந்நோக்கங்களுக்காகத் தொடங்கப் பட்ட தென்னிந்திய நல உரிமைக் கழகம் நீதிக்கட்சி என்று அழைக்கப்பட்டது.

இராமசாமி முதலியார் தொடக்க காலம் முதல் நீதிக் கட்சியில் ஈடுபாடு கொண்டார். அதற்கென அரும்பாடு பட்டார். எண்ணற்ற மேடைகளில் முழங்கினார். பல்லாண்டுகள்; நாள் தவறாது, எழுதி, கொள்கை விளக்கந் தந்தார்.

பாவமேதுமறியாது, பழிக்கு ஆளான இந்திய இயக்கங்களில் நீதிக் கட்சியும் இடம் பெற்றது. தூற்றல் பெருமழையில் நனைந்தது. வகுப்பு வெறுப்பை வளப்பவர்கள் என்று நீதிக் கட்சியினர் பழிக்கப் பட்டனர். அதற்கு ஆதாரம் இல்லை. வாழ்நாளின் எக்கால கட்டத்திலும், தியாகராசரோ, நாயரோ, இராமசாமி முதலியாரோ பிற தலைவர்களோ தங்களது சமயப்பற்றைக் கைவிட்டவர்கள் அல்லர்; புரோகிதத்தைப் புறக்கணித்தவர்கள் அல்லர். இவ்வுண்மையைக் கருத்தில் கொண்டு இவர்களையும் இவர்களைச் சார்ந்தவர்களையும், மதிப்பிட்டால், இவர்கள் நீதிக் கட்சியில் இருந்து பணி புரிந்ததற்கு நாணமடையத் தேவையில்லை என்பது தெளிவாகும்.

ஊமைகளின் குரலாக, தூண்டுகோலாக, உதவி வாய்க்காலாகப் பயன்பட்ட நீதிக் கட்சியின் நாடி நரம்பாக, இராமசாமி முதலியார் விளங்கினார். அவரது பொதுத் தொண்டு வீண் போகவில்லை. புகழைத் தேடித் தந்தது போன்றே, வாய்ப்புகளையும் கொண்டு வந்து சேர்த்தது.

**பொதுநலச்சேவை**

ஆயிரத்துத்தொள்ளாயிரத்து இருபதாம் ஆண்டு, சென்னை மாகாணச் சட்டமன்றப் பொதுத் தேர்தல் வந்தது. அத் தேர்தலில் நீதிக்கட்சி போட்டியிட்டது. பெரும்பான்மை இடங்களைப் பிடித்தது. இராமசாமி முதலியாரும் போட்டியிட்டார். வெற்றி பெற்றார்.





நீதிக்கட்சி அமைச்சரவை அமைந்தது. நீதிக் கட்சியின் தலைவர் தியாகராயர் அமைச்சர் பதவியைத் தியாகஞ் செய்தார். தமது சகாக்களை அமைச்சர்கள் ஆக்கி மகிழ்ந்தார். அந்த அமைச்சரவையில், கல்வி அமைச்சரின் சட்டமன்றச் செயலராக இராமசாமி நியமிக்கப்பட்டார். அப்பதவியில் அரும் பணியாற்றினார். தொடக்கக் கல்வி சட்டமொன்றை முதன் முதல் நிறைவேற்றிய பெருமை அந்த அமைச்சரவைக்கு உரியதாம்.

இருபத்து மூன்றாம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலிலும் நீதிக்கட்சி பெரும்பான்மை பெற்றது. இராமசாமி முதலியாரும் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் 1926ஆம் ஆண்டில் நடந்த தேர்தலில் தோல்வி கண்டார்; இருப்பினும் கட்சிப் பணியில் ஆர்வத்தோடு ஈடுபட்டார்.

இராமசாமி முதலியார் சிறந்த ஆங்கில எழுத்தாளர். அவர் நீதிக் கட்சியின் ஆங்கில நாளிதழ் ஆகிய ஜஸ்டிஸ் நாளிதழின் ஆசிரியராக 1927 முதல் 1935 வரையில் சீரிய பணியாற்றினார்.

இவர் சென்னை மாநகராட்சியின் தலைவராக ஈராண்டுகள் சிறந்து விளங்கினார். மாமன்றத்தின் உயரிய மதிப்பையும் சீரிய மரபினையும் காப்பாற்றிய பெருமை இவருக்கு உண்டு.

இராமசாமி 1931–ஆம் ஆண்டு இந்திய சட்ட மன்றத்திற்குத்தேர்ந்தெடுக்கப்பட்டார்அந்த அவையில் இவரது பணி ஒளி விட்டது. 1933–ஆம் ஆண்டு இலண்டனில் கூடிய வட்ட மேசை மாநாட்டில் கலந்து கொண்டார்.

### பல்வேறு துறைகளில் ஆற்றிய தொண்டு

இராமசாமி முதலியாரின் பரந்த பட்டறிவையும், இயற்கை மதி நுட்பத்தையும் இந்திய அரசு பயன் படுத்திக் கொண்டது. கனடாவில், டொராண்டோ நகரில், நடந்த காமென்வெல்த் உறவு பற்றிய மாநாட்டிற்கு இந்திய தூதுக் குழுவின் தலைவராக இராமசாமி முதலியார் அனுப்பி வைக்கப்பட்டார். அங்கும் புகழ் பூத்த பணியாற்றினார்.

ரிசர்வ் வங்கிக் குழு, இரயில்வேகுழு, படைக் குறைப்புக் குழு ஆகிய வற்றின் உறுப்பினராக விளங்கி, இராமசாமி ஆற்றிய பணி, பாராட்டுக்குரிய தாம்.

1937 – இல் இந்திய மந்திரிக்கு ஆலோசகராக நியமிக்கப்பட்ட இராமசாமி முதலியார், அப்பதவியிலும் சிறந்து விளங்கினார். இவரது பேராற்றலை மேலும் உணர்ந்த ஆங்கிலேய ஆட்சி முதலியாரை இந்திய அரசின் வாணிக அமைச்சராக 1939–இல் நியமித்தது. 1942 வரை அத்துறையின் அமைச்சராக விளங்கினார். இராமசாமி முதலியார் பின்னர் ஓராண்டு காலம், துறைக் கட்டு ஏதும் இல்லாத, வைசிராயின் நிர்வாக அவையில் அமைச்சராகச் செயல் பட்டார். 1942 – இல் இராமசாமி முதலியார் 'சர்' என்ற உயரிய பட்டத்தைப் பெற்று, நமக்கு பெருமை சேர்த்தார்.

1942–இல் முதன் முதலாக இந்தியாவில் விஞ்ஞான தொழில் நுட்ப ஆய்வுக் கூடமும் அதன் அமைப்புக் குழுவும் அமைக்கப்பட்டது. அக்காலத்தில் அறிவியல் ஆராய்ச்சிக்கும், கண்டு பிடிப்புகளுக்கும் அரசு அதிகம் கவனம் செலுத்தாத நேரம். அப்பொழுது இவ்வாராய்ச்சி நிறுவனத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு 10 இலட்சம் ரூபாய்கள்தான் ஒதுக்கப்பட்டது. அந்நேரத்தில் இரண்டாவது உலகப் போர் நடந்து கொண்டிருந்தது. மேனாடுகளின் வளர்ச்சி நிலைகளை நன்கு அறிந்த சர் இராமசாமி முதலியார், போர் நிகழும் காலங்களில்தான் அறிவியல் ஆராய்ச்சிக்கும், தொழில் நுட்ப ஆராய்ச்சிக்கும் அதிக பணம் ஒதுக்க வேண்டியது அவசியம் என்பதனை வலியுறுத்தினார். அவரது அறிவுரையின் பேரில்தான் இந்திய விஞ்ஞான தொழில் நுட்ப ஆய்வுக் கூடம் நிறுவப்பட்டது. இக்காரணத்தினால்தான் சர் இராமசாமி அவர்கள் இந்திய விஞ்ஞான தொழில் நுட்ப ஆய்வுக் கூடத்தின் தந்தை என இன்றும் பாராட்டப்படுகிறார்.

இவ்வாய்வுக் கூடம் 1967ஆம் ஆண்டில் தனது வெள்ளி விழாவினைக்கொண்டாடுகையில் சர் இராமசாமி முதலியாரை, வெள்ளிவிழா சொற்பொழிவினை ஆற்றுமாறு வேண்டி, தன்னைப்பெருமைப்படுத்திக் கொண்டது. அச் சொற்பொழிவு குடியரசு தலைவர் தலைமையிலும் காலஞ் சென்ற பிரதமர் இந்திரா காந்தி முன்னிலையிலும் ஆற்றியது இந்திய விஞ்ஞான வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும்.

சுதந்திரம் பெற்ற பின்பு, இவ்வமைப்புக் குழுவிற்கு காலஞ் சென்ற பிரதமர் நேரு தலைமை தாங்கி அவருக்கே உரிய அறிவியல் ஆற்றலுடன், முன்னோக்குடன் நாட்டிற்கு இன்றைய எதிர்கால தேவைகளைக் கருதி பல நூற்றுக் கணக்கான விஞ்ஞான ஆராய்ச்சி நிறுவனங்களை இந்தியா முழுவதும் அமைக்க ஏற்பாடு செய்தார். இன்று உலக அரங்கில் இந்திய விஞ்ஞானிகள் பெரு நிலையை எய்தியமைக்கு அன்று வித்திட்ட சர் இராமசாமி முதலியாரையும், அதனைப் பேணிக் காத்த நேரு அவர்களையும், இந்திரா காந்தி அம்மையார் அவர்களையும், இன்று தொடர்ந்து தலைமை ஏற்று நடத்தும் பாரதப் பிரதமர் ராஜீவ் அவர்களையும் அறிவியல் உலகம் என்றும்போற்றிப் பாராட்டும்.

அப்போது இரண்டாம் உலகப் போர் நடந்து கொண்டிருந்த காலம். இம்பீரியல் போர் அமைச்சரவை ஒன்று இயங்கி வந்தது. அந்த அவையில் இந்தியாவின்போராளியாக சர் இராமசாமி முதலியார் பங்கு கொண்டார்.

1943 முதல் 1946 வரை கவர்னர் ஜெனரலின் நிர்வாக சபையில் சப்ளை உறுப்பினராயிருந்து, திட்டமிடுதல், வளர்த்தல், பொறுப்புக்களைத்திறம்பட சாதித்தார்.

1945 – இல் ஐக்கிய நாடுகளின் அவை நிறுவப் பட்டது. அதற்கான பூர்வாங்கக் கூட்டத்தில் இந்தியத்

சிதம்பரனார் மாவட்ட

ஓராண்டு நிறைவு விழாவிற்கு

எமது நல்வாழ்த்துக்கள்

இவண்

**எஸ்.ஆர். பிலிம்ஸ்,**
படுக்கப்பத்து

**அனிதா ஸ்டீல் கார்ப்பரேசன்,**
மதுரை-9

**ஸ்டார் லாரி சர்வீஸ்,**
பெரியதாழை.

**O.1468 கீரைக்காரன்தட்டு**
**கூட்டுறவுச் சங்கம்**
கருப்புககட்டி உற்பத்தியாளர்,
மகாதேவன்குளம்.

**திலக் டாக்கீஸ்,**
தட்டார்மடம்

**சந்தோஷ் நாடார் & சன்ஸ்**
திருநெல்வேலி.

**கணேசன் ரைஸ் மில்,**
தட்டார்மடம்

**இம்மானுவேல் ரைஸ் மில்,**
அதிசயபுரம்

**சந்திரன்,**
ஊராட்சி மன்றத் தலைவர்,
கருவேலம்பாடு

**ஆர். துரைராஜ்,**
நெல், அரிசி மொத்த வியாபாரம்,
சாத்தான்குளம்.

**அருள் ஸ்டோர்ஸ்,**
ஒட்டன்சத்திரம்

**சில்லரை வியாபாரிகள் சங்கம்,**
சாத்தான்குளம்

**உத்திரபாண்டி,**
ஆடியோ & வீடியோ சென்டர்,
சாத்தான்குளம்.

**நாராயணசாமி தியேட்டர்,**
சாத்தான்குளம்

**அருணசங்கர் மேட்ச் பாக்டரி.**
பண்டாரபுரம்

தூதுக் குழுவின் தலைவராக இராமசாமி முதலியார் கலந்து கொண்டார். அருவி யெனப் பொழிந்த இவரது உரை பெரிதும் பாராட்டப்பட்டது. ஐக்கிய நாட்டு சபையின் கொள்கைகளை (UN Charter) உருவாக்கிய வர்களில் சர் இராமசாமி முதலியாருக்கும் பெரும் பங்கு உண்டு.

இராமசாமி முதலியாருக்கு கௌரவ டாக்டர் பட்ட மளித்து மகிழ்ந்த பல்கலைக் கழகம் பலவாகும். ஆக்ஸ் போர்ட் பல்கலைக்கழகம் அதில் ஒன்றாகும். உஸ் மானியா, சென்னை, டர்ஹாம், ஆகியவை அச்சிறப் பினைப் பெற்றன.

1948–இல் இரும்பு மனிதர் வல்லபாய் படேல் அவர் களின் தொலை நோக்கால், இந்திய சுதேச மன்னர் களின், ஆட்சிக்குட்பட்டிருந்த பகுதிகள், இந்தியா வோடு இணைக்கப்பட்டன. இணைக்கப்பட்ட இராஜ் யங்களுள் ஒன்று ஹைதராபாத். இதை எதிர்த்து ஐக்கிய நாடுகளின் அவையில், பிரச்சனை வந்தது. இந்தியாவின் சார்பில் வாதாட டாக்டர் இராமசாமி முதலியார் ஐக்கிய நாடுகளின் அவைக்கு அனுப்பப் பட்டார். அவருடைய வாதத்திறமை, இந்தியா எடுத்த நடவடிக்கை சரியானது என்று மெய்ப்பித்தது. உலக நாடுகளின் அவை இந்தியாவின் நிலையை ஏற்றுக் கொண்டது.

தன்னாட்சி இந்தியாவும் இராமசாமி முதலியாரின் அறிவு ஆற்றல்களை நன்கு பயன் படுத்திக் கொண்டது.

ஐக்கிய நாடுகள் அவையின், பொருளியல் சமூக வியல் குழுவிற்கு முதல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டவர், இராமசாமி முதலியார் என்பது இந்திய நாட்டுக்குப் பெருமை சேர்ப்பதாகும். 1948–இல் இரண்டாம் ஆண்டிற்கும் இவரே தேர்ந்தெடுக்கப் பட்டார் என்பதை நினைக்க இனிக்கும்.

1948–இல் ஐக்கிய நாடுகளின் அவை கூட்டிய கடல் வாணிக மாநாட்டிற்கும், தகவல் உரிமை மாநாட்டிற்கும் இந்திய தூதுக் குழுவின் தலைவராக இராமசாமி முதலியார் அனுப்பப்பட்டார். சென்ற விட மெல்லாம் சிறப்பைப்பெற்றார்; பெற்றுத் தந்தார்.

ஐக்கிய நாடுகள் அவை போன்ற உலக அமைப்பு களில் பணிபுரிவோரின் நலன்களைப் பற்றிய ஆலோ சனைக் குழுவொன்று உண்டு. ஏறத்தாழ பத்தாண்டு காலம் அக்குழுவின் தலைவராக விளங்கிய பெருமை சர் இராமசாமி முதலியாரைச் சாரும்.

பத்தாண்டு காலம் இந்திய நாடாளுமன்ற மாநிலங்கள் அவையின் உறுப்பினராக விளங்கிய இராமசாமி முதலியார் கருத்தாழம் மிக்க உரைகளை ஆற்றினார்; நாட்டு நலனைப் பேணிக்காத்தார்.

முன்னர், சுதேச மன்னரின் ஆளுகையில் இருந்த மைசூர் இராச்சியத்தின் திவானாக, ஆற்காடு இராமசாமி



முதலியார் மூன்றாண்டு காலம் (1946–49) சீரிய பணி யாற்றினார். அரசியல் ரீதியாக, கொள்கைகளில் மாறுபட்ட கருத்துக்கள் இருந்தும் மூத்த அரசியல் தலைவர்கள் தக்கவர்களை பயன்படுத்த விரும்பி னார்கள் என்பதற்குச் சான்றாக மூதறிஞர் ராஜாஜி அவர்கள், இராமசாமி முதலியார் அவர்கள்தான் தொடர்ந்து மைசூர் திவானாக இருக்க வேண்டும் என்று அப்போதைய முதல்வர்க்குப் பரிந்துரை செய்தார்.

### துணைவேந்தர் பதவி

திருவிதாங்கூர் பல்கலைக்கழகம் அரசியல் அறிஞராகவும், நிர்வாக மேதையாகவும் ஒளிவிட்ட சர் இராமசாமி முதலியாரை 1951 முதல் 1959 வரை துணை வேந்தராகப் பெற்று ச்சிறந்தது.

1956–ஆம் ஆண்டு இப்பெரியவரை இந்நூலாசிரியர் திருவனந்தபுரத்தில் சில மணித்துளிகள் கண்டு உரை யாடும் பேறு கிட்டியது. பன்னிரண்டு ஆண்டு களுக்குப் பிறகு பாரிஸ், யுனெஸ்கோ, தலைமை அலுவலகத்தில் மீண்டும் அவரை எதிர் பாராது காண நேர்ந்தது. அடுத்த நொடியே, திருவனந்தபுரம் சந்திப்பை நினைவு படுத்திப் பேசினார், உலகப் புகழ் பெற்ற முதலியார். என்னே! அவரது வியத்தகு நினை வாற்றல்!

அரசியல் சான்றாண்மைக்கு எடுத்துக்காட்டாக விளங்கிய சர். இராமசாமி முதலியார், தன்னாட்சி இந்தியாவின் பெருந் தொழில் வானிலும் சுடர்விட்டார்.





இந்தியத் தொழில்களையும் பொருளாதாரங்களையும் வளர்த்தார்.

தேசிய காகித ஆலையின் தலைவராக, இந்திய கப்பல் கம்பெனியின் தலைவராக, அசோக் லேலந்து கம்பெனியின் தலைவராக, டீ. ஐ.சைக்கிள் கம்பெனியின் தலைவராக சர் முதலியார் ஆற்றிய அரும்பணிகளைத் தொழிலதிபர்கள் நன்கு அறிவர்.

**அறிஞர் அண்ணா — என் தலைவர்**

சென்னை அண்ணாசாலையில் நிறுவப்பட்டிருக்கும் அறிஞர் அண்ணாவின் முழு உருவச் சிலையினை சர் இராமசாமி முதலியார் அவர்கள் தான் திறக்க வேண்டும் என்று அறிஞர் அண்ணா விழைந்தார். அவ்வாறே 1—1—1968-இல் திறக்கப்பட்டது.

அச் சீரிய விழாவில், முதல்வர் அண்ணாவை 'எனது தலைவர்' என்று இராமசாமிமுதலியார்அவர்கள் அழைத்தது அவரது அரசியல் முதிர்ச்சிக்கும் பண்பாட்டிற்கும் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

1970-ஆம் ஆண்டில், இராமசாமி முதலியாருக்கு 'பத்மவிபூஷன்' என்ற விருது வழங்கப்பட்டது.

ஊழையும் உப்பக்கம் கண்ட, இணையற்ற சாதனையாளராக விளங்கிய பத்மவிபூஷன்ஆர்க்காடு இராமசாமி முதலியார் 17-7-76 அன்று தமது எண்பத்தொன்பதாம் வயதில் மீளாத்துயிலில் ஆழ்ந்து விட்டார்.

ஓங்குக ஆர்க்காடு இராமசாமி முதலியாரின் புகழ், வளர்க அரசியல் ஞானமும் தொலை நோக்கும்.

# 2. டாக்டர் சர். ஏ. இலட்சுமணசாமி முதலியார்



ஒரே ஒருவர், ஒரே பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராகத் தொடர்ந்து இருபத்தேழு ஆண்டுகள் விளங்குவது இணையற்ற அரிய சாதனையாகும். உலகில் டாக்டர் ஆர்க்காடு இலட்சுமணசாமி முதலியார் ஒருவர் மட்டுமே அப்பெருமைக்கு உரியவராக இருந்தார். இவர் இருபத்தேழு ஆண்டுகள் தொடர்ச்சியாக, சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தராக ஒளிவிட்டார்.

அவர் துணை வேந்தர் பதவிக்கு வருவதற்கு முன் அவரது வாழ்க்கையைச் சுருக்கமாகச் சொல்வது பொருத்தமாகும்.

இரட்டையர்களாகிய இராமசாமியும், இலட்சுமணசாமியும் கல்லூரிக் கல்வியின் முதல் நிலை வரையில் ஒன்றாகவே பயின்று வந்தார்கள். நம்பிக்கை யூட்டும் நல்லாசிரியர்களிடம் கற்று வந்தார்கள். ஆசிரியர் எவ்வழி, மாணவர் அவ்வழி. ஆசிரியர்களின் நுட்பமுத்தி இவ்விருவரையும் தூண்டிற்று. ஆசிரியர்களுடைய ஆர்வம் இரட்டையர்களைக் கவர்ந்தது. தங்கள் ஆசிரியர்களைப் போல், சிறந்து ஒளிவிட வேண்டுமென்னும் எண்ணம் எழுந்தது. 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்'என்னும் நெறியைப்போற்றி வளர்ந்தார்கள்.

மூத்தவர் இராமசாமி வழக்குரைஞர் தொழிலால் ஈர்க்கப்பட்டார். இளையவர் இலட்சுமணசாமியை மருத்துவத் தொழில் கவர்ந்தது.

**மருத்துவப்பயிற்சி**

மனதிற்கு இனிய படிப்பில் ஈடுபட்டால், கல்வியில் ஒளிவிடலாம். இயற்கையறிவு மிக்க இவ்விருவருமே, மனதிற்கு இனிய பயிற்சியில் ஈடுபட முடிந்தது. அடித்தள படிப்பில் சிறந்த தேர்ச்சி பெற்றதால் இலட்சுமணசாமிக்கு எளிதில் மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைத்தது. சென்னை மருத்துவக் கல்லூரியில் பயின்றார். 1908-ஆம் ஆண்டு எல். எம். அண்டு எஸ். (L.M.& S.) பட்டம் பெற்றார்.

இவர் வேலைக்காகக் காத்திருக்கவில்லை. மாகாண அரசின் மருத்துவத் துறையில் இடம் கிடைத்தது. மதுரையிலும் பழனியிலும் சில காலம் சீரிய பணி புரிந்தார்.

மருத்துவம் பார்க்கும் பணியைப் பொறுப்பான தொண்டாகக் கருதினார். டாக்டர் இலட்சுமணசாமி முதலியார் நோயாளிகளைப் பரிவோடு பார்ப்பார். விழிப்பாக நோய் நாடி பார்ப்பார். பொறுமையோடு மருத்துவம் பார்ப்பார். இவரிடம் நுனிப்புல் மேயும் போக்கு என்றும் எதிலும் தலை காட்டியதில்லை.

பழனியிலிருந்து சென்னைக்கு மாற்றலாகி வந்தார். எழும்பூரில் உள்ள, அரசினர் மகளிர் குழந்தைகள் மருத்துவமனையில் சேர்ந்தார். தொண்டுக்கு வாய்ப்பு அதிகமாயிற்று.

சென்னை மருத்துவ சங்கத்தை முன்னின்று அமைத்தவர், டாக்டர் இலட்சுமணசாமி அதன் முதல் செயலராகச் சீரிய பணி புரிந்தார். பின்னர் துணைத் தலைவரானார். தொடர்ந்து நற்பணி ஆற்றியதால், சங்கத்தின் தலைவருமானார்.

1914-ஆம் ஆண்டில், டாக்டர் இலட்சுமணசாமி இளங்கலை (பி.ஏ.) பட்டம் பெற்றார். அவ்வாண்டில், சென்னை இராயபுரம் பிள்ளைப் பேறு மருத்துவமனைக்கு மாறுதல் பெற்றார். அப்பகுதியிலும் அவரது புகழ் பரவிற்று.





மணவாழ்க்கை

*1916*–ஆம் ஆண்டில், டாக்டர் இலட்சுமணசாமி முதலியார் திரு. வி. தாமோதர முதலியாரின் இளைய மகளாகிய இராதாபாய் என்பவரை, மணந்தார்.

மருத்துவப்பணி

ஆறு ஆண்டு காலம் இராயபுரம் பகுதியில் சீரிய பணியாற்றிய பிறகு, எழும்பூர் அரசு மகளிர் குழந்தைகள் மருத்துவ மனைக்கே மாறுதல் பெற்றார்.

*1920*–ஆம் ஆண்டில், சென்னை மருத்துவக் குழு விற்குத் (Madras Medical Council) தேர்ந்தெடுக்கப் பட்டார். மருத்துவர்கள் அவர்பால் வைத்திருந்த நம்பிக்கையை இப்படி வெளிப்படுத்தினார்கள்.

தொண்டில் முன்னேற்றம் கண்டு வந்த முதலியார், படிப்பிலும் முன்னேறி வந்தார். *1922*-இல் எம். டி. (மருத்துவ அறிஞர் - M.D.) பட்டம் பெற்றார்–'தாய்மை யும் குழந்தை நலமும் ஓர் இந்தியப் பிரச்சனை' என்ற இவரது வெளியீடு இவருக்குப் புகழைச் சேர்த்தது. இந்நூல் இன்றும் பலமருத்துவர்களால் மேற்கோளாகக் காட்டப்படுகிறது. தான் கண்ட புதுமைகளை, பயிற்சி களை, அனுபவங்களை தமது மருத்துவ மனையில் புகுத்தினார். "இந்தியாவிலேயே இவரைவிட சிறந்த மருத்துவ நிபுணர் - மாதர் நோய்கள் தீர்க்கும் நிபுணர் வேறு ஒருவரும் கிடையாது" என்ற சிறப்புப் பெயர் பெற்றார்.

பல்கலைக்கழகப் பணி

*1923*–ஆம் ஆண்டு, டாக்டர் இலட்சுமணசாமி முதலியாரின் வாழ்க்கையில் ஓர் நல்ல திருப்பு முனை யாக அமைந்தது. அவ்வாண்டில் தான் அவர், சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு நற்றொண்டு புரியத் தொடங்கினார். சென்னைப் பல்கலைக் கழகப் பட்டதாரிகள் தொகுதியில் இருந்து, பேரவை உறுப் பினர்களில் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். டாக்டர் இலட்சுமணசாமி செய்வன திருந்தச் செய் பவர். பல்கலைக் கழகப் பணியிலும் அவ்வியல்பு ஒளி விட்டது. பல்கலைக் கழகச் சட்டத்தையும், விதிமுறை களையும் நுணுக்கமாகப் பயின்றார். அவற்றில் வல்லுநர் ஆனார். ஈராண்டுகளுக்குப்பின், இவர் பல்கலைக் கழக ஆட்சிக்குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவில் நிதிக் குழு என்னும் உட்குழு உண்டு. அதன் தாளாளராக டாக்டர் முதலியார் தேர்ந்தெடுக்கப் பட்டார். அப்பொறுப்பையேற்ற இவர், தனது தனி முத்திரையைப் பதித்தார். பல்கலைக் கழக நிதி நிலையைக் கண்ணினைக் காக்கும் இமையெனக் காத்தார். நிதி நிலைமை வளம் பெறப் பெரிதும் துணை புரிந்தார். அரசையே முழுதும் நம்பி வாழாமல், பல்கலைக்கழகம் தனது வருவாயை நம்பி இயங்கும் நிலையை உருவாக்கினார்.

*1925* முதல்–*1942* வரை ஒவ்வோர் முறையும் ஆட்சிக் குழுத் தேர்தலில் வெற்றி பெற்று வந்தார். என்னே! கல்வியாளர்கள் அவர் பால் வைத்திருந்த நம்பிக்கை!

இராவ்பகதூர் பட்டம்

இந்திய அரசு, டாக்டர் இலட்சுமணசாமி முதலி யாரின் சீரியபணியைப் பாராட்டும் வகையில் 1925–ஆம் ஆண்டில் 'இராவ்பகதூர்' என்ற பட்டத்தைவழங்கிச் சிறப்பித்தது. இவரிடம் மருத்துவம் பார்த்துக் கொண்ட பல்லாயிரக்கணக்கானவர்கள் இதனால் மகிழ்ந்து வாழ்த்தினார்கள்.

மேனாடுகளோடு தொடர்பு

பிரிட்டனிலும், அய்ரோப்பியாவிலும் இயங்கும் பல்கலைக் கழகங்களைக் கண்டு வரும்படி, டாக்டர் இலட்சுமணசாமி முதலியாரை சென்னை மாகாண அரசு அனுப்பி வைத்தது. *1927–28* – இல் ஓராண்டு காலம் பிரிட்டானிய பல்கலைக் கழகங்கள், அயர்லாந்து, பெர்லின், பாரிசு, வியன்னா, பிரசல்ஸ், ஆம்ஸ்டர்டாம் ஆகிய நகரங்களில் உள்ள பல்கலைக் கழகங்களுக்குச் சென்றார்.

ஆங்காங்கே மருத்துவத் துறைகளைக் கண்டார்; புது முறைகளைக் கற்றறிந்தார். இந்தக் கல்விச் சுற்றுலா, இவரது பார்வையை விரிவு படுத்தியது. தொடர்புகளை அதிகப்படுத்தியது. நவநவ முறைகளை அறிமுகப் படுத்தியது. எழுச்சியோடும், நம்பிக்கை யோடும் தாயகம் திரும்பினார். சென்னைப் பல்கலைக் கழகத் தோடு கொண்டிருந்த தொடர்பினைப் பயன் படுத்தினார். பிள்ளைப் பேறு மருத்துவத் துறையில், புதியதோர் 'டிப்ளமோ' படிப்பைக் கொண்டு வர ஏற் பாடு செய்தார். அது வரை இந்தியாவில் வேறெங்கும் அத்தகைய படிப்பு இல்லை. டாக்டர் இலட்சுமண சாமி யால் சென்னைப் பல்கலைக் கழகம் முன்னோடி யாகும் வாய்ப்பினைப் பெற்றது.

பல்வேறு துறைகளில் ஆற்றிய பங்கு

சென்னை மாநகரில், 'பிள்ளைப் பேற்றின் போது இறப்பு பற்றிய ஆய்வு' (Survey) ஒன்றை, முதன்முதல் நடத்தி வெளியிட்ட பெருமை டாக்டர் இலட்சுமண சாமி க்கே உரியதாம். இத்தகைய ஆய்வு அது வரை இந்தியாவில் வேறெங்கும் நடை பெற வில்லை என்பது குறிப்பிடத்தக்கதாம்.

*1930*–இல், இங்கிலாந்தில் அரசு பிள்ளைப் பேறு மருத்துவக் கல்லூரி ஒன்று நிறுவப்பட்டது. அக் கல்லூரிக் குழுவின் சிறப்பு உறுப்பினராக டாக்டர் இலட்சுமண சாமி முதலியாரை நியமித்து, அவருக் கும், இந்தியாவிற்கும் சிறப்பு சேர்த்தது.

இந்திய மருத்துவக் குழுவின் நிர்வாகக் குழுவில் டாக்டர் முதலியார் ஆற்றிய பணி பாராட்டுக்குரியதாம்.

சென்னை எழும்பூர் மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவ மனையின் மேற்பார்வையாளராக விளங்கிய டாக்டர் இலட்சுமணசுவாமி முதலியார், சென்னை மருத்துவக் கல்லூரியில் 'பிள்ளைப் பேறு மருத்துவப்' பேராசிரியராகவும் விளங்கினார்.

1936-ஆம் ஆண்டில் முதல் அனைத்திந்திய பிள்ளைப்பேறு மருத்துவ மாநாட்டை சென்னையில் சிறப்பாக நடத்திக் காட்டினார்.

பிள்ளைப் பேறு மருத்துவம் பற்றி இவர் எழுதிய சிறந்த நூல், பல்லாண்டுகள் பாட நூலாகப் பயன் பட்டது.

சென்னை மருத்துவக் கல்லூரிக்குத் தலைவராக நியமிக்கப்பட்ட முதல் இந்தியர் டாக்டர் இலட்சுமண சாமி முதலியாரே. முதல்வராக இயங்கிய இவரே மகளிர் மருத்துவமனையின் மேற்பார்வையாளராகவும் நீடித்தார்.

**திவான் பகதூர் பட்டம்**

1942-ஆம் ஆண்டு இம்மேதைக்கு மற்றோர் பெருமையைக் கொண்டு வந்தது. இந்திய அரசு, இவருக்கு திவான் பகதூர் பட்டமளித்துப்பெருமைப் படுத்தியது.

**சென்னைப் பல்கலைக்கழக துணைவேந்தர் பதவி**

1942-ஆம் ஆண்டில்தான் டாக்டர் இலட்சுமண சாமி முதலியார் சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக நியமிக்கப்பட்டார். 20-8-42 அன்று அப்பொறுப்பினை ஏற்ற மருத்துவ ஞாயிறாம் டாக்டர் இலட்சுமணசாமி முதலியார், 31-7-69 வரை அதை நயம்பட நடத்திக் காட்டினார்.

1942 முதல், மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை இப் பெரியவரே, மீண்டும், மீண்டும் நியமிக்கப்பட்டார். ஒன்பது முறை மொத்தம் இருபத்தேழு ஆண்டுகள் — தொடர்ந்து துணைவேந்தராக ஒளி விட்டார்.

அக்காலத்தில் துணைவேந்தரைத் தேர்ந்தெடுக்கும் முறை என்ன தெரியுமா? பல்கலைக்கழகப் பேரவை குறிப்பிட்ட ஒருநாளில் கூடி, வாக்குகளைப் பதிவு செய்து, மூவர் பெயர்களை ஆளுநருக்குப் பரிந்துரைக்கும். அவர்களில் ஒருவரைத் துணைவேந்தராக ஆளுநர் நியமிப்பார்.

ஒவ்வொருவரும் பெற்ற வாக்குகளையும் குறித்து அனுப்ப வேண்டும். எல்லாத் தடவைகளிலும் டாக்டர் இலட்சுமணசாமி யே அதிகப்படியான வாக்குகளைப் பெற்றார். கல்லூரி, பல்கலைக்கழகக் கல்வியாளர்கள், டாக்டர். இலட்சுமணசாமி யிடம் கொண்டிருந்த நம்பிக்கை அசைக்க முடியாதது. அது கண்மூடிப் பின் பற்றும் தனியாள் பற்றால் அல்ல. டாக்டர். இலட்சுமண சுவாமி முதலியாரின் சாதனைகள் அத்தகையன.

**பல்கலைக் கழகத்தில் புதிய துறைகள்**

டாக்டர். இலட்சுமணசாமி முதலியார் பல புதிய துறைகளை உருவாக்கினார். அவை — உளவியல், மானிடவியல், தொல்பொருள் இயல், உயிர்ப்பு வேதியியல், பிற வேதியியல், சட்டம், வணிகஇயல், தொழில் வணிக நிர்வாக இயல், நூலகவியல், கட்டட இயல், சமூக இயல், இந்தி, ருஷ்ஷிய மொழி எனப் பற்பல துறைகள் இவரால் தொடங்கப்பட்டன; ஏன்? வளர்க்கப்பட்டன என்றும் கூறலாம்.

கணித மேதை இராமானுஜம் கணக்கியல் கழகம் தோன்றவும் நிலைக்கவும் வளரவும் டாக்டர் இலட்சு மணசாமி செய்த உதவி பெரிது.

துணைவேந்தர் இட்சுமணசாமி முதலியாரின் நிறைவு அமைப்பு, அடிப்படை மருத்துவ அறிவியல் ஆய்வுக் கழகமாகும். (P.G.I.B.M.S.)





பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு துறைக்கும் தனித்தனி செலவு நிதி ஒதுக்கிடும் முறை அவர்காலத்தில் நுழைந்தது. அதன் சிறப்பு என்ன?

சுறுசுறுப்பின்மையாலோ, தவிர்க்க முடியாத பிற காரணங்களாலோ, ஒரு துறைக்கு ஒதுக்கப்பட்ட பணம் மிஞ்சினால், அதைச் சாமார்த்தியம் உள்ள மற்றொரு துறை தட்டிக் கொண்டு போய் விடாது. சேமிப்பு அத் துறையின் கணக்கிலேயே வைப்பீடாக இருக்கும்.

**இவர்க்கு நிகர் இவரே**

தேர்வுகள் நடத்தும் கழகமாக மட்டும் செயல்பட்ட பல்கலைக்கழகத்தை மேல் பட்டப் படிப்புகளையும், ஆய்வுகளையும் ஊக்குவிக்கும் நிலையமாக்கினார். அவரது ஆட்சியில் கண்டிப்பும் கனிவும் கலந்து இருந்தன. இவரது சாதனை மூலம் புதிய கல்லூரிகள் சிறப்பாக மகளிர் கல்லூரிகள் தோன்றின. கிண்டி அழகப்ப செட்டியார் தொழில் நுட்பக் கல்லூரி (A.C. College of Technology) இவர் பெற்றுத் தந்த குழந்தையாகும். இதன் சீரான வளர்ச்சியில் இவர் காட்டிய தனிக் கவனம் பெரிதாகும். தோல் ஆய்வுப் பிரிவை

(C.L.R.I) ஊக்குவித்து வளர்த்த பெருமை இவருக்கு உண்டு.

**'சர்'பட்டம்**

இலட்சுமணசாமி முதலியாரின் அரிய தொண்டினைப் பாராட்டும் வகையில், ஆந்திரப் பல்கலைக் கழகம், 1943-லேயே சிறப்பு அறிவியல் பேரறிஞர் — டாக்டர் ஆப் சயன்ஸ் (Doctor of Science) பட்டத்தை அளித்துச்சிறப்பித்தது. அடுத்து 1944-இல் லக்னோ பல்கலைக்கழகம் இதே பட்டத்தை வழங்கி மகிழ்ந்தது. 1945-இல் பாட்னா பல்கலைக்கழகம் இவருக்கு இதே சிறப்புப் பட்டத்தை வழங்கியது. இவ்வாண்டில் தான் இவருக்கு 'சர்'பட்டம் அளிக்கப்பட்டது. 15 பல்கலைக்கழகங்கள் இவருக்கு கௌரவ டாக்டர் பட்டம் அளித்துச் சிறப்பித்தது இங்குச் குறிப்பிடத் தக்கதாகும்.

**ஆக்ஸ்போர்டு வழங்கிய பட்டம்**

1948-இல் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம், டி. சி. எல். (D.C.L) டாக்டர் ஆப் சிவில்-லா (Doctor of Civil law) என்ற உயரிய பட்டத்தினைச் சூட்டி, இலட்சுமண சாமி முதலியாருக்குச்சிறப்பு செய்தது. அவ்வாண்டில், இவர் உலக சுகாதார சபை மாநாட்டிற்கு, இந்தியத் தூதுக் குழுவின் துணைத் தலைவராகச் சென்றார்.

**பல்வேறு பட்டங்கள்**

1951-இல் கிளாஸ்கோ பல்கலைக் கழகமும், 1955-இல் அண்ணாமலைப் பல்கலைக் கழகமும் சிறப்புப் பட்டங்கள் வழங்கிச்சிறப்பித்தன. 1957-இல் கல்கத்தா பல்கலைக் கழகம் அத்தகைய சிறப்புப் பட்டத்தை வழங்கியது.

ஹாங்காங், இலண்டன் பல்கலைக்கழகங்கள் எல். எல். டி (L.L.D) சிறப்புப்பட்டம்வழங்கிப்பெருமை சேர்த்தன. மைசூர் பல்கலைக்கழகமும் அப் பெருமையைப் பெற்றது.

**சட்டசபை மேலவையில் ஆற்றிய பங்கு-முதறிஞரின் பாராட்டு**

சென்னை சட்டமன்ற மேலவையின் உறுப்பினராக 1946-இல் இலட்சுமணசாமி முதலியார் நியமிக்கப்பட்டார். பின்னர் விடுதலை பெற்ற இந்தியாவில் மேற்படி அவைக்கு 1952-இல் பட்டதாரிகள் தொகுதியிலிருந்து தொடர்ந்து தேர்ந்தெடுக்கப் பட்டார். அந்த அவையில் எதிர்க்கட்சித் தலைவராக, கட்சி நோக்குக்கு அப்பாற்பட்டு அவர் (1952-1969 வரை) ஆற்றிய அரும்பணியை முதறிஞர் இராசாசி போன்றவர்கள் பாராட்டியுள்ளனர்.





**சிறப்பியல்பு**

பொது விவகாரங்களை, விருப்பு வெறுப்பின்றி அணுகுதல், அவை பற்றித்தெளிந்த கருத்துக்களைத் துணிவோடும் அளவோடும் எடுத்துரைத்தல் போன்ற சிறப்பு இயல்புகள் இவரிடம் ஒளிவிட்டன. பல பக்கங் களிலிருந்தும் பாராட்டுதல்கள் குவிந்ததில் வியப்பில்லை.

**உலக சுகாதார அவையில் (W.H.O.) இவரது பங்கு**

இலட்சுமணசாமி முதலியார், ஏற்கனவே உலகப் புகழ்பெற்ற மேதை. பிள்ளைப்பேறு மருத்துவத்துறையில் உலக வல்லுநர்கள் பதின்மரில் ஒருவராக ஒளி விட்டார். உலக சுகாதார அவையில் இவர் பங்கு சிறப்பாக அமைந்தது. விருப்பு வெறுப்பின்றி எல்லாரோடும் பழகினார். எல்லா நாடுகளின் நன்மதிப்பையும், பெற்றார். அது, இவருக்கு உலகத் தலைமையைக் கொண்டு வந்து சேர்த்தது. ஓர் முறை அந்த அவையின் தலைவராகப்போட்டியின்றித்தேர்ந்தெடுக்கப்பட்டார்.நினைக்க இனிக்கும் செய்தியல்லவா இது?

**சான்றோரிடம் இவர் பெற்ற மதிப்பு**

இந்திய அரசு, பல்கலைக்கழகக்கல்விபற்றி ஆய்ந்து ஆலோசனை கூறும்படி, டாக்டர் இராதாகிருஷ்ணன் தலைமையில், ஓர் குழுவை நியமித்தது. அக்குழுவில் இடம்பெற்ற டாக்டர் இலட்சுமணசாமி முதலியாரின் பட்டறிவு பெரிதும் பயன்பட்டது.

சில ஆண்டுகளுக்குப் பிறகு இந்திய உயர்பள்ளிக் கல்வி நிலையைக் கண்டறிந்து ஆலோசனை கூற, மற்றோர் குழுவை இந்திய அரசு நியமித்தது. அக்குழுவிற்கு சர் இலட்சுமணசாமி முதலியார் தலைவராக நியமிக்கப்பட்டார். பிரதமர் நேருவின் ஆட்சி, காங்கிரசு கட்சியைச் சாராத மூத்த கல்வியாளராகிய டாக்டர் முதலியாரிடம் அத்துணை மதிப்பும் நம்பிக்கையும் வைத்திருந்தது. அக்குழு, நாட்டின் எட்டுத் திக்குகளுக்கும் சென்றது. நிறை குறைகளைக் கண்டது. விரிவான அறிக்கைத் தந்தது.

**பத்மபூஷன், பத்மவிபூஷன் பட்டங்கள்**

டாக்டர் முதலியாரின் ஆற்றலும், தொண்டும் நாடு முழுவதும்பரவின 1954-இல் இந்திய அரசு, டாக்டர் இலட்சுமணசாமி முதலியாருக்கு 'பத்மபூஷன்' விருது வழங்கி மகிழ்ந்தது. அதோடு நிற்கவில்லை, 1963-இல் இவருக்கு 'பத்ம விபூஷன்' விருது வழங்கப்பட்டது.

அறிவியல் மற்றும் தொழில்துறை ஆய்வுக் குழுவிற்குத் தந்தை, டாக்டர் இராமசாமி முதலியார் ஆவார். பல்லாண்டுகள் அதன் ஆட்சிக் குழுவில் உறுப்பினராகச் செயல்பட்டு, அதை வளர்த்த பெருமை டாக்டர் இலட்சுமணசாமி முதலியாரைச் சாரும். அதேபோல், அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்வி ஆட்சிக்குழுவில்

இலட்சுமணசாமி ஆற்றிய தொண்டு சிறந்ததாகும்.

**புகழின் ஒளி**

சிந்தனையாளர்களும், சாதனையாளர்களும் பொதுச் செல்வம் ஆவர். அவர்கள், தாய்நாட்டின் பொதுச் செல்வம். அதே போல், பன்னாடுகளின் செல்வம் ஆவார்கள். இராமசுவாமி முதலியார், அரசியல் உலகின் பொதுச் செல்வமாக விளங்கியது போன்று, இலட்சுமணசுவாமி மருத்துவம் கல்வித்துறைகளின் கருவூலமாக ஒளிவிட்டார்.

டாக்டர் இலட்சுமணசாமி முதலியார், உலக மருத்துவ மாநாடுகளில் பலமுறை பங்குகொண்டார். கல்வி, கலாசாரம், அறிவியல் வளர்ச்சிக்காக அமைக்கப் பட்டுள்ள யுனெஸ்கோவின் (UNESCO) நிர்வாகக் குழுவின் உறுப்பினராக, ஆறு ஆண்டு காலம் சீரிய பணியாற்றியுள்ளார். அதில் ஈராண்டுகாலம், குழுவின் தலைவராக விளங்கி, புகழ்பெற்றார். பல 'காமன் வெல்த்' பல்கலைக் கழக மாநாடுகளில் பங்குகொண் டுள்ளார். தமது புகழையும் இந்தியாவின் புகழையும் நிலைநாட்டியுள்ளார்.

**பல்கலைக் கழக நூற்றாண்டு விழா (1957)**

சென்னைப் பல்கலைக் கழகத்தின் நூற்றாண்டு விழாவை 1957-இல் சிறப்பாகக் கொண்டாடும் பேறு டாக்டர் இலட்சுமணசாமி க்குக் கிட்டியது.

அத்தகைய விழாக்களின் போது, சில அறிஞர் பெருமக்களுக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கி, சிறப்பு செய்வது பல்கலைக்கழக மரபாகும்.

நூற்றாண்டு விழாவிற்கு முன்னரே, வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்கள் சில, டாக்டர் இலட்சுமணசாமி முதலியாருக்கு, கௌரவ டாக்டர் பட்டம் வழங்கி, சிறப்புச் செய்தன. முதலியாரும் பதினைந்து ஆண்டுக் காலம் தொடர்ந்து துணைவேந்தராக—சாதனையும் புகழும் மிக்க துணைவேந்தராக விளங்கிவிட்டார். எனவே வேறு பலருக்கு அறிஞர் பட்டம் வழங்கிய நூற்றாண்டு விழாவின்போதே, சென்னைப் பல்கலைக் கழகம், டாக்டர் இலட்சுமணசாமி க்கும் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கியிருந்தால், சாலப் பொருத்தமாயிருந்திருக்கும். ஏன் அப்படிச் செய்யவில்லை எனில் டாக்டர் இலட்சுமணசாமி அதற்கு இசைவு தரவில்லை. அத்தகைய தன்னல மறுப்பை வெளி உலகம் அறியாது. பல்கலைக்கழக வட்டாரம் அறியும். ஆகவே 1961 வரை நன்றிக்கடன் செலுத்தக் காத்திருந்தோம். அவ்வாண்டில் சிறப்பு டாக்டர் பட்டம் அளித்தோம்.

**முதலியாரின் வினைத்தூய்மை**

இலட்சுமணசாமி முதலியாரிடம் வினைத்திட்பம் விளங்கியதுபோலவே, வினைத் தூய்மையும் ஒளிவிட்டது. ஒருமுறை, பெருநிலையில் உள்ள கல்வியாளர் ஒருவர், இலட்சுமணசாமி யைக் கேட்காமல், ஆட்சிக் குழு உறுப்பினர்களுக்குத் தனித்தனியே கடிதம் ஒன்று எழுதினார்.

"சம்பளத்தைக் கொண்டு பதவியை மதிப்பிடும் உலகில்தான் வாழ்கிறோம். பிறபகுதி இந்தியத் துணைவேந்தர்கள், மாதம் மூவாயிரமும், இலவச பங்களாவும், இலவசக் காரும் பெறுகிறார்கள். சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தருக்கு இலவச காரோ, பங்களாவோ கொடுக்கவில்லை. சம்பளமும் இரண்டாயிரம் மட்டுமே, இது சரியல்ல. இதைக் கவனித்து மற்ற துணைவேந்தர்களுக்கு ஈடாக, மாற்றி அமையுங்கள்" என்பதே அதன் ஆலோசனை.

டாக்டர் இலட்சுமணசாமி முதலியார் இதை ஆட்சிக்குழு ஆலோசிக்கவும் வழி விடவில்லை. ஆணையிடாமலே, சிரித்தபடியே மறுத்து விட்டார். முடிந்தது இதன் விவகாரம். பல்கலைக்கழகச் செயல்பாடும் நிர்வாகமும் அரசியல் அலை மோதல்களால் பாதிக்கப்படாது காத்த பெருமை டாக்டர் இலட்சுமண சுவாமி முதலியாரைச் சேரும்.

1954 - இல் யுனெஸ்கோவின் நிர்வாகக் குழுவின் தலைவராக, இலட்சுமணசாமி முதலியார் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1956 வரை அப்பொறுப்பைத்திறம்பட நடத்தினார்.

**இவர் ஊன்றிய கழகம் (P.G.I.B.M.S.)**

சென்னை தரமணியில் இயங்கி வரும் அடிப்படை மருத்துவ அறிவியல் கழகத்திற்கு (P.G.I.B.M.S.) வித்திட்டவர் டாக்டர் இலட்சுமணசாமி முதலியார். அக்கழகம் காலமெல்லாம் மருத்துவமேதை டாக்டர் இலட்சுமணசாமி முதலியாரின் புகழைப் பரப்பி வரும். சென்னைப் பல்கலைக்கழகத்தின் சேப்பாக்கம் வளாகத்தில் அமைந்துள்ள வானுயர் கட்டிடமும் கலையரங்கும், நூற்றாண்டு விழாவை நினைவுப்படுத்துவதோடு, துணைவேந்தர் இலட்சுமணசாமி முதலியாரின் பெருமையைப் பறைசாற்றி நிற்கும்.

சென்னையில் இயங்கிவரும் இந்தியத் தொழில் பயிற்சி நிறுவனத்தின் (I. I. T.) முதல் ஆட்சிக் குழுத்தலைவராக டாக்டர் இலட்சுமணசாமி முதலியார் ஆற்றிய சீரிய பணி, பல்லாண்டுகளுக்கு நிலைத்து நிற்கும்.

**முதலியாரின் நீர்மைகள்**

பல்கலைக்கழகக்கல்வியில், மருத்துவத் துறையில், தொழில் நுட்பக் கல்வியில் சுடர் விட்ட இலட்சுமணசாமி முதலியாரிடம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் பலவாகும். அயராத உழைப்பு, தளராத மனம், சகாக்களை மதித்தல், ஒழுங்கான, முறைப்படுத்தப்பட்ட அலுவல்கள், காலந் தவறாமை, தூற்றல்களைப் பொறுக்கும் பொறுமை, பரிவு, ஆகிய நீர்மைகள் டாக்டர் முதலியாரை உலக வல்லுநரில் ஒருவராக உயர்த்திற்று.



டாக்டர் முதலியாருக்குப் பின் அப்பெரும் பதவிக்கு வந்த நான், அதற்கு முன்பே இவரோடு, பதிமூன்று ஆண்டுக் காலம் சேர்ந்து செயல்படும் அரிய வாய்ப்பினைப் பெற்றிருந்தேன். பொதுக் கல்வி இயக்குநர், உயர் கல்வி இயக்குநர், முதன்மைக் கல்வி ஆலோசகர் ஆகிய அலுவல்கள் பற்றி, நான், சென்னை அண்ணாமலை, மதுரைப் பல்கலைக் கழகங்களின் ஆட்சிக் குழு, கல்விக்குழு, பேரவைகளில் உறுப்பினராக இருந்தேன்.

அந்நிலையில் டாக்டர் இலட்சுமணசாமி முதலியாரோடு நெருங்கிப் பழகும் அரிய வாய்ப்பினைப் பெற்றேன். ஊற ஊற ஊறுகாய் சுவை மிகும். பழகப் பழக, டாக்டர் முதலியார் பால் நான் கொண்ட மதிப்பு வளர்ந்தபடியே இருந்தது.

மற்றோர் செய்தி, இப் பெரியவரின் திருவுருவப் படத்தினை, மதுரை தியாகராயர் கலைக் கல்லூரியில் திறந்து வைக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அதை எனது நற்பேறாகக் கருதிச் செயல்பட்டேன்.

இருபத்தேழு ஆண்டுகளுக்குப் பிறகு டாக்டர் இலட்சுமணசாமி முதலியார் ஓய்வு பெற்ற போது, நான் அப்பதவிக்கு வரநேர்ந்தது. பதவியை ஏற்கும் முன், அவரைக் கண்டு வாழ்த்தும் அறிவுரையும் பெறச் சென்றேன். உள்ளம் பொங்க வாழ்த்தினார்.

நீண்ட தொண்டுகள் பலபுரிந்து, உலகப் புகழ் பெற்ற டாக்டர் இலட்சுமணசாமி முதலியார் 15-4-74 அன்று தனது 87 ஆவது வயதில் இயற்கை எய்தினார். புகழ் உடம்பு பெற்றார். ஓங்குக டாக்டர் இலட்சுமணசாமி முதலியாரின் புகழ்.

# முத்துவின் முன்னேற்றத்தின் இரகசியம்




முழு விவரங்களுக்கு, அருகிலுள்ள நியூ இந்தியா ஆபீஸ் அல்லது ஏஜெண்டோடு தொடர்பு கொள்ளுங்கள்.

**நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்**

**இன்சூரன்ஸ்—நஷ்ட காலத்தில் நம்பகமான ஆதரவு!**

''தேசியக் கவிஞர் ஆன நாமக்கல் கவிஞரின் தலைமையிலே நான் இன்று சொற்பொழிவாற்றுவதைப் பெருமையாக எண்ணுகிறேன். அதற்குக் காரணம் அவர் தேசியக் கவி மாத்திரம் அன்று. அன்று அவர் தமிழ் இனத்தைப் பாராட்டித் தமிழ் மொழியின் மேன்மையைப் பாடித்தமிழ் இசையை வளர்க்கும் கவி.

''தமிழன் என்றொரு இனம்
தனியே அவற்கொரு குணம் உண்டு
அமிழ்தம் அவனுடைய மொழியாகும்
அன்பே அவனுடைய வழியாகும்''

—என்று பாடினார்.



தமிழன் என்று சொல்லடா
தலை நிமிர்ந்து நில்லடா! என்று
தமிழனைத்தலைநிமிரச் செய்தார்.

—பேரறிஞர் அண்ணா.

நாகர்கோவிலில் 1947ஆம் ஆண்டு காந்தியின் நினைவுத்தூண் கலைவாணர் என். எஸ் கிருஷ்ணன் நிறுவிய போது 'காந்தி மகான்' வில்லுப்பாட்டு, அரங்கேற்றப்பட்டது. அந்நிகழ்ச்சியில் நாமக்கல் கவிஞர் தலைமையில் பேரறிஞர் அண்ணா ஆற்றிய சொற்பொழிவில் குறிப்பிட்டது

# நாடு போற்றிய நாமக்கல் கவிஞர்



''திலகர் விதைத்த விதை பாரதியாக முளைத்தது.
காந்தி தூவிய விதை நாமக்கல் கவிஞராகத் தோன்றியது.

—மூதறிஞர் ராஜாஜி.

''பலே பாண்டியா! பிள்ளை!
நீர் ஒருபுலவன் ஐயமில்லை!
பிள்ளைவாள் '. நீர் நம்மை ஓவியத்தில் தீட்டும்
நாம் உம்மைக் காவியத்தில் தீட்டுவோம்.''

—மகாகவி பாரதி

''நண்பர் நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை அவர்கள் தமிழ்நாட்டின் இதயத்தைக் கவர்ந்தவர்களில் ஒருவர்
தமிழர்கள் கூடிய கூட்டம் எதுவாக இருந்தாலும் அவர்களுடைய பாடல்களைப் பாடினால் உணர்ச்சியும்
ஆவேசமும் இதயத்தைத் தாக்காமல் இருக்காது.
இது நாம் கண்கூடாகப் பார்த்த காரியம்''

—ரசிகமணி டி.கே.சி.



''தமிழ்நாட்டில் நாமக்கல் கவிஞரின் பேர் மூலை முடுக்குகளிலும் பரவியிருக்கிறது. பண்டிதர் பாமரர் யாவரும் அவரைப் பாராட்டுகின்றனர். அவர் பேருள்ள எந்த நூலும் எளிதில் ஏற்றுக் கொள்ளப்படும்''

—தமிழ்ப்பெரியார் திரு.வி.க.

சிந்தையினால் வாக்கதனால் செய்கை தன்னால்
தேசத்திற் கோயாது தொண்டு செய்தோன்;
முந்து மன்பே உருவாக வந்த மூர்த்தி
மூதறிஞன் காந்தி மகான் வழி பின்பற்றி
செந்தமிழ் நாட்டாஸ்தான கவிஞனாகிச்
சீரோங்கு ராமலிங்க நண்பனே நீ
சந்தத்ம் இவ்வுலகில் வாழச் செந்தில்
சண்முகனை வேண்டி நிதம் போற்று வேனே!

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை





# காந்தியக் கவிஞர்


சிலம்புச் செல்வர்
டாக்டர் ம. பொ. சிவஞானம்
தமிழ் வளர்ச்சி உயர்நிலைக் குழுத் தலைவர்


இந்திய தேசிய எழுச்சியானது இருவேறு சகாய்தங்களைக் கொண்டதாகும். ஒன்று, திலகர் சகாய்தம்; இன்னொன்று, காந்தியடிகள் சகாய்தம்; இவற்றோடு ஒவ்வொரு சகாய்தத்திலும் ஒவ்வொரு கவிஞரைத் தந்த பெருமை தமிழ் மொழிக்கு உண்டு.

திலகர் சகாய்தத்திலே, மகாகவி யாரதியாரைத் தந்தது; அதுபோல காந்தியடிகள் சகாய்தத்திலே நாமக்கல் வெ.இராமலிங்கம் யிள்ளையைத் தந்தது. காந்திய சகாய்தம் தோன்றியபொழுது அதை வரவேற்று வாழ்த்திவிட்டுப் யாரதியார் மறைந்தார். அவர் யாடியுள்ள ""மகாத்மா காந்தி யஞ்சகம்"" இதற்குச் சான்றாகும். அந்த மகாகவியால் வரவேற்கப்பட்ட காந்தி சகாய்தத்தை வலுப்படுத்துவதற்கு, அவரது வாரிசாக நின்றுகவிதைகளைப் புனைந்தார் நாமக்கல் வெ. இராமலிங்கம் யிள்ளை.

காந்திய சாகப்தத்திற்கு, பாரதியார் புனைந்து வைத்துப் போன பாடல்கள் போதுமானவையாக இருக்கவில்லை. தேசிய ஒருமைப்பாட்டு உணர்ச்சியை வலுப்படுத்துவதற்கும், தேச விடுதலைக்கான ஆவேசத்தை வளப்படுத்துவதற்கும் பாரதியார் புனைந்தளித்த பாடல்கள் போதுமானவையாக இருந்தன. இதிலே இரண்டு அபிப்பிராயத்திற்கு இடமில்லை. ஆனால், காந்தி சகாய்தத்திலே, விடுதலை இயக்கத்தோடு சேர்ந்து கிளை இயக்கங்கள் யல தோன்றின. அவை கதர் வளர்ச்சி, தீண்டாமை ஒழிப்பு, அகிம்சைப் பிரசாரம் ஆகியவையாகும். இவை அத்தனைக்கும் யாடல்களைப் புனைந்தளிக்க காலதேவன் கவிஞர் இராமலிங்கம் யிள்ளையைத் தந்தான்.

யிள்ளையவர்கள், மக்கள் கதர் அணிய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திப் பல பாடல்களைப் புனைந்தார்.

1934ல் காந்தியடிகள் தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தை விடுதலை இயக்கத்தோடு இணைத்தபோது, அதற்கெனவும் யாடல்கள் புனைந்தளித்தார் நாமக்கல் கவிஞர்.

திலகர் சகாய்தத்திலே தோன்றிய பெருந்தலைவர்களிலே சிலர் காந்தி சகாய்தத்திலே நம்மிடமிருந்து விடைபெற்று அமரர்களாயினர். அவர்களைப் யற்றியெல்லாம் யாடல்கள் புனைந்தளிக்க ஒரு கவிஞர் தேவைப்பட்டார். அந்தத் தேவையை நிறைவு செய்த பெருமையும் நாமக்கல் கவிஞருக்கு உரியதாகும். அவர் திலகர் சகாய்தத்தையும் காந்தி சகாய்தத்தையும் யிணைக்கும் யாலம் போன்றவர்.

சென்னை மாவட்ட காங்கிரஸ் குழுவின் செயலாளர் பொறுப்பை தொடர்ந்து 9 ஆண்டுக்காலம் நான் ஏற்றிருந்தபோது, எனது வேண்டுகோளின் மீது எண்ணற்ற பாடல்களை கவிஞர் இராமலிங்கம் யிள்ளை இயற்றித் தந்தார்.

பாரதியார் புகழ் யரப்பும் யணியைச் சென்னை மாவட்ட காங்கிரஸ் குழுவின் சார்யில் நான் மேற்கொண்டபோது எனது வேண்டுகோளின்யடி, அந்த மகாகவியின் மீது பாடல்கள் புனைந்தளித்தார்: ""யடித்தறியா மிக ஏழைக் கிழவனேனும்"" என்று தொடங்கும் யாடலானது பாரதியின் தரத்தையும் திறத்தையும் அளந்து காட்ட வல்லதாகும்.

அதுபோல, கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனாரின் புகழ்பரப்ப நான் திட்டமிட்டு முயன்றபோது, அந்த மாவீரர் மீதும் யாடல்கள் புனைந்தளித்தார்.

""மடமையதோ, யிறநாட்டார் மயக்கந்தானோ?"" என்ற தொடக்கத்தைக் கொண்ட வ.உ.சி.யற்றிய பாடற் தொகுப்பானது அவரது புகழைப் பரப்ப எனக்குப் பெரிதும் யயன்பட்டது.

மாவீரன் சுபாஷ் சந்திர போஸ், ""காந்தி வழி யழசு"" என்று யழித்துப் பேசியபோது, அதற்குப் யதிலளித்து, பாடல்கள் புனைந்தளித்த நாமக்கல் கவிஞரிடம் நான் அடைக்கலம் புகுந்தேன்.

அப்போதும், ""காந்தி வழி யழசா?"" என்று தாமே வினா எழுப்பி, அதற்கு விடையளிக்கும் வகையிலே யல பாடல்கள் புனைந்தளித்தார். அவற்றுள் ""பெற்றெடுத்த தாய்மிகவும் யழசாய்ப் போனாள்"" என்றும், ""சந்திரனும் சூரியனும் யழசாய்ப் போனார்"" என்றும் தொடங்கும் இருவேறு யாடல்கள் நேதாஜியின் வாதத்தை வெல்வதற்குப் பயன் பட்டன.

கான்பூரில் இந்து-முஸ்லீம் கலவரம் நிகழ்ந்தபோது, மத வெறியர்களால் இஸ்லாமியரின் வீடு ஒன்று கொளுத்தப்பட்டது. அதிலே மேல் மாடியில் சிக்கித் தவித்த இஸ்லாமிய பெண்மணியைக் காக்க முயன்ற கணேஷ



# அரிய கலைஞர்

நாமக்கல் கவிஞர் ஒரு அரிய கலைஞர்;
தலைசிறந்த தேச பக்தர்; தேசத்துக்காக
தியாகம் பல செய்தவர்; சிறைவாசம் புரிந்தவர்
ஒழுக்கத்தில் உயர்ந்தவர்; நண்பர்களின் அன்பைக்
கவர்ந்தவர்; கள்ளங்கபடமற்ற உள்ளத்தினர்;
புகழுக்கும் பொருளுக்கும் ஆசைப்படாதவர்;
ஆடம்பரத்தை அடியோடு வெறுப்பவர்;
'ஆடு ராட்டே! சுழன்றாடு ராட்டே!' என்று பாடி
தமிழ்நாட்டையே சுழன்றாடச் செய்தவர்
அவர் நீடுழி வாழ்க!

—கல்கி

மகாகவி பாரதிக்குப்பின் அவரது வாரிசாக
தேசிய கவிகள் இயற்றி, காந்தியடிகளின் அறப்
போராட்டங்களுக்கும் கவிதைகள் இயற்றி
மக்களைச் சத்தியாக்கிரகப் போராட்டங்களுக்குத்
தயார்
படுத்தினார். சத்தியாக்கிரகப் போராட்டப்
பாடல்களைப்
பாடியதோடு நில்லாமல் சத்யாக்கிரஹத்தில் கலந்து
கொண்டு சிறையும் சென்ற கவிஞர் நாமக்கல்
கவிஞரைப் போல் காந்தியடிகளைப் பற்றியும்
காந்தியத்தைப் பற்றியும் வேறு எந்த
மொழியுறுப்பாரும்
இயற்றவில்லை என்று நினைக்கிறேன்.

[1953-ஆம் ஆண்டு சாகித்ய அகாடமி முதல்
கூட்டத்தில் நாமக்கல் கவிஞரை நேருவுக்கு
அறிமுகப்படுத்தியபோது, அன்றைய குடியரசுத்
தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறியது]

நாமக்கல் கவிஞர் காந்தியடிகளின்
கொள்கைகளுக்கு
ஒருகவிக்குரல், காந்தியத்தை இனிய கவிகளால்
ஒலிக்கும்
தமிழ்ச் சங்கு அவர். பாரதியார் வாக்கினிலே
தேச பக்தி
எனும் அனல் கவிதையாகப் பெருக்கெடுக்கிறது
என்றால்
நாமக்கல் கவிஞரது வாக்கினிலே காந்தியக்
கொள்கைகள்
அலாதியான இசையுருப் பெறுகின்றன.

—பெ. தூரன்

சங்கர வித்யார்த்த என்னும் வழக்கறிஞர் தீக்கிரையானார்.

அந்தத் தியாகியின் சிலை திறப்பு விழாவிலே காந்தியடிகள் நிகழ்த்திய சொற்பொழிவு என் மனத்தைப் பெரிதும் உலுக்கியது. செய்தித்தாள்களில் வெளியான அந்தச் சொற்பொழிவின் துணுக்கைக் கவிஞருக்கு அனுப்பி அதை கவிதையாக்கித் தருமாறு வேண்டினேன். நான் கேட்டது ஒரு கவிதைதான் என்றாலும், நாமக்கல் கவிஞர் பல கவிதைகளைப் புனைந்தார்.

''குத்தீட்டி ஒரு புறத்தில் குத்தவேண்டும்'' என்று தொடங்கும் பாடலைக் கொண்ட கவிதைத் தொகுப்பு, இன்று படித்தாலும், பிறர் படிக்கக் கேட்டாலும் நெஞ்சுருகும்.

மகாகவி பாரதியார் வாழ்ந்த காலத்திலே இந்திய தேசிய காங்கிரசானது நாடு தழுவிய முறையிலே போராட்டம் எதையும் தொடங்கவில்லை. அது தொடங்கியது 1930ல்தான், அதன் பெயர், உப்பு சத்தியாக்கிரகம், அப்போது, ''கத்தியின்றி ரத்தமின்றி யுத்தம் ஒன்று வருகுது, சத்தியத்தின் நித்தியத்தைநம்பும் யாரும்சேருவீர்'' என்று தொடங்கும் செய்யுளைக் கொண்ட பாடல் தொகுப்பைப் புனைந்து உப்பு சத்தியாக்கிரகத்திற்கு உயிரூட்டினார்.

''தமிழனென்று சொல்லடா, தலைநிமிர்ந்து நில்லடா'' என்றும் ''தமிழன் என்றொரு இனம் உண்டு, தனியே அவற கொரு குணம் உண்டு,'' என்றும் பாடல்கள் புனைந்தளித்த பெருமையும் நாமக்கல் கவிஞருக்கு உண்டு.

மகாகவி பாரதியார், குமரி முதல் இமயம் வரை பரந்து கிடக்கும் தாய் நாட்டின் மீதான பற்றையும், குமரிமுதல் வேங்கடம் வரை விரிந்து கிடக்கும் தாய் மாநிலத்திலே வழங்கும் தமிழ் மொழியின் மீதான பற்றையும் பிணைத்து வைத்து விட்டுப் போனார். அந்தப் பிணைப்பை வலுப்படுத்திய பெருமை நாமக்கல் கவிஞருக்கு உண்டு.

தமிழ் நாடக மேடையிலே பெண்வேடம் தாங்கி நடித்துப் பெரும்புகழ் பெற்றவர் திரு கே. எஸ். அனந்தநாராயண ஐயர். அவர் எனது அரிய நண்பர். அவரை மேடையேற்றிவிட்டால் இலட்சக்கணக்கான மக்களின் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும் வகையிலே உணர்ச்சியோடு பாடக்கூடியவர். அவரைக் கொண்டு நாமக்கல் கவிஞரின் பாடல்களை எண்ணற்ற கூட்டங்களில் பாடவைத்து, கவிஞரின் புகழ் பரப்பினேன்.

அந்தக் காந்தியக் கவிஞருக்கு நூறாவது ஆண்டு அக்டோபர் 19ல் பிறக்கிறது. அன்று தொடங்கி ஓராண்டுக் காலம் கவிஞரின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவோமாக! அதற்கான பொறுப்பை பொன்மனச் செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர் அரசு ஏற்றிருப்பதை அறிந்து பெருமகிழ்ச்சியடைகிறேன். வாழ்க, காந்தியக் கவிஞர் இராமலிங்கம் பிள்ளையின் புகழ்!



# என் கணவர்

# சில நினைவுகள்...

—சௌந்திரம் அம்மாள்

**நாட்டு விடுதலைப் போர்க் களம் கண்டவர் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை; அவரது மனைவியார், தம் கணவரை இங்கே நினைவு கூர்கிறார்.**

என் கணவர் அமரர் நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்களின் நூற்றாண்டு விழாவைத் தமிழக அரசு கொண்டாடுவதறிந்து மகிழ்ச்சி கொள்கிறேன். நாமக்கல் கவிஞருடன் சுமார் 48 ஆண்டுகள் வாழ்ந்த நான் அவரது நினைவுகளில் சிலவற்றைத் 'தமிழரசு' வாசகர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

என் கணவரிடத்தில் மாறாத அன்பு கொண்ட 'பொன்மனச் செம்மல்' புரட்சித்தலைவர் தமிழக முதல்வர் திரு எம்.ஜி. இராமச்சந்திரன் தமிழ் மக்களுக்கு, குறிப்பாக ஏழைமக்களுக்கும் வறுமையில் வாழும் கலைஞர்களுக்கும் கவிஞர்களுக்கும் உதவிகள் செய்து தமிழக வரலாற்றில் பொற்காலம் படைத்து வருகிறார். அவரது ஆட்சியில் பொலிவு பெற்று வெளிவரும் 'தமிழரசு' இதழில் எழுதுவதைப் பெருமையாக எண்ணுகிறேன்.

என் கணவருக்கு 1909ஆம் ஆண்டு அவரது 21வது வயதிலே என்னுடைய அக்காள் முத்தம்மாளைத் திருமணம் முடித்து வைத்தனர். என் அக்காளின் திருமணத்துக்குப் பல ஆண்டுகளுக்கு முன்னமேயே என் சித்தப்பாவிற்கும் என் கணவரின் அக்காள் அவர்களுக்கும் கரூரில் மணம் ஆகியிருந்தது. அந்த உறவின் தொடர்பால் நாமக்கல்லில் அப்போது காவல்துறையில் 'ஏட்டாக'ப் பணியாற்றிப் போலீஸ் இன்ஸ்பெக்டராகவும் பதவி உயர்வு பெற்று நாமக்கல்லில் வாழ்ந்து வந்த வெங்கட்ராம பிள்ளையின் மூத்தமகனான ராமலிங்கம் பிள்ளைக்குத் தன் மூன்றாவது மகளான முத்தம்மாளைத் திருமணம் செய்து வைத்தார் என் தந்தை வீரப்பபிள்ளை.

கவிஞரின் தந்தையான வெங்கட்ராமபிள்ளை தன் மகனைத் தனது செல்வாக்கினால் எப்படியாவது போலீஸ் இலாகாவில் இன்ஸ்பெக்டராகச் சேர்க்க முயற்சித்தார். ஆனால் கவிஞருக்கு அந்த இளம் வயதிலேயே யாருக்கும் அடிமையாக வேலை புரிய விருப்பமில்லை; தனக்கு இயற்கையாகவே அமைந்திருந்த ஓவியத்திறமையை வளர்த்து, அதையே தொழிலாகவும் கொண்டார்.

என் கணவருக்கு என் அக்காளைத் திருமணம் முடித்தபின், பலவருடங்கள் அவர்களுக்குக் குழந்தையே இல்லை. இதனை என் கணவர் பெரிதாக எண்ணவில்லை. ஆனால், கவிஞரின் தந்தையோ தன் மகனுக்கு வாரிசு உருவாகவில்லையே என்பதை எண்ணி வருந்தி மறைமுகமாகக் கூறியதை அறிந்த முத்தம்மாள் தன் கணவரிடம் தனது தங்கையான என்னை மணம் செய்து கொள்ளுமாறு வற்புறுத்தினார். கரூருக்கு வந்து தன் தந்தையிடம் என்னை இரண்டாம் தாரமாக கவிஞருக்கு மணம்செய்துகொடுக்கும்படி கூறினார். என் தந்தை ''எனக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை! உன் கணவர் சம்மதித்தால், உடனே நான் திருமணம் செய்விக்கின்றேன்'' என்று கூறினார். பின்னர் நாமக்கல்லிற்கு வந்து தன் கணவரிடம் தனது தங்கையான என்னைத் திருமணம் செய்துகொள்ளும்படி அடிக்கடி வற்புறுத்தினார். ''உங்களுக்குப் பிள்ளை இல்லாத குறையை என் தங்கை தீர்த்து வைப்பாள்! என் தந்தையும் அதற்குச் சம்மதித்து விட்டார்'' எனக் கூறினார். அப்போது



நாமக்கல் கவிஞரின் தந்தையார் வெங்கட்ராமபிள்ளை
(கவிஞரே எடுத்த புகைப்படம் இது)

கவிஞர், ''எனக்குப் பிள்ளை வேண்டும் என்பது பெரிதல்ல, ஒருதாரம் இருக்கையில் மறுதாரம் மணம் புரிய மாட்டேன். இனி இதுபற்றி நீ எதுவும் பேசக்கூடாது'' என்று கண்டிப்புடன் கூறிவிட்டார்.

இப்படி அவர் கூறியதை அறிந்த என் தந்தை எனக்கு வேறு மாப்பிள்ளை பார்க்கும் முயற்சியில் ஈடுபட்டார். ஏற்கனவே பலர் என்னைத் திருமணம் பேச முற்பட்டபோதெல்லாம் கவிஞருக்கு இளையதாரமாக முடிக்கவேண்டும் என்று எண்ணிய என் தந்தை, ''இப்போது அவசரம் இல்லை. பிறகு பார்க்கலாம் என்று கூறி அனுப்பிவிட்டார். ஆனால் கவிஞரே நிச்சயம் 2ஆம் தாரம் மணம் செய்ய மாட்டேன்'' என்று கூறியதை அறிந்த என் தந்தை தனது உறவினரின் மகனான கும்பகோணத்தைச் சேர்ந்த டாக்டர் மாப்பிள்ளைக்கு நிச்சயதார்த்தம் செய்துவிட்டார். இதனை அறிந்த என் அக்காள் முத்தம்மாளின் மனம் மிக்க ஏமாற்றம் அடைந்தது. ஒருநாள் தன் கணவரிடம் ''அத்தான்! நான் இறந்துவிட்டால் இன்னொரு திருமணம் செய்துகொள்வீர்கள் அல்லவா?'' என்று கேட்டார். அவர் ''என்ன! பைத்தியம்போல் பேசுகிறாய்! பேசாமல் படுத்துத் தூங்கு'' என்று கூறிவிட்டார்!

ஆனால் விந்தையிலும் விந்தை! மறுநாள் மாலை திடீரென உடல் நலம்குன்றி முத்தம்மாள் வாந்தி எடுத்தார். மறுகணமே என் அக்காள் முத்தம்மாளின் உயிர் பிரிந்தது. அந்த நேரத்தில் என் கணவர் அருகில் இல்லை. நாமக்கலில் (இன்றும்) உள்ள 'லிட்ரரி ஹால்' என்ற இடத்திற்கு அருகில் 'டென்னிஸ்' விளையாடிக் கொண்டிருந்தார். தன்மனைவி திடீரென இறந்த செய்தியை அறிந்து ஓடிவந்தார். தாங்க முடியாத துயரால் அவரது கண்களில் நீர் தாரைதாரையாகப் பெருகியது.

அவர் புகைப்பட நிபுணராக இருந்தும் அவரும் என் அக்காளும் சேர்ந்து எந்தப் புகைப்படமும் எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால் அவர் என் அக்காள் முத்தம்மாளை மட்டும் படம் எடுத்திருந்தார். என் அக்காளின் இறுதிச்சடங்கு முடிந்தபின் பல உறவினர்கள் 2வது திருமணம்செய்துகொள்ளும்படிக் கவிஞரை வற்புறுத்தியபோது, ''என்மனைவி முத்தம்மாளைப் போன்ற ஒரு உத்தமப்பெண்ணை நான் இனிப் பார்க்க இயலாது. ஆனால் அவள் தனது தங்கை செளந்திரத்தை என்னைத் திருமணம் செய்யச்சொல்லி வற்புறுத்தி வந்தாள். அந்த ஆசையை நிறைவேற்றலாம் என்றால் அதுவும் இயலாது. ஏனெனில் செளந்திரத்துக்கு வேறு மாப்பிள்ளையை நிச்சயித்துவிட்டனர்'' என்றும் கூறினார்.

இதனை அறிந்த கவிஞரின் தந்தை வெங்கட்ராமபிள்ளை உடனே கரூர் சென்று கவிஞர்க்கு 2வது தாரமாக செளந்திரத்தை மணம்செய்விக்க வேண்டும் என்று என் தந்தை வீரப்பபிள்ளையைப் பார்த்துக் கேட்டார்கள். அப்போது என் தந்தை, ''என் வாழ்வில் எப்போதும் சொன்ன சொல்லைக் காப்பாற்றி வருபவன் நான்; அப்படியிருக்க வேறு ஒருவருக்கு நிச்சயித்த செளந்திரத்தை எப்படி 2வது தாரமாகத் திருமணம் செய்து தர இயலும்? செளந்திரத்துக்குத் தங்கை இருந்தாலும் சமாளிக்கலாம். செளந்திரம்தான் கடைசிமகள் என்பதையும் அறிவீர்கள்'' என்று கூறிவிட்டார்.

உடனே கவிஞரின் தந்தை தனது மகளையும் மருமகனையும் அழைத்துக்கொண்டு நேரே கும்பகோணம் சென்று, அவருக்கு உறவினரான டாக்டரின் தந்தையைப் பார்த்து நிலைமையைக் கூறினார். டாக்டரின் தந்தையும் டாக்டரும், ''கவிஞருக்குத் திருமணம் செய்விப்பதென்றால் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை'' என்று கூறிவிட்டனர். அதன்பின் வெங்கட்ராமபிள்ளை கரூர் சென்று என் தந்தையைச் சந்தித்து விவரம் கூறி என்னைக் கவிஞருக்கு இளையதாரமாக 1924ல் திருமணம் செய்வித்தார்கள்.

திருமணம் புரிந்த சில ஆண்டுகளில் எங்களுக்கு மகன் பிறந்தான். வெங்கட்ராமபிள்ளை தனக்குப் பேரன் பிறந்ததை எண்ணி மிக்க மகிழ்ச்சி கொண்டார். அவனுக்கு அமிர்தலிங்கம் என்று பெயர் வைத்தார். ஆனால் என் கணவரோ தனது முதல் மனைவியின் நினைவாக முத்துவேலு என்று பெயர் வைத்து ''முத்து!'' என்றே மகனை அழைத்து வந்தார்.



**கவிஞரின் முதல் மனைவி முத்தம்மாள் (இந்தப் புகைப்படமும் கவிஞரால் எடுக்கப்பட்டதுதான்)**

காரணம் என் அக்காள் முத்தம் மாவை ''முத்து'' என்றே கூப் பிடுவது அவரது வழக்கம்.

எனக்குத் திருமணம் ஆகும் போது அரசியலில் தீவிரமாக ஈடுபட்டு காங்கிரஸ் செயலாள ராகப் பணிபுரிந்து வந்தார். என் கணவர்1930ஆம் ஆண்டு ராஜாஜி யின் ஆணைப்படி உப்பு சத்தி யாக்கிரகத்தின்போது ''கத்தி யின்றி ரத்தமின்றி யுத்தம் ஒன்று வருகுது'' என்ற பாடலை எழுதி அது தமிழகம் எங்கும் முழங்கித் தமிழகத்தில் பாரதிக்குப் பிறகு ஒரு தேசியகவி என அறிமுகம் ஆனார்.

இந்தச் சமயத்தில் ஒரு நிகழ்ச் சியை இங்கே கூறுவது அவசியம் ஆகிறது. ஈரோட்டில் வாழ்ந்த பெரியார் ஈவேராவின் தந்தை தெய்வபக்தி மிகுந்தவர். கம்ப ராமாயணத்தில் மிக ஈடுபாடு உடையவர். கம்பராமாயணத்தை முறையாக திரு கோவிந்தராஜ ஐயங்கார் என்பவரிடம் கற்ற என் கணவர் அடிக்கடி ஈரோடு சென்று பெரியாரின் தந்தையிடம் கம்பராமாயணத்தின் முக்கிய பாடல்களைப் பாடி உரை கூறி மகிழ்வார். அப்போது பெரியார் ஈவேரா, என் கணவர் அவர் களைப் பார்த்து, ''என்ன கவி ஞரே! நாட்டிற்குச் சுதந்திரத்துக் காகப் பாடுபடும் நாம் அதனை விடுத்து ராமாயணத்தைப் படித் துப் பொழுதை வீணாக்கலாமா?'' என்று கேட்பாராம். பெரியார் ஈவேரா அப்போது காங்கிரஸ் காரராக இருந்தாலும் தெய்வ நம்பிக்கை என்பது இல்லாதவர். ஆனால் அதனை வெளியே காட் டாமல் தன்தந்தை மனம் புண் படக்கூடாதென்று எதுவும் பேச மாட்டார். காங்கிரஸ் இயக்கத் தில் ஈடுபட்டு, தீண்டாமை இயக் கத்தில் முக்கிய பங்கேற்று, 'கேர ளா'வில் உள்ள வைக்கம் என் னும் ஊரில் ஹரிஜன மக்கள் கோவிலுக்குள் செல்லப் பெரிய போராட்டம் நடத்தியவர்.

அப்போதுதான் என் கணவர்,

**''தீண்டாமை என்கிற தீய வழக்கம்**
**தீரத்தொலைந்திட நாளாச்சு''**

என்ற பாடலைப் பாடினார்.

அப்போது என் கணவரும் ஈவேரா பெரியாரும் ராஜாஜி யிடத்தில் மிகுந்த பற்றுக் கொண்டு அவரைத் தலைவராகக் கொண்டு பணிபுரிந்து வந்தனர். பின்னர் சில ஆண்டுகளில் ஈவேரா காங்கிரசிலிருந்து வெளி யேறியபோது என் கணவர் ஈரோடு சென்று பெரியார் ஈவேராவைப் பார்த்து மீண்டும் காங்கிரசில் சேர்க்க முயற்சித் தார். அப்போது பெரியார் ஈவேரா''இனி அந்தப் பேச்சுக்கே இடம் இல்லை. சுதந்திரம் நாட் டுக்கு வாங்குமுன் நம் தமிழ்மக்க ளுக்குப் பகுத்தறிவை ஊட்ட வேண்டும். மூடப்பழக்க வழக்கங் களை ஒழிக்க வேண்டும். அதற் காகப் பாடுபடுகிறேன். நீங்களும் காங்கிரசிலிருந்து வெளியேறி என்னுடன் பகுத்தறிவு இயக்கத் துக்குப் பாடுபட வாருங்கள்'' என்று கூறினார்.

என் கணவர், ''தாங்கள் ஆரம் பிக்கும் இயக்கம் எப்போது வேண்டுமானாலும் ஆரம்பிக்க லாம்; ஆனால் மகாத்மா காந்தியைப்போல் ஒரு தலைவரை நம் வாழ்நாளில் பார்க்க முடியாது. காந்தியடிகள் வழியைப் பின்பற்றி என் வாழ் நாள் முழுதும் சுதந்திர இயக்கத் துக்காகப் பாடுபடுவேன்'' என்று கூறி நாமக்கல் திரும்பினார். அந்தச் சமயத்தில்தான்,

**''காந்தியைப் போல் தலைவர் -எந்தக்**
**காலத்தில் கிட்டுமடா?**
**வாய்ந்த தருணமிதை-நீ**
**வழுவி இழப்பாயோ!**
**நல்ல சமயமடா-இதை**
**நழுவ விடுவாயோ?''**

என்ற பாடலைப் பாடினார்.

என்னைத் திருமணம் செய்த பின் கவிஞர், தமது ஓவியத் தொழிலை விட்டுவிட்டார். புகைப்படம் எடுக்கும் தொழிலை யும் தன் தம்பியிடம் ஒப்ப டைத்துவிட்டார். என் கணவரும், அவருடைய நெருங்கிய நண் பர் திரு என். நாகராஜ அய்யங் காரும் ராஜாஜியை அடிக்கடி சந் திப்பர். ராஜாஜி அப்போது நாமக்கல் அருகே புதுப்பாளை யம் என்ற ஊரில் 'காந்தி ஆசிர மம்' ஒன்று அமைத்துக் கதர் நூலைப் பலரை நூற்கச்செய்து, கதர்த்துணி தயாரித்துச் சுற்றுப் புறங்களுக்கு விற்பனைக்கு அனுப்பி வந்தார். அப்போது கதர்ச்சேலையைப் பெண்கள் அணிவதில்லை. காரணம், அந் நாளில் தயாரான கதர்ப்புடவை கள் மிகவும் தடிப்பாக, சால்வை யைப் போன்று இருக்கும். என் கணவர் அந்தக் கதர்ப்புடவை களை எடுத்துக்கொண்டு காந்தி ஜியின் கொள்கைகளைப் பெண் களிடத்தில் விளக்கிக்கூறி, அவற்றை விற்றுவருமாறு எங்க ளுக்கு உத்தரவிட்டார். அதற் காக ஒரு பாடலும் எழுதிக் கொடுத்தார்.

**கதர்த்துணி வாங்கலையோ ஐயா அம்மா!**
**கதர்த்துணி வாங்கலையோ!**
**ஏழைகள் நூற்றது எளியவர் நெய்தது**
**கூழுமில்லாதவர் குறைபல தீர்ப்பது**
**கதர்த்துணி வாங்கலையோ**

என்ற அந்தப் பாடலைப் பாடிக் கொண்டே நானும் திரு நாகராஜ ஐயங்கார் மனைவியும் நாமக் கல் சுதந்திரப்போராட்ட வீரர் திரு மருதப்பிள்ளையின் மனைவி யும் மற்றொரு மாபெரும் தியாகி யான வரதராஜுலு முதலியா ரின் மனைவியும் மற்றும் சில பெண்களும்கதர்ப்புடவைகளைச் சுமந்து கொண்டு, தெருத்தெரு வாகச் சென்று விற்பனை செய் தோம். விவரம் தெரிந்ததுமுதல் காஞ்சிபுரம் பட்டுப்புடவையைத் தவிர மற்றப்புடவையை அணி யாத பல பிரபலமானவர்களின் மனைவிகள் கதர்ப்புடவையை வாங்கியதுமின்றி அதைக் கட்ட முடியாமல்-கட்டி நடக்கமுடியாத படி நடந்து வந்த காட்சிகள் இன்றும் என் நினைவில் உள்ளன.

நாமக்கல்லுக்கு அனுப்பிய அவ்வளவு புடவைகளையும்

விற்றுவிட்டோம். அச்சமயம் ராஜாஜி நாமக்கல் வந்து எங்களைப் பாராட்டி மீண்டும் ஒரு மூட்டை அனுப்பி வைப்பதாகக் கூறினார். அப்போது நான் ராஜாஜியிடம்''நீங்கள் எவ்வளவு அனுப்பினாலும் விற்றுத் தருகிறோம் ''என்று கூறினேன்.

ஆனால் இந்நிகழ்ச்சிக்குப் பின்னர் சில தினங்களிலேயே காந்தியடிகள் கள்ளுக்கடை மறியல் போராட்டத்தைத் துவக்க ஆணையிட்டார்.

**'' குடிப்பதைத் தடுப்பதே**
**கோடிகோடி புண்ணியம்**
**அடிப்பினும் பொறுத்துநாம்**
**அன்புகொண்டு வெல்லுவோம்**
**பாடுபட்ட கூலியைப்**
**பறிக்கும் இந்தக்கள்ளினை**
**வீடுவிட்டு நாடுவிட்டு**
**வெளியிலே துரத்துவோம் ''**

என்ற மறியல் போராட்டப் பாடலை என்கணவர் இயற்றினார். ஏராளமானவர்கள் போராட்டத்தில் கலந்து சிறை சென்றனர்.

இப்படி நாமக்கல்லில் பலரும் கைதான பின்னே என் கணவரும் திரு நாகராஜ ஐயங்காரும் தலைமைதாங்கி 1932 ஆம் ஆண்டு சத்யாக்கிரகப் போராட்டத்தில் இறங்கினர். அவர்கள் இருவரையும் தடியடிப் பிரயோகம் இன்றிக் கைது செய்தனர். காரணம் அன்று சேலத்திலிருந்து, அங்கு வந்திருந்த போலீஸ் உயர் அதிகாரி திரு ராகவச்சாரி என்பவர் என் கணவரையும் திரு நாகராஜ ஐயங்காரையும் நன்கு அறிந்தவர். இருவரையும் கைது செய்யும் போது, ''கவிஞர் அவர்களே! நாகராஜ ஐயங்கார் அவர்களே! உங்களைக் கைது செய்வதற்கு வருந்துகிறேன். ஆனால் என் கடமையைச் செய்கிறேன்'' என்று கூறினார். அதைக்கேட்ட என் கணவர், ''ஆம், நாங்கள் காந்திஜியின் கட்டளைப்படி எங்கள் கடமையைச் செய்யும்போது வெள்ளைக்கார கலெக்டர் கட்டளைப்படி உங்கள் கடமையை நீங்கள் செய்யத்தானே வேண்டும்!'' என்றார். பின்னர் அவர்களைச் சங்ககிரிக் கோர்ட்டிற்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு இருவருக்கும் ஒரு ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இருவரையும் 'பி' வகுப்புக்கைதிகளாக நடத்தவும் உத்தரவிடப்பட்டது.

என் கணவர் சிறைசென்ற போது என் மூத்த மகனுக்கு வயது 6 இருக்கும். இளைய மகனுக்கு வயது 4. வருமானம் இன்றி அப்போது ஓராண்டுக் காலம் குடும்பம் நடத்த என் சகோதரர் ஆறுமுகம்பிள்ளை உதவினார். அவரும் தீவிர காங்கிரஸ்வாதி. ஆனாலும் என் கணவரின் ஆணைப்படி அவர் போராட்டத்தில் கலந்துகொள்ளாமல் வெளியே இருந்து வியாபாரத்தைச் (கரூரில்) செய்துவந்தார்.

1933 ஆம் ஆண்டு என் கணவர் சிறையிலிருந்து விடுதலை ஆனார். அதன் பின்னர் மேலும் தீவிரமாக அரசியலில் ஈடுபடலானார். வேறுயாரிடமும் பணஉதவி கேட்காமல் தன்வீட்டின் மேலும், தன் தோட்டத்தின்மேலும் கடன் வாங்கிச் செலவு செய்துவந்தார்.

அந்தச் சமயம் ராஜாஜியிடம் முன்னுரை வாங்கி, 'தேசியப் பாடல்கள்' என்ற தலைப்பில் சொந்தமாக ஒரு புத்தகம் வெளியிட்டார். அவற்றைப் பெரும்பாலும் எல்லாக் காங்கிரஸ் கூட்டங்களிலும் தொண்டர்கள் விற்றார்கள் என்றாலும் நூல்களில் பெரும்பகுதியைப் பலருக்கும் என்கணவர் இலவசமாகக் கொடுத்ததால் நட்டம் ஏற்பட்டது. பின்னர் புத்தகம் போடுவதை விட்டுவிட்டார்.

1943 ஆம் ஆண்டு செட்டி நாட்டில் பள்ளத்தூர் என்ற ஊரிலிருந்து திரு அ.மு. வீரப்பா என்ற இளைஞர் எங்கள் வீட்டுக்கு வந்தார். என் கணவரின் நூல்களை வெளியிடப்போவதாகவும் அதற்கு அனுமதி தருமாறும் கேட்டார். என் கணவர் அனுமதி தந்தார். உடனே முன்பணமாக ஆயிரத்தை, பத்துநூறு ரூபாய் நோட்டுகளாக என் கணவரிடம் கொடுத்தார். பலநாட்களாக நூறுரூபாய் நோட்டைப் பார்க்க முடியாதிருந்த என் கணவர் மகிழ்ச்சியுடன் அவற்றைப் பெற்றுக் கொண்டார். அவர் பின்னும் தொடர்ந்து பணம் அனுப்பி உதவிவந்தார். அப்படியும் குடும்பச் செலவுக்குத் தான் வந்ததே தவிரக் கடன்களை அடைக்க முடியவில்லை. அப்போது பள்ளத்தூரில் ஆரம்பித்த தமிழ்ப்பண்ணை என்ற பதிப்பகத்தைச் சென்னையில் மாற்றி அதனுடைய பங்காளராக திரு சின்னஅண்ணாமலை சேர்ந்து,

**கவிஞர், மனைவியார் சௌந்திரம் அம்மாள், கடைசி மகன் ராஜா ஆகியோருடன் யோகாசன நிபுணர் வி.என். குமாரசாமி தம்பதியர்.**





துணைவியார் சௌந்திரம் அம்மாளுடன் கவிஞர்.

என் கணவரது நூல்கள் பலவற்றை வெளியிட்டார்.

திரு சின்ன அண்ணாமலையின் முயற்சியினால்தான் என் கணவர் 'சுய சரிதை' எழுதினார். 'என் கதை' என்ற தலைப்பில் திருசின்ன அண்ணாமலை இந்நூலை வெளியிட்டார். என் கணவர் எழுதிய 'அவளும் அவனும்', மலைக்கள்ளன், மாமன்மகள்; தமிழன் இதயம், சங்கொலி, காந்தி அஞ்சலி என்ற பல புத்தகங்களையும் அழகிய முறையில் வெளியிட்டார். அப்போது ஒரு சமயம் சின்ன அண்ணாமலை நாமக்கல் வந்தபோது என்கணவரைப் பார்த்து, ''இப்போது உங்கள் 'ராயல்டி' பணங்களைத் தவறாமல் அனுப்புகிறேனே! உங்கள் கடன்கள் அடைந்ததா?'' என்றார். அப்போது ''வீட்டுச் செலவுக்குத்தான் சரியாகப்போகிறது. கடன்களுக்கான வட்டியைக்கூட இன்னும் கட்டமுடியவில்லை'' என்றார் என் கணவர்.

அன்றே சின்ன அண்ணாமலை தேவகோட்டை சென்று, 1942ஆம் ஆண்டு சுதந்திரப்போராட்டத்தில் தன்னுடன் திருவாடானைச் சிறையில் இருந்த பெரிய பணக்காரர் ஆன தன் நண்பர் திருநாவுக்கரசு என்பவரிடம் என் கணவரின் கஷ்டங்களைக் கூறி, அவரது கடனை அடைக்குமாறு கேட்டுக்கொண்டார். திருநாவுக்கரசு சின்ன அண்ணாமலையுடன் கூடவே நாமக்கல் வந்து, வீட்டின் மேலிருந்த கடன், தோட்டத்தின் மீதிருந்த கடன் இரண்டும் சேர்ந்து சுமார் 5000 ரூபாயைக் கொடுத்து, என் கணவருக்கு இருந்த கடன் தொல்லையை இல்லாமல் செய்தார். ரூ. 5000 என்பது தற்போது பெரிய தொகையாக இல்லாது இருக்கலாம். ஆனால் அப்போது அதன் மதிப்பு, அளவு கடந்தது. அந்த வள்ளல் திருநாவுக்கரசுவை இப்போது எண்ணிப்பார்க்கிறேன்.

1945ஆம்ஆண்டு 'கல்கி' அவர்களின் அரிய முயற்சியால் ரூ.18 ஆயிரம் சேர்த்து திரு. ராஜாஜி தலைமையில் திரு காமராஜ் அவர்களால்என் கணவருக்கு நிதி வழங்கப்பட்டது. அதன்பின் திரு சதானந்த் என்பவரின்முயற்சியால் பெங்களூர்த் தமிழர்கள் நிதி சேர்த்து ரூ. 7000 அளித்துப் பாராட்டினார்கள். 1957ஆம் ஆண்டு யாழ்ப்பாணத் தமிழர்கள் என் கணவரை அழைத்து, வெள்ளியினாலும் தந்தத்தினாலும் ஆன பலவிதமான பரிசுகளைக் கொடுத்து ரூ. 25,000 பணமுடிப்பும் தந்து பாராட்டினார்கள். அப்போது ஈட்டிமரத்தில் இருபுறமும் வெள்ளி வேலைப்பாடுகளுடன் கூடிய ஒரு பெட்டியில் ஓலைச்சுவடிகளிலேயே அச்சிடப்பட்ட பாராட்டு மடலை அளித்தார்கள். நவாலியூர் சோமசுந்தரப்புலவர் என்பவரால் இயற்றப்பெற்று, யாழ்ப்பாணம் என்னும் ஊரில் அளிக்கப்பட்டது அந்தப் பஞ்சகம்.

ஒரு சமயம் 'கல்கி' தன் சொற்பொழிவில், ''இன்று பாரதிக்கு மண்டபம் கட்டுகிறோம். ஆயிரக்கணக்கில் செலவு செய்து விழாக் கொண்டாடுகிறோம். ஆனால் அன்று பாரதி வறுமையினால் வாடிப் பலநாள் பட்டினியாக இருந்தார் என்ற வரலாற்றைப் பார்க்கும்போது இனி அவர் போன்ற எந்தக் கவிஞரையும் வறுமையால் வாடவிடக்கூடாது. அவரைப் பட்டினி போட்ட பாவத்திற்கு மன்னிப்புத் தேட நாமக்கல் கவிஞரை வாழவைக்க வேண்டும்'' என்று கூறினார்.

இப்படி என் கணவருக்கு உதவி செய்தவர்களை எண்ணும்போது நான் அவர்களுக்கெல்லாம் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என் கணவர் வறுமையிலிருந்து மீண்டாலும், உடல் நலக்குறைவால் அவதியுற்றதை அறிந்த சென்னையில் வாழ்ந்த யோகாசன நிபுணர் திரு வி.என். குமாரசாமி தன் வீட்டுக்கு என் கணவரை அழைத்துப் போய் அங்கேயே பல நாட்கள் தங்க வைத்து, பத்தியமான உணவுகளை அளித்து, எல்லாவித யோகாசனங்களையும் கற்றுக்

### வருகைப் பஞ்சகம்

**ஓதக்கடல் சூழ் நிலவுலகத் துயிரென்றுரைக்கு கலைஞானம்**
**ஓங்கும் பரதக் கண்டமெனும் ஒரு தாயீன்ற திருமகனே!**
**போதக்கடலே! தமிழகத்தார் புரிந்த விரிந்த புண்ணியமே!**
**புலமைப் பேராறூ றிவரும் பொதியின் மலையே! பொன் முகிலே!**
**வாதப்புலவர் கவிவிருந்து வாரியருந்து மருந்துவளர்**
**வற்றா மதுரப் பாற்கடலே! மண்ணிலெழுந்த கலைமதியே!**
**மாதுக்கமிலா நாமக்கல் வாழ்வே! வருக வருகவே!**
**வரமார் இராமலிங்கமெனும் வள்ளால் வருக வருகவே!**

**—நவாலியூர் சோமசுந்தரப் புலவர்**

கொடுத்தார். அங்கு இருந்தநாட்களிலேயே அவரது பலகீனம் குறைந்து ஓரளவு குணம் அடைந்தார். திரு குமாரசாமியும் அவரது மனைவியும் காட்டிய அன்பையும் உபசாரங்களையும் வார்த்தைகளால் கூறமுடியாது.



தொடர்ந்து 20 ஆண்டுகள் என் கணவர் ஆசனங்கள் செய்து வந்தார். முக்கியமாக 'சர்வாங்காசனம்', 'சிரசாசனம்' என்ற இரு ஆசனங்களை சுமார் 1மணி நேரம் செய்வார். 1958ல் என் கணவருக்கு வயிற்றில் ஒரு அறுவைச் சிகிச்சை செய்தார்கள். அதன் பின் அவர் ஆசனம் செய்வதை டாக்டரின் யோசனைப்படி நிறுத்திவிட்டார்.

நாடு சுதந்திரம் அடைந்தபின் என் கணவருக்கு பல கௌரவங்கள் கிடைத்தன. 1948ஆம் ஆண்டு திரு குமாரசாமி ராஜா தமிழக முதல்வராக இருந்த போது என் கணவர் அரசவைக் கவிஞராக நியமிக்கப்பட்டார். அப்போது ஆளுநராக இருந்த பவநகர் மகாராஜா அவர்களால் பொன்னாடைபோர்த்தப்பெற்று ''ஆஸ்தான கவிஞர்'' என்று பொறிக்கப்பட்ட தங்கப்பதக்கத்தை அணிவித்தார்கள்.

பின்னர் திரு காமராஜர் முதல்வரானபோது, கவிஞர் அவர்கள் ஆளுநர் அவர்களால் எம்.எல்.சி யாக நியமனம் செய்யப்பட்டார். திரு பக்தவத்சலம் தமிழக முதல்வரானபோது என் கணவரின் எம்எல்சி பதவி மீண்டும் ஒரு பருவத்திற்குத் தரப்பட்டது. 12 ஆண்டுகள் தொடர்ந்து எம்.எல்.சி ஆக இருந்தார் என் கணவர்.

அதன்பின் பேரறிஞர் அண்ணா முதல்வரான போது என் கணவருக்கு எம்.எல்.சி. பதவி தரப்படவில்லை என்றாலும் அவரது வாழ்நாள் முழுதும் உதவித் தொகையாக மாதம் ரு. 250 வழங்குவதற்குப் பேரறிஞர் அண்ணா உத்தரவிட்டார். என் கணவர் மறைந்ததும் உதவித் தொகை நிறுத்தப்பட்டது.

பின்னர் பொன்மனச்செம்மல் புரட்சித் தலைவர் முதல்வரானதும் என் கணவருக்கு அளித்து வந்த உதவித்தொகை ரூ. 250ஐ எனக்குத் தந்து உதவக் கட்டளை இட்டார்.

தமிழக முதல்வரைப்பற்றி எழுதும்போது கோவையில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சி என் நினைவுக்கு வருகிறது. என் கணவரின் கதையான மலைக்கள்ளனை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களைக் கதாநாயகனாக வைத்து ஸ்ரீராமுலு நாயுடு திரைப் படமாக எடுத்தார். அதே சமயம் தெலுங்கிலும் 'அக்கிராமுடு' என்ற பெயரில் திரு என்.டி.ராமராவைக் கதாநாயகனாக வைத்துத் தயாரித்தார். இரண்டு படங்களும் ஒரே சமயத்தில் தயாரிக்கப்பட்டன. இரண்டு படங்களுக்கும் பானுமதி என்பவரே கதாநாயகியாக நடித்தார். அந்தப் படம்முடியும் தறுவாயில் இறுதிக் காட்சி எடுக்கும் சமயம், கோவையில் என் மூத்த மகன் அமிர்தலிங்கம் வீட்டிற்கு நானும் என் கணவரும் சென்று தங்கியிருந்தோம். அப்போது என் இளைய மகன் நா.பாலு, ஸ்ரீராமுலு நாயுடுவிடம் துணை இயக்குநராகப் பணியாற்றி வந்தான். என் கணவர் கோவை வந்துள்ளதை என் மகன் மூலம் அறிந்த ஸ்ரீராமுலு நாயுடு அவர்கள், வீட்டுக்குக் 'கார்' அனுப்பி எங்களை ஸ்டுடியோவிற்கு வரச்செய்து, மலைக்கள்ளன், அக்கிராமுடு இரண்டு படத்திலும் உள்ள சில காட்சிகளைத் திரையிட்டுக் காண்பித்தார். அதைப் பார்த்த பின் ஸ்ரீராமுலு நாயுடு,''படம் எப்படியிருக்கிறது? உங்கள் அபிப்ராயம் என்ன?''என்று என் கணவரிடம் கேட்டார்.

''திரு எம்.ஜி.ஆர் அவர்களும் திரு என்.டி.ஆர். அவர்களும் மிக நல்லமுறையில் நடித்துள்ளார்கள். என் கதையில் எந்த மாற்றமும் செய்யாமல் எடுத்திருக்கிறீர்கள். அந்த இரண்டு கதாநாயகர்களுக்கும் என்னுடைய பாராட்டையும் வாழ்த்துக்களையும் கூறுங்கள்'' என்று கூறினார் என் கணவர். என் கணவர் எழுதிய கதையில், கதாநாயகர்களாக நடித்த அந்த இருவரும் இன்று முதலமைச்சர்களாக இருந்து நாட்டை ஆண்டு வருகிறார்கள் என்பதை எண்ணும்போது நான் பெருமகிழ்ச்சி எய்துகிறேன்.

அந்த இரண்டு படங்களும் தமிழகத்திலும் ஆந்திராவிலும் 100 நாட்களுக்குமேல் ஓடி வசூலில் சாதனை ஏற்படுத்தின அதன்பின் இந்தி, கன்னடம், மலையாளம், சிங்களம் ஆகிய மொழிகளில், அந்த அந்த மொழியைச் சேர்ந்த நடிகர்களையே வைத்து, மொத்தம் 6 மொழிகளில் அந்தப்படத்தை ஸ்ரீராமுலு நாயுடு தயாரித்தார். இதுவரை எந்த ஒரு கதையும் ஆறு மொழிகளில் இந்தியாவில் படமாக்கப்படவில்லை. 'மலைக்கள்ளன்' வெளிவந்தபின் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் திரையரங்கில் படிப்படியாக உயர்ந்து தமிழகத்திலேயே பெரியதொகை வாங்கும் நடிகர் ஆனார். மலைக்கள்ளன் பிராந்திய மொழியின் சிறந்த படமாக மத்திய அரசால் தேர்வு செய்யப்பட்டு வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றது.

புரட்சித் தலைவர் நடித்த அந்தப்படம் வெளியிடப்பட்டு 36 ஆண்டுகள் ஆகியும் இன்றும் திரையிடப்படும் இடங்களில் எல்லாம் அது நல்ல வசூலைத் தருகிறது. புரட்சித் தலைவர் எம.ஜி.ஆர் அவர்கள் என் கணவர்பால் மிக்க பாசமும் பரிவும் காட்டிவந்துள்ளார். என் இளைய மகன் ராஜா அமெரிக்காவுக்குச் செல்லும்போது பெருந்தொகை கொடுத்து உதவினார.

நாமக்கல்லில் ஆண்களுக்கான கலைக்கல்லூரி நிறுவிய பின்னர், பெண்களுக்காக நிறுவிய 'கலைக் கல்லூரிக்கு 'நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பெண்கள் கலைக் கல்லூரி'என்று பெயர் சூட்டுமாறு தமிழக முதல்வர் திரு எம்.ஜி.ஆர் உத்தரவிட்டார். சுமார் ஆறு ஆண்டுகட்கு முன்னர் அந்தப்

பெயர்ப்பலகையைத் திறக்க என்னை அழைத்திருந்தார்கள். அந்த விழாவில் நான் சொற்பொழி வாற்றினேன். நாமக்கல்லில் ஆர்.டி.வோ-ஆக இருந்த பெண்மணி தலைமை வகித்தார். அவர் பெயர் எனக்கு நினைவில்லை. அவர் மிகச்சிறந்த சொற்பொழி வாற்றினார். என் கணவரின் நூல்கள் பலவற்றிலிருந்து அவர் மேற்கோள் காட்டிப் பேசியது என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

1947ஆம் ஆண்டு கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்கள் நாகர்கோவிலில் காந்தியடிகள் நினைவாக ஸ்தூபி ஒன்று நிறுவி அதனை அந்நாளைய முதல்வர் திரு குமாரசாமி ராஜா அவர்களைக்கொண்டு திறக்கச் செய்தார். அன்று மாலை 'காந்தி மகான் வில்லுப்பாட்டு' அரங்கேற்ற நிகழ்ச்சிக்கு என் கணவரைத் தலைமை வகிக்கச் செய்து, அவரது தலைமையில் பேரறிஞர் அண்ணாவைச் சொற்பொழிவு ஆற்றச் செய்தார். பேரறிஞர் அண்ணாவும் என் கணவரும் அன்று தான் நேருக்கு நேர் சந்தித்து அளவளாவினர். ''மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு'' என்று கூறிய பேரறிஞர் அண்ணா என் கணவருக்குச் சூட்டிய புகழ் மாலை என்றும் மறக்க முடியாது.

அன்று மாலை என்.எஸ்.கிருஷ்ணன், என் கணவரின் ஆப்த நண்பரான கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையின் இல்லத்துக்கு அழைத்துச்சென்றார். நானும் என் மூத்த மகனும், டி.ஏ. மதுரமும் உடன் சென்றோம். உடல் நலமின்றி, படுக்கையில் இருந்த கவிமணி, "நாமக்கல் கவிஞர் வந்துள்ளார்" என்று கேள்விப்பட்டதும் உணர்ச்சிவசப்பட்டுஎழுந்து, சுமார் இரண்டு மணி நேரம் உரையாடினார். அவருடைய சகோதரியின் மகன் திரு உமைதாணுவை அழைத்து எலுமிச்சைப் பழரசம் தரச்செய்து உபசரித்து அனுப்பினார்.

சுமார் 85 ஆண்டுகள் நிறைவான வாழ்வு வாழ்ந்த என் கணவர் காய்ச்சல் என்று ஒரு நாள் கூடப் படுத்ததில்லை. 1972 ஆகஸ்ட் 22ஆம் தேதி இரவு 3 மணிக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டு சில நிமிடங்களில் அவர் உயிர் பிரிந்தது. அவர் தன் வாழ்நாளில் கடைசியாக எழுதிய கவிதை 'தமிழரசு' இதழுக்கு எழுதியது. அந்தச்சிறப்புவாய்ந்த 'தமிழரசு' இதழில் என் கணவர் நாமக்கல் கவிஞரைக் குறித்து எனது உணர்வுகளை வெளியிட வாய்ப்புக் கிடைத்ததை எண்ணி எண்ணி மகிழ்கிறேன்.

## நாமக்கல் கவிஞர் வாழ்க்கைக் குறிப்பு...

**19.10.1888** தோற்றம்

**1907**—மெட்ரிகுலேசன் வகுப்பில் தேர்ச்சி.

**1909**—பிஷப் ஹீபர் என்ற கல்லூரியில் படிப்பு இண்டர்மீடியட் வகுப்பில் தேர்ச்சி பெற்றார்.

**1909**—முத்தம்மாளைத் திருமணம் செய்து கொண்டார்.

**1912**—டில்லியில் நடைபெற்ற ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் முடிசூட்டுவிழாவில் கலந்துகொண்டு, மன்னரது ஓவியத்தைக் கொடுத்து அவரிடமிருந்து தங்கப்பதக்கம் பெற்றார்.

**1914**—நாட்டுக்கும்மி என்ற நூறு தேசபக்திப் பாடல்களைப் பாடிக்காட்டி சேலம் ஸ்ரீ விஜயராகவாச்சாரியாரால் 'புலவர்' எனப்பாராட்டப்படல்.

திருச்சி காங்கிரஸ் கமிட்டிச் செயலாளராகப் பணியாற்றினார்.

மகாகவி பாரதியாரைச் சந்தித்துப் பாடல் ஒன்றைப் பாடிக்காட்டிப் புலவன் எனப்பாராட்டப்படல்.

**1920**—கல்கத்தா காங்கிரசுக்குச் சென்று காந்திஜியின் மிதவாதக் கொள்கைகளுக்கு ஆதரவளித்தல்.

**1921—30** நாமக்கல் காங்கிரஸ் வட்டச் செயலாளராகப் பணியாற்றினார்.

**1924**—முதல் மனைவி மரணமும்2-ம் மனைவி சௌந்தரம்மாளுடன் திருமணமும்.

**1930**—'கத்தியின்றி ரத்தமின்றி' என்ற உப்புச் சத்தியாக்கிரக வழிநடைப்பாட்டைப் பாடிப் புகழ் பெறல்.

**1932**—சத்தியாக்கிரகப் போரில் கலந்து கொண்டுசிறைத்தண்டனை அடைதல்

**1937—44** சேலம் ஜில்லாபோர்டு மெம்பராகப் பணியாற்றுதல்.

**1942**—தமிழ்ப்பண்ணை ஏற்படுத்தப்பட்டது. அது நாமக்கல் கவிஞரின் நூல்களை முதன் முதலாக வெளியிட்டது.

**1945**—ஆகஸ்ட் சென்னைக் குடிமக்கள் வரவேற்பும் பணமுடிப்பும் வழங்கியது.

**1945**—ஆகஸ்ட் 10 சென்னை மாநகராட்சி மன்றம் வரவேற்பளித்துப் பணமுடிப்பு வழங்கியது.

**1949**—ஆகஸ்டு 15 சென்னை அரசாங்கத்தால் ஆஸ்தான கவிஞராக நியமனம் பெற்றார்.

**1953**—டில்லி சாகித்திய அகாடமியின் உறுப்பினராக நியமிக்கப் பெற்றார்.

**1954**—அகாடமியின் நிர்வாகக்குழு உறுப்பினராக நியமனம் பெற்றார்.

**1956**—சென்னை அரசாங்கத்தால் எம்.எல்.சி.யாக நியமிக்கப்பெற்றார்.

**1971**—இந்திய அரசாங்கத்தின் 'பத்மபூஷன்' பட்டம் பெற்றார்.

**1972**—ஆகஸ்டு 22 சென்னையில் மாரடைப்பால் மரணம் அடைந்தார்.

வளமான வாழ்வுக்கு

# மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ்

அளிக்கும்

உங்கள் நிலத்தில் அமோக விளைச்சலைப்பெற தழை-மணி-சாம்பல் மூன்று சத்துக்களும் தேவை. மண் பரிசோதனை செய்து, அதன் சிபாரிசுப்படி விஜய் உரமிட்டு விளைச்சலைப் பெருக்குங்கள். மதராஸ் பெர்ட்டிலைசர்ஸில் உள்ள நவீன மண் பரிசோதனை நிலையம் இலவசமாக அளிக்கும் 'துரித மண் பரிசோதனை' சேவையைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். மண் பரிசோதனை செய்ய இயலாவிடில் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள சிபாரிசுப்படி உரமிடுங்கள்.



# விஜய்

## உரங்கள்

# 17-17-17

# 14-28-14

# டி.ஏ.பி

# யூரியா




நெல்
ஏக்கருக்கு/கிலோ

| உயர் விளைச்சல் ரகங்கள் | அடியுரம் | | | மேலுரம் |
|---|---|---|---|---|
| | விஜய் 17-17-17 | விஜய் யூரியா | பொட்டாஷ் | விஜய் யூரியா |
| குறுகிய கால ரகங்கள் | 90 | — | — | 35 |
| மத்திய, நீண்ட கால ரகங்கள் | 120 | — | — | 45 |
| அல்லது | | | | |
| | விஜய் 14-28-14 | விஜய் யூரியா | பொட்டாஷ் | விஜய் யூரியா |
| குறுகிய கால ரகங்கள் | 55 | 15 | 10 | 35 |
| மத்திய, நீண்ட கால ரகங்கள் | 70 | 20 | 15 | 45 |
| அல்லது | | | | |
| | விஜய் டி.ஏ.பி. | விஜய் யூரியா | பொட்டாஷ் | விஜய் யூரியா |
| குறுகிய கால ரகங்கள் | 35 | 20 | 25 | 35 |
| மத்திய, நீண்ட கால ரகங்கள் | 45 | 25 | 35 | 45 |

சமச்சீர் உரமிட

விஜய்



மேலும் விவரங்களுக்கு : வட்டார அலுவலகம்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
10 வில்லியம்ஸ் ரோடு
திருச்சி 620 001

VIJAY

மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்

இந்திய அரசு-பொதுத்துறை நிறுவனம்
மணலி, சென்னை 600068

MFL-1960-R

**நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்கள், எளிய தமிழில் இனிய கவிதை பாடிய பாட்டுப் புலவர் மட்டுமல்லர்; கைதேர்ந்த ஓவியச் செம்மலும் ஆவார்; அதுமட்டுமல்ல சுவையூறும் கட்டுரை தீட்டுவதிலும் திறமை பெற்றவர். 'என் வாழ் நாளில் மறக்க முடியாத நிகழ்ச்சி' என்று நாமக்கல் கவிஞர் அவர்களே 'என் கதை' எனும் தமது வரலாற்று நூலில் குறிப்பிட்டுள்ள அந்த நிகழ்ச்சியை 'தமிழரசு' இதழில் வெளியிடுவதில் பெருமைப் படுகிறோம்.**

# விபரீதம்

**-நாமக்கல் கவிஞர்**

என்னுடைய சித்திரத் திறமையினால் நேர்ந்த ஒரு விசித்திரமான விபரீதத்தை இங்கே குறிப்பிடுவது மிகையாகாது; நான் நாலாவது பாரம் தேறிய சமயத்தில் என் தந்தை அசௌக்கியமடைந்து, ரஜா எடுத்துக்கொண்டு நாமக்கல்லில் தங்கியிருந்தார். அதனால் என்னுடைய ஐந்தாவது பாரப் படிப்பு நாமக்கல்லில் ஆரம்பமாயிற்று. ஆறு மாதத்துக்குள் என் தந்தை சௌக்கியமடைந்து மறுபடியும் வேலை பார்க்கக் கோயமுத்தூருக்குத் திரும்பி விட்டபடியால் ஐந்தாவது பாரத்தின் பிற்பகுதியைக் கோயமுத்தூரில் படித்தேன். ஐந்தாவது பாரத்தில் வெங்கடவரதன் என்ற மிகவும் மனமொத்த சகபாடி ஒருவன் இருந்தான். வெங்கட வரதன் படிப்பில் வெகு கெட்டிக்காரன். எல்லாப் பாடங்களிலும் நூற்றுக்கு எழுபதுக்குக் குறையாமல் மார்க் வாங்குவான். வெகு வேடிக்கையான பேச்சுக்காரன். எங்களுக்குள் இணைபிரியாத நட்பு. பள்ளிக்கூடத்திலும், பந்தாட்டத்திலும், 'பார்' விளையாட்டிலும் எப்போதும் சேர்ந்தே இருப்போம். பிராம்மணன் - பிராம்மணன் அல்லாதவன் என்ற பிணக்குகள் பிறக்காத அந்தக் காலத்தில்கூட அவர்கள் வீட்டில் அப்போது எனக்கிருந்த சுதந்திரத்தை இப்போது நினைத்தாலும் இன்பம் உண்டாகிறது. சமையற்கட்டைத் தவிர, மற்ற இடங்களில் நான் தாராளமாகப் புழங்குவேன். மடியோடிருப்பவர்களைத் தவிர, மற்றவர்களெல்லாம் என்னைத் தொட்டுப் பழகுவார்கள். சாப்பிடும்போது மட்டும் தனியே உட்கார்ந்து சாப்பிடுவேன். என் இலையை வேலைக்காரி எடுத்துவிடுவாள்.

இப்படியாக அந்த வெங்கடவரதனுடைய வீட்டில் நான் மிகவும் தாராளமாகப் பழகிவந்தேன். வெங்கடவரதனுடைய மாமனுக்குப் பதின்மூன்று வயதுள்ள மூத்த மகள் சீதா. அப்பெண்ணின் அழகு கண்ணைப் பறிக்கும். ரோஜாப்பூவின்மேல் லேசாக மஞ்சள் பூசினதுபோன்ற நிறம். கறுத்தகேசம். அகன்ற நெற்றி. பளிங்கு போன்ற கண்கள். வடிவான மூக்கு. மஞ்சள் பூசாத ரோஜா இதழ்களைப் போன்ற உதடுகள். பால் வண்ணமான பல் வரிசை. எந்நேரமும் சிரித்த முகம். பட்டுப் பாவாடை தான் கட்டுவாள். கழுத்தில் ஒரு சங்கிலி. காதில் சிறு வயிரத்தோடுகள். கையில் கனமில்லாத வளையல்கள். இடுப்பில் சிற்சில சமயங்களில் தங்க ஒட்டியாணம் காலில் ஒரு பட்டைக் கொலுசு. வெகு வசீகரமான வடிவம். படம் பிடித்துக்கொள்ள எவரும் விரும்புவார்கள்.

அந்த அழகு என்னுடைய சித்திரக் கண்களைச் சிறைப்படுத்தினதும், நான் அவளைப் படமெழுத ஆசை கொண்டதும் ஆச்சரியமல்ல. வெங்கடவரதனுடன் அவர்கள் வீட்டுக்குப் போன முதல் நாளே எனக்கு அந்த ஆவல் உதித்தது. உடனே, உட்காரச் சொல்லி ஒரு படம் எழுதிப்பார்த்துவிட வேணும் என்று என் கை துடித்தது. ஆனால், ஒழுக்கம் பழகியிருந்த என் அறிவு அந்தப் பதட்டத்தை அடக்கிவிட்டது.

சீதா நன்றாகப் பாடுவாள். பிடில் வாசிக்கப் பழகிக் கொண்டிருந்தாள். அழகாகக் கோலம் போடுவாள். அந்த வீட்டுக்கு நான் போகவரப் பழக்கம் முதிர்ந்துவிட்ட பிறகு ஒரு நாள் நானும் வெங்கடவரதனும் மேல் மாடியில், அவன் வழக்கமாகப் படிக்கிற அறையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம். மத்தியானம் சுமார் பன்னிரண்டு மணி இருக்கும். சீதா என் நண்பனைச் சாப்பிடக் கூப்பிடுவதற்கு அங்கே வந்தாள். அவள் கையில் ஒரு நோட்டுப் புத்தகம் இருந்தது. அது அவள் கோலம் போட்டுப் பழகும் நோட்டு. சிரித்த முகத்துடன், வெகு இனிமையான குரலில், மரியாதையான தொனியில் சீதா, வெங்கடவரதனைச் சாப்பாட்டுக்கு அழைத்துக்கொண்டே மேஜைக்கருகில் வந்து நின்றாள்.

நான் அவளைப் படம் எழுத வேணுமென்ற ஆசையில், என்னுடைய சித்திரக்கண் கொண்டு அவளுடைய அடையாளக் குறிப்புகளைப் பார்த்துக் கொண்டிருக்கும் போது, அவளுடைய கையிலிருந்த கோலப் புத்தகத்தைக் கவனித்தேன். "அதென்ன டிராயிங்கு நோட்டா"? என்று நான் வெங்கடவரதனைக் கேட்டேன். உடனே அவன் "ஆமாம் ராமலிங்கம், நான் உன்னிடம் சொல்லவேணுமென்று நினைத்துக் கொண்டே இருந்தேன்; மறந்துவிட்டேன். நம்ம சீதா ரொம்ப நன்றாகக் கோலம் போடுவாள். அவளுடைய பாட்டு, பிடில் வாசிப்பு-எல்லாம் நீ கேட்

டதில்லையே! அவளுக்கு டிராயிங்கு சொல்லித் தந்தால் நன்றாக வரும். நீ தான் டிராயிங்கில் கெட்டிக்காரனாச்சே! அவளுக்கு கொஞ்சம் சொல்லிக் கொடேன்?'' என்று சொல்லி, அவளுடைய கோலப்புத்தகத்தை என்னிடம் காட்டச் சொன்னான்.

அவளும் அவன் சொன்னதையெல்லாம் சம்மதித்தவள் போல சிரித்த முகத்தோடு கோலப்புத்தகத்தை என்னிடம் கொடுத்தாள். நான் அவள் வரைந்திருந்த கோலங்களைப் பார்த்து மிகவும் மெச்சிப் பேசிவிட்டு, ''சீதாவுக்கு டிராயிங்கு வெகு சீக்கிரம் வரும். நான் சொல்லித் தருகிறேன். அவளையே உட்கார வைத்துப் படம் போட்டுக் காட்டுகிறேன்'' என்று சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் சொன்னேன். ''சரி, அப்படியே செய்'' என்று சொல்லிவிட்டு, வெங்கடவரதன் சாப்பாட்டுக்கு எழுந்தான். நானும் சந்தோஷமாக வீட்டுக்குப் போனேன்.

சீதாகலைகளில் நல்ல தேர்ச்சி பெற வேணும் என்று வெங்கடவரதனுக்கு வெகு ஆவல். சீதாவை வெங்கடவரதனுக்கே விவாகம் செய்து கொடுத்திட வேணுமென்று சீதாவின் தகப்பனாருடைய விருப்பம். ஆனால், அவளுடைய தாயாருக்கு அது சம்மதமில்லையென்று வெங்கடவரதன் என்னிடம் அடிக்கடி சொல்லுவான். சீதாவிடத்தில் வெங்கடவரதன் வெகு பிரியமாக இருப்பான். வெகு செல்லமாகப் பேசுவான். சீதாவும் அவனிடத்தில் கொஞ்சிப் பேசுவாள்.



அடுத்த ஞாயிற்றுக்கிழமை, என்னுடைய எல்லா டிராயிங் நோட்டுகளையும் எடுத்துக்கொண்டு, இரண்டு மூன்று புது டிராயிங் பென்சில்களைச் சீவித் தீட்டி முனைப்படுத்திக்கொண்டு ஐந்தாறு ரப்பர்த் துண்டுகளையும் எடுத்துக்கொண்டு வெங்கடவரதன் வீட்டுக்குச் சீதாவைப் படம் எழுதப் போனேன். வெங்கடவரதன் சீதாவை நன்றாக அலங்காரம் பண்ணிக்கொள்ளச் செய்திருந்தான். நான் போன உடன் வெங்கடவரதன் என்னுடைய சித்திரங்களையெல்லாம் சீதாவுக்குக் காட்டினான். அவள், படங்களையும் அவற்றைவரைந்த என்னையும் மாறி மாறிப் பார்த்துச் சந்தோஷப் பட்டாள். அதன்பின் சீதாவுக்கு என்னிடத்திலிருந்த கொஞ்ச கொஞ்ச சங்கோஜமும் போய்விட்டது. வெகு நாள் பழகினவளைப்போல், மிகுந்த ஆவலுடன் தன்னைப் படம் எழுதுவதற்கு நான் சொன்னபடியெல்லாம் உட்கார்ந்தாள். ஐந்தாறு மாதிரியாக அவளைப் படம் எழுதினேன். அவற்



றைப் பார்த்து அவள் ஆனந்தப் பரவசமடைந்துவிட்டாள். அந்தப் படங்களைக் கொண்டு போய்த் தன்னுடைய தாயாரிடத்திலும், தகப்பனாரிடத்திலும், அத்தையிடத்திலும் காட்டிக் களித்தாள். அவர்களும் என் சித்திரத் திறமையைப் புகழ்ந்தார்கள். அன்றைக்குத்தான் முதன்முதல் என்னை அவர்கள் வீட்டில் சாப்பிடச் சொன்னார்கள்.

மறுநாள், நானே சீதாவுக்கு ஒரு டிராயிங்கு நோட்டு, பென்சில், ரப்பர் முதலியவற்றை வாங்கிக்கொண்டு போய்க் கொடுத்து, டிராயிங் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தேன். வெகு விரைவில் சீதாவின் சித்திரப் பழக்கம் விருத்தியடைந்தது.

அநேகமாகத் தினந்தினம் குறிப்பிட்ட நேரத்தில் நான் போய்ப் பக்கத்திலிருந்து, அவள் சித்திரம் வரைவதைப் பார்த்துத் திருத்துவேன். சீதா சித்திரம் கற்றுக் கொள்ளவென்று வெகுநேரம் என்னுடன் மாடியில் இருப்பாள். பெரும்பாலும் வெங்கடவரதன் எங்களுடன் இருப்பான். யாரும் இல்லாவிட்டாலும் நாங்கள் இரண்டு பேரும மட்டும் டிராயிங் போட்டுக்கொண்டு இருப்பதும் உண்டு. நான் விரும்பாமலும் எனக்குக் காப்பி பலகாரம் முதலியவற்றைக் கொண்டுவந்து சீதா கொடுப்பாள். வெங்கடவரதன் சொல்லாமலும் தானே என்

னைச் சாப்பிடச் சொல்லி அடிக்கடி வற்புறுத்துவாள். மாலை நேரங்களில் அவளுக்குப் பிடில் வாத்தியார் பாடம் சொல்லிக் கொடுக்கும் போதெல்லாம் நானும் அருகிலிருந்து ஆனந்தப்படுவேன். இப்படியாகச் சுமார் ஐந்து மாத காலம் நானும் சீதாவும் பழகிவந்தோம்.



அவளுக்காக நானே ஒரு 'கலர் பாக்ஸ்' - சாயப்பெட்டியைத் தந்து, புஷ்பங்கள், நீர்நிலைகள், ஆகாயம்-இவற்றிற்கு வர்ணம் தீட்டக் கற்றுக்கொடுத்தேன். அதையும் அவள் வெகு சீக்கிரம் கற்றுக்கொண்டாள். இதற்குள் எங்கள் இருவருக்கும் இடையில் ஓர் அபூர்வமான நட்பு வளர்ந்துவிட்டது. அதை வெறும் 'அன்பு' என்று சொன்னால் பத்தாது. வேறு பெயர் சொல்ல நல்ல பதம் கிடைக்கவில்லை. நாங்கள் இருவரும் ஒரு தனி இனம்போல் எண்ண ஆரம்பித்தேன். நான் கூசினாலும் சீதா கொஞ்சங்கூடக் கூச்சப்படாமல் கொஞ்சிப் பேசிக் குற்றமற்ற பிரியம் கொண்டாடினாள். நான் அவர்கள் வீட்டிற்கு ஒரு நாளைக்குப் போகாவிட்டாலும், ''ராமலிங்க மாமா! ஏன் நேற்று வரவில்லை? உங்களுக்காக எடுத்து வைத்திருந்த கேசரியை இன்று காலையில் தான் வேலைக்காரிக்குக் கொடுத்தேன்'' என்று அவளுடைய தாய் தந்தையர் முன்னாலும் கேட்பாள். சீதாவின் மாசற்ற அந்த உருவத்தை இன்றைக்கு நினைத்தாலும் எனக்கு மறுவற்ற மகிழ்ச்சியுண்டாகிறது.

அவளுடைய வடிவழகை வர்ணந்தீட்டி ஒரு சித்திரம் வரைந்து பார்க்க வேண்டுமென்ற ஆசை வந்தது. ஒரு சனிக்கிழமை -பள்ளிக்கூடம் இல்லாததனால் -குறிப்பிட்ட ஆடை ஆபரணங்களை அணிந்துகொள்ளச் சொல்லி, உருவத்தை வரைந்து கொண்டு மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தினம், அதற்கு வர்ணம் தீட்ட வெங்கடவரதனும் நானும் ஏற்பாடு செய்திருந்தோம். சனிக்கிழமை குறிப்பிட்டிருந்தபடி வெங்கடவரதனும் அருகில் இருக்க சீதாவின் வடிவத்தை ஒரு புது மாதிரியாகச் சில புஷ்பச் செடிகளுக்கிடையில் உட்காரச் செய்து வரைந்தேன். மறுநாள் அதற்குச் சாயம் பூசுவதென்று வந்துவிட்டேன். மறுநாள் சுமார் ஒன்பது மணிக்கு அதற்குச் சாயம் தீட்டவென்று போனேன். மேல்மாடி அறையில் வெங்கடவரதன் காணப்படவில்லை. வேலைக்காரன், வெங்கடவரதனும் அவனுடைய தாயாரும் மாமாவும் கொள்ளேகாலத்தில் ஒரு கலியாணத்துக்குத் திடீரென்று புறப்பட்டுப் போயிருப்பதாகச் சொன்னான். வேலைக்காரனையே கொஞ்சம் தண்ணீர் கொண்டுவரச் சொல்லி விட்டுக் கதவருகில் மேஜையை இழுத்துப் போட்டு, வாசல் வெளிச்சம் படத்தின்மேல் படுகின்றபடி உட்கார்ந்துகொண்டு வர்ணம் தீட்ட ஆரம்பித்தேன்.

நான் வெகு கவனத்துடன் வர்ணம் கொடுத்துக்கொண்டிருந்தேன். எனக்குப் பின்னாலே காலடி ஓசை கேட்டது. அது சீதா வந்த சத்தம். நான் திரும்பிப் பார்த்தேன். சீதா என் நாற்காலிக்குப் பின்னால் பதுங்கி உட்கார்ந்துகொண்டாள். அவள் என்னோடு விளையாட்டுச் செய்ய அப்படி உட்கார்ந்துகொண்டாளென்பதை அறிந்த நான், அவளைக் கண்டுகொள்ளாதவனைப் போலவே படத்துக்கு வர்ணம் பூசிக்கொண்டிருந்தேன். சுமார் பத்து நிமிஷம் சந்தடி செய்யாமல் சீதா பின்னால் நின்றுகொண்டு நான் வர்ணம் பூசுவதைப் பார்த்துக்கொண்டேயிருந்தாள். அவள் வெகு சமீபத்துல் நின்று பார்த்துக் கொண்டிருக்கிறாள் என்பதை என் காதுக்கு அருகில் கேட்ட அவளுடைய மூச்சினால் அறிந்தேன். அவளைப் பார்க்க வேணுமென்று என்னுள் எழுந்த ஆசையையும் அடககிக்கொண்டு நான் திரும்பாமல் என்னுடைய வேலையில் இருந்தேன். அவள் வந்ததை நான் அறிந்துகொள்ளவேயில்லை என்று எண்ணியோ என்னவோ சட்டென்று சீதா தன்னுடைய இரண்டு கைகளாலும் என் கண்களைப் பொத்தினாள். நான் என் கையிலிருந்த சாயக்கோலை அப்படியே போட்டுவிட்டு என்னுடைய கைகளாலும் அவளுடைய இரண்டு கைகளையும் வளையல்களோடு சேர்த்துப் பிடித்துக்கொண்டு சிறிது நேரம் அப்படியே இருந்தேன். நறுக்கென்று சீதா கைகளை இழுத்துக்கொண்டாள். நான் கண்களைத் திறந்தேன். கதவுக்கு முன்னால், அங்கே உலர்ந்து கொண்டிருந்த மடிப் புடவையை எடுக்கவந்த சீதாவின் தாயார், ஈரப்புடவையோடு நின்றுகொண்டு என்னை முழித்துப் பார்த்தார். சீதா பின்னால் நின்றுகொண்டு சிரித்தாள்.

''சீதா!'' என்று மிரட்டிவிட்டு, அவளுடைய தாயார் மடிப் புடவையை எடுத்துக்கொண்டு வேகமாகக் கீழே போய்விட்டார். நான் சீதாவைப் பார்த்து, ''ஏன் அப்படிச் செய்தாய்? அம்மா கோபத்தோடு போயிருக்கிறார்கள். நீ போய்ச் சமாதானம் சொல்லு'' என்றேன். ''அம்மாள் ஒன்றும் சொல்லமாட்டாள்'' என்று சீதா பின்னும் சிரித்துக்கொண்டு அங்கேயே நின்றுகொண்டிருந்தாள்.

கீழே போன சீதாவின் தாயார் புடைவையை மாற்றிக்கொண்டு வெகு வேகமாக நாங்கள் இருந்த இடத்துக்கு வந்தார். வர்ணந் தீட்டியிருந்த என்னுடைய டிராயிங்கு நோட்டைத் தூக்கி வெளியில் வீசியெறிந்தார். வர்ணங்களையும் கோல்களையும் வாரி கீழே போட்டார். ''டேய்! ராமலிங்கம்! போ வெளியே. இனிமேல் இந்த வீட்டுப் பக்கம் வந்தால் நான் வெகு பொல்லாதவளாயிருப்பேன். போ, நிக்காதே'' என்றார். சீதாவுக்குப் பொறுக்கவில்லை. ஓவென்று அழுதுவிட்டாள். அழுதுகொண்டே, ''ஏனம்மா... யாதுக்கு அவனெ நாந்தா'' என்று ஏதோ கன்னட பாஷையில் புலம்பிக்கொண்டு தாயாரிடம் எனக்காகப் பரிந்து பேசினாள். சீதாவின் தாயார், அவள் புலம்புவதற்கு ஒன்றும் பதில் பேசாமல், என்னை உருட்டிப் பார்த்துக்கொண்டே வெளியில் போகச் சொல்லிக் கையினால் கதவைக் காட்டினார். நான் அதற்கு மேலும் அங்கே எப்படி நிற்பது? பதிலே பேசாமல், டிராயிங்கு நோட்டு, சாயங்கள் முதலியவற்றையுங்கூட எடுக்காமல் வீட்டுக்குப் போய்விட்டேன்.

சீதாவை இனிப் பார்க்க முடியாதே என்ற வருத்தமும், ஒரு குற்றமும் செய்யாத என்னை அந்த அம்மாள் அவ்வளவு அவமானப்படுத்திவிட்டாளே என்ற கவலையும் என்னை மிகவும் கலக்கிவிட்டன. அத்துடன் அருமை நண்பன் வெங்கடவரதன் என்ன நினைப்பானோ என்ற வருத்தமும் வாட்டியது. நாலு நாள் நல்ல தூக்கமில்லை. பள்ளிக்கூடத்திலும் படிப்பிலே மனம் படியவில்லை. கொள்ளேகாலத்துக்குப் போயிருந்த வெங்கடவரதன் நாலு நாளைக்குப் பிறகு என் வீட்டுக்கு வந்தான். வந்தவுடன் ''என்னடா ராமலிங்கம்! மாமி என்னமோ பிராதுசொல்லுகிறாளே, அது என்ன?'' என்றான். நான் ஒன்றையும் ஒளிக்காமல் நடந்ததைச் சொன்னேன்.

அதைக் கேட்டு அவன் ''சீதாவும் நீ சொல்லுகிறபடி தான்

சொன்னாள். அந்தச் சிடுமூஞ்சி மாமி அப்படித்தான். நானும் சீதாவும் சிரித்துவிளையாட்டுப் பேச்சுகள் பேசுவதுகூட அந்த மாமிக்குப் பிடிக்கிறதில்லை. நீ அதற்காக வருத்தப்படாதே. இன்னும் நாலைந்து மாதத்துக்குள் எனக்கும் சீதாவுக்கும் கல்யாணமாகப் போகிறது. அப்புறம் அந்த மாமியின் அதிகாரம் எங்கே?'' என்றான். அதைக் கேட்டு நான் மிகவும் ஆறுதலடைந்தேன். என்றாலும், வெங்கடவரதன் வீட்டுக்கு நான் போவது முடியாத காரியமாகிவிட்டது.

ஒரு மாதத்துக்குப் பிறகு ஒரு நாள் இரவு எட்டு மணி இருக்கும். நான் பாடம் படிக்க விளக்கண்டை உட்கார்ந்தேன். நான் படிக்கும் இடம் வீதிப்புறத்தில் முன் காடிகானாவாக இருந்த ஒரு துண்டான அறை. வெங்கடவரதன் சிரித்துக்கொண்டே உள்ளே வந்தான். அந்நேரத்தில் அவன் வருவது வழக்கமில்லை. நான் அவனை வரவேற்க எழுந்தேன். அதற்குள் அவனுக்குப் பின்னால் வந்த சீதாவும் நின்று, என்னைப் பார்த்துச் சிரித்தாள். சீதாவைக் கண்டு மெய்மறந்த சந்தோஷத்தினால் வரவேற்கவும் வாய் வராமல் திகைத்து நின்றேன். நான் பேச நினைக்குமுன் சீதா ''ராமலிங்க மாமா! அம்மா அப்படியெல்லாம் சொல்லிவிட்டதுக்காகக் கோபிக்க வேண்டாம். உன்னைப் பார்க்காமல் எனக்கு எப்படியோ இருக்கு'' என்று சொல்லிக்கொணடே அருகில் வந்து, தன் கையில் வைத்திருந்த ஒரு பெரிய பட்சணப்பொட்டலத்தை என்னிடம் கொடுத்தாள். நான் அதை வாங்கிக் கொண்டு, ''இங்கே வந்ததை அம்மாள் அறிந்தால் இன்னும் கோபித்துக் கொள்வார்களே! அவருக்குத் தெரியாமல் எப்படி சீதா வந்தாய்?'' என்று கேட்டேன். அதற்கு வெங்கடவரதன் பதில் சொன்னான். சென்ற பத்து நாள்களாகத் தினந்தினம் என்னைப் பார்க்க வேணுமென்று சீதா துடித்ததாகவும், அதற்காக இரண்டு பேரும் சேர்ந்து ஒரு யுக்தி செய்ததாகவும் சொன்னான். அரைமணிநேரம் சீதா என்னுடன் வழக்கம்போல் சிரித்து விளையாடிப் பேசிக் கொணடிருந்தாள். என்னுடைய சாயப்பெட்டி, சாயக்கோல்கள் முதலியவற்றை எல்லாம் பத்திரமாக எடுத்து வைத்திருப்பதாகவும், அடிக்கடி அவற்றை என்னைப் பார்ப்பது போலப் பார்த்து வருவதாகவும் சீதா சொல்லிச் சிரித்தாள். நான் உடனே, அவையெல்லாம் என்னுடைய ஞாபகார்த்தமாக அவளிடத்திலேயே இருக்கட்டும் என்றேன். மறுபடியும் ஒரு நாள் வருவதாகப் போனார்கள். ஆனால், மறுபடியும் வரமுடியவில்லை... மூன்று மாதத்துக்குப் பிறகு சீதாவுக்குக் கலியாணம் நடந்தது. ஆனால், விவாகம் வெங்கடவரதனுக்கும் அவளுக்கும் அல்ல. சீதாவை வெங்கடவரதனுக்கே கொடுக்க வேணுமென்று அவளுடைய தகப்பனார் நிச்சயித்து, அப்படியே பகிரங்கமாகச் சொல்லிக் கொண்டும் இருந்தார். ஆனால், சீதாவின் தாயாருக்கு ஆதியிலிருந்தே அது சம்மதமில்லாமல் இருந்து வந்தது. கடைசியில் சீதாவின் தாயாருடைய பிடிவாதமே வெற்றி பெற்றது. சீதாவைக் கொள்ளேகாலத்தில் ஒரு மிகப் பெரிய பணக்காரனுக்குக் கொடுத்து விட்டார்கள். சீதா கலியாணம் நடந்த ஐந்து நாளும் அழுது கொண்டே இருந்ததாக என் நண்பன் வெங்கடவரதனே சொன்னான். அந்த அழுகைக்குக் காரணம், அவள் மிகவும் பிரியம் வைத்திருந்த வெங்கடவரதனை விட்டு வேறொருவருக்கு வாழ்க்கைப்படச் செய்ததுதான் என்று எல்லாரும் பேசிக் கொண்டார்கள். அந்த விவாகத்துக்குப் பிறகு வெங்கடவரதனும் அவன் தாயார் முதலானவர்களும் வேறு வீட்டுக்குக் குடி போய் விட்டார்கள். நானும் வெங்கடவரதனும் எப்போதும் போலவே இருந்து வந்தோம்.

சுமார் பதினைந்து வருஷங்களுக்குப் பிறகு ஒரு நாள் இரவு ஒன்பது மணிக்கு, நான் திருச்சினாப்பள்ளி ரயில்வே ஜங்ஷனில் கரூர் போவதற்கு வண்டிக்காகக் காத்திருந்தேன். பிளாட்பாரத்தில் உலாவிக் கொண்டிருந்தேன். மூன்று வயதுக் குழந்தை ஒன்று விளையாடிக்கொண்டே எனக்குக் குறுக்கே ஓடிவந்து என்மேல் மோதிற்று. சிறிது தூரத்தில் மூட்டை முடிச்சுகளுடன உட்கார்ந்திருந்த அக்குழந்தையின் தாய் குழந்தையைக் கூப்பிட்டாள். நான் அந்தக் குழந்தையை எடுத்து அந்த அம்மாளிடம் கொண்டுபோய் விட்டேன். அந்த அம்மாள் மொட்டையடித்து முக்காடிட்டுக்கொண்டிருந்த ஒரு பிராம்மணக் கைம்பெண். அவள் அருகில் இன்னும் இரண்டு பெரிய குழந்தைகளும ஒரு கிழவரும் ஒரு கிழவியும் உட்கார்ந்திருந்தார்கள். நான் குழந்தையை மட்டும் அங்கே விட்டுவிட்டு மறுபடியும் உலாவிக்கொண்டிருந்தேன். ஒரு தரம் அந்த அம்மாளிருந்த இடத்துக்கருகில் நான் வந்தபோது, அவள் எழுந்து என்னருகில் வந்து என்னைக் கூர்ந்து பார்த்தாள். நானும் முன் போலவே பாராமுகமாகவே அவளைக் கடந்து போய் விட்டேன். கொஞ்ச தூரம் போன பின், பின்னால் யாரோ என்னைக் கூப்பிட்டது கேட்டது. திரும்பிப் பார்த்தேன். அந்த அம்மாள் என்னைக் கைதட்டிஅழைத்தாள். நான் போனேன். அந்த அம்மாள் எனக்கு வெகு சமீபத்தில் வந்து, என் முகத்தைஉற்றுப் பார்த்துவிட்டு ''என்னைத் தெரியவில்லையா?'' என்றாள். அந்நாளில் பிளாட்பார விளக்குகள் இப்போது போலப் பிரகாசமாக இரா. நான், ''யார்? தெரியவில்லையே'' என்று கவனித்துப் பார்த்தேன். அந்த அம்மாள் தன்னுடைய முக்காட்டை நீக்கி, முகத்தை நன்றாகக் காட்டி, ''ராமலிங்க மாமா, என்னைத் தெரியவில்லையா?'' என்று விசனத்தோடு சிரித்தாள். அந்தச் சிரிப்பில், என்னுடைய மனத்தில் மங்காதிருந்த சீதா விளங்கினாள். சீதாவின் அமங்கல உருவத்தைக் கண்டு எனக்கு அழுகை வந்து விட்டது. இருவரும் அங்கேயே உட்கார்ந்து, வண்டி வருகிற வரைக்கும் பேசினோம்.



இரண்டு வருஷத்துக்கு முன்னால் தன் கணவன் இறந்து போனதாகவும், தனக்கு மூன்று குழந்தைகள் என்றும், மாமனார் மாமியாருடன் ராமேஸ்வரம் போய்விட்டு ஊருக்குத் திரும்பிப் போவதாகவும் சொன்னாள். வெங்கடவரதனைப்பற்றி விசாரித்தேன். அவள் உடனே கலகலவென்று கண்ணீர்விட்டு அழுது விட்டாள். அழுகையை அடக்கிக் கொண்டு, 'வெங்கடவரதனும் ''ப்ளேகில்'' இறந்துவிட்டதாகச் சொன்னாள். என் இருதயம் வெடித்துவிடும் போன்ற விசனம் வந்தது. வெகு நேரம் உணர்வு கலங்கி உட்கார்ந்திருந்தேன். பிறகு, என்னுடைய சேம லாபங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம்.

ஈரோடு போகும் வண்டி பிளாட்பாரத்துக்கு வந்தது. சீதாவுக்கு ஒத்தாசை செய்து குழந்தைகளையும் மூட்டைமுடிச்சுகளையும் வண்டியில் ஏற்றி, அதே அறையில் நானும் ஏறிக் கொண்டு நெடுகப் பேசிக் கொண்டே வந்தோம். கரூரில் நான் இறங்க வேண்டியவன் என்று தெரிந்து, கரூருக்கு இரண்டு ஸ்டேஷன்கள் இருக்கும் போதே சீதா, தன்னுடன் கொள்ளேகாலம் வரையிலும் வந்து, தன்



வீட்டில் ஒரு நாளாவது தங்கியிருந்து வரவேணுமென்று என்னைக் கட்டாயபபடுத்தி, கோயமுத்தூருக்கு டிக்கட் வாங்குவதற்கு அவளே பணம் கொடுத்தாள். நான் கரூரில் இறங்க வேண்டிய எல்லா அலுவல்களையும் மறந்துவிட்டுச் சீதாவுடன் கொள்ளேகாலம் போய், மூன்று நாள் அவளுடைய செல்வம் நிறைந்த வீட்டில் விசேஷ விருந்தாளியாக இருந்தேன். நான் அங்கிருந்து திரும்பிவரும்போது, சீதா எனக்கு வெகுவிலையுயர்ந்த கொள்ளேகாலத்துப் பட்டுத் துப்பட்டாக்களையும் மடிவேஷ்டிகளையும் ஒரு ஜரிகை இழைத்த சால்வையையும் மற்றும் பல பொருள்களையும் தந்து, அடிக்கடி அங்கே வந்து போகவேணுமென்றுவழியனுப்பினாள். அதன் பிறகு அரசியல் போராட்டங்களில் அதிகமாக ஈடுபட்டுவிட்ட நான் கொள்ளேகாலம் போக ஆசையிருந்தும் போக முடியவில்லை. 1927-இல் சீதாவும் செத்துப் போனதாக அவளுடைய பந்து ஒருவர் கோயமுத்தூரில் எனக்குச் சொன்னார்.

என்னுடைய வாழ்க்கையில் நடந்த எல்லா நிகழ்ச்சிகளிலும் இன்றைக்கும் கொஞ்சங்கூட மங்காமல் மறக்க முடியாமல் என் மனத்தில் பச்சைப் பசேலென்று இருந்து வருவன சீதாவின் மாசற்ற அன்பும் வெங்கடவரதனின் கெம்பீரமான நட்புந்தான். நான் சித்திரக்கலையில் மிகவும் தேர்ச்சியடைந்த பிற்காலத்தில், பல ஐரோப்பிய சித்திர வித்துவான்களுடைய படங்களையும் அவர்களுடைய முறைகளையும் பல ஆங்கில அமெரிக்கப் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் ஆவலோடு தேடிப் படிப்பதுண்டு. அவற்றுள் ஒரு ஆங்கிலச் சித்திரக்காரர் வரைந்த ''ஆர்ட் வின்ஸ் ஹார்ட்'' என்ற ஓர் அழகான படத்தைப் பார்த்தேன். தமிழில் அதைச் சொன்னால் ''கலைத்திறம் இதயத்தைக் கவர்கிறது'' என்று சொல்லலாம். அந்தப் படத்தில், ஒரு சித்திரக்காரன் ஒரு பீங்கான் கூஜாவின் மேல் வர்ணம் தீட்டிப் படம் எழுதிக்கொண்டிருக்கிறான். அதை வெகு ஆசையோடு பார்த்துக் கொண்டு ஒரு யுவதி மெய்ம் மறந்து நின்றாள். அந்தப் படத்தைப் பார்த்த உடன் சீதா என் கண்ணைப் பொத்திய நினைவு வந்தது. என் மனத்தில் இன்னும் இருக்கிறது. பாரதியார் அழகுத் தெய்வத்தைப் பாடிக்களித்த உணர்ச்சியும், 'அன்பிற்கு முண்டோ அடைக்குந்தாழ்' என்று வள்ளுவர் சொன்னதும் வெறும் கற்பனைகள் அல்லவென்றும் அடிக்கடி நினைப்பூட்டி சீதாவும் வெங்கடவரதனும் என்னுடைய நினைவில் நிலவுகின்றார்கள்.





## ராஜாஜி நினைவு நூலகம் திறப்பு விழா

சென்னை கிண்டியில் ரூ. 3 லட்சம் செலவில் ராஜாஜி நினைவு நூலகம் ஒன்று புதிதாகக் கட்டப்பட்டுள்ளது. இது ராஜாஜி நினைவாலயத்துக்குப் பின்புறம் அமைந்துள்ளது.

இந்த நூலகத்தில், மூதறிஞர் ராஜாஜி அவர்கள் எழுதிய நூல்கள் வைக்கப்பட்டுள்ளன. நூலகத்தில், ராஜாஜி பல்வேறு தலைவர்களுடன் உள்ள புகைப் படங்களும் இடம் பெற்றிருக்கின்றன.

இதன் திறப்பு விழா 2.10.87 அன்று நடந்தது. தமிழ் வளர்ச்சி உயர் நிலைக்குழுத் தலைவர் டாக்டர் ம.பொ. சிவஞானம், மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், மாண்புமிகு சுற்றுலா மற்றும் மின்துறை அமைச்சர் திரு வி. வி. சுவாமிநாதன் ஆகியோர் முன்னிலையில், மேதகு ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்கள் நூலகத்தைத் திறந்து வைத்தார்.

மூதறிஞர் ராஜாஜி ஆற்றிய முக்கிய சொற்பொழிவுகளைக் கேசட்டில் ஒலிப்பதிவு செய்து நூலகத்தில் ஒலிபரப்பும் ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது.

## சிதம்பரனார் மாவட்ட முதல் ஆண்டு நிறைவு விழாவிற்கு எங்கள் மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்



வேல்முருகன் ஆயில் மில்ஸ், கோவில்பட்டி

வேலாயுதம் பிராண்டு ஆயில் மில்ஸ், கோவில்பட்டி

அம்பிகா ஆயில் மில்ஸ், கோவில்பட்டி

ஜெயலட்சுமி டிரேடிங் கம்பெனி, கோவில்பட்டி

தி. சு. பாண்டி, நிலக்கடலை வியாபாரம், கோவில்பட்டி

செல்லையா செட்டியார், பெட்ரோல் பங்கு, கோவில்பட்டி

சிதம்பரனார் மாவட்டம்

ஓராண்டு நிறைவு விழாவிற்கு

எங்கள் நல்வாழ்த்துகள்



பால்ராஜ் நாடார், அரிசி சில்லரை வியாபாரம், ஸ்ரீவைகுண்டம்

சண்முகவேல் நாடார், அரிசி சில்லரை வியாபாரம், ஸ்ரீவைகுண்டம்

எஸ். வி. ஆறுமுக நயினார், அரிசி சில்லரை வியாபாரம், முக்காணி

ஆர். ஆறுமுக முதலியார், அரிசி சில்லரை வியாபாரம், முக்காணி

வி. ஏ. சேட்,லெட்சுமணன்,நெல் அரிசி மொத்த வியாபாரம், ஏரல்

பி.கே. ஆதிநாராயண நாடார் அண்டு சன்ஸ்.
ஸ்ரீ முருகானந்த விலாஸ் அரிசி ஆலை, ஏரல்

எஸ். வேல் நாடார், சிவகாமி அரிசி ஆலை, பழைய காயல்

எம். விவேகானந்தன், ஸ்ரீ கமலாம்பிகை அரிசி ஆலை,
பழைய காயல்

செல்வராஜ், அருணாசலம் அரிசி ஆலை, சிவகளை

ஆர். ஜெயராஜ், ஜே.கே. டிராவல்ஸ், ஸ்ரீவைகுண்டம்

சண்முகராஜ், நெல்-அரிசி மொத்த வியாபாரம், சிவகளை




# தியாகசீலர் சிதம்பரனார் நினைவாக சிதம்பரனார் மாவட்டம்

## மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர்

'என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழி நடத்திச்செல்லும் பெரியோர்களே! என் ரத்தத்தின் ரத்தமான உடன் பிறப்புக்களே!

''இந்த விழாவில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

''மக்களுக்கும் அரசுக்கும் இடையில் நெருக்கமான தொடர்பு இருக்க வேண்டும். அதன் அடிப்படையில்தான் புதிய மாவட்டங்கள் உருவாக்க வேண்டும் என்று முடிவு எடுக்கிறேன்.

''புதிய மாவட்டங்களுக்குச் சரித்திரச் சான்றோர்களின் பெயர்களைச் சூட்டுகிறோம். அந்த முறையில் கப்பலோட்டிய தமிழன், செக்கிழுத்த செம்மல், தியாக சீலர் சிதம்பரனாரைப் போற்றும் வகையில் தான் இந்தப் புதிய மாவட்டத்திற்குச் சிதம்பரனார் மாவட்டம் என்று பெயர் சூட்டி உள்ளேன்.

''சிதம்பரனார் மாவட்டத்துக்குத் தலைநகராகத் தூத்துக்குடி அமைந்துள்ளது. நாட்டு விடுதலைப் போரில் தன்னைத் தந்த பெருமை தூத்துக்குடிக்கு உண்டு.

''வீரபாண்டிய கட்டபொம்மனும், மகாகவி பாரதியும் பிறந்த புண்ணிய பூமி இது. சிதம்பரனார் மாவட்டம் தேசிய எழுச்சியின் சின்னமாக அமைகின்றது.

''இந்த மாவட்டம் எல்லாத்துறைகளிலும் தொடர்ந்து முன்னேற வேண்டும் என்று வாழ்த்துகிறேன். இம்மாவட்ட மக்களுக்கு என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

''தூத்துக்குடியைத் தலைநகராகக் கொண்ட சிதம்பரனார் மாவட்டத்தை மகிழ்ச்சியுடன் தொடங்கி வைக்கிறேன்.

''ஆங்கிலேயர் ஆதிக்கத்தை எதிர்த்து வீரப்போர் புரிந்த வீரபாண்டிய கட்டபொம்மன் சுதந்திரத்திற்காகத் தன்னையும் தன் உடைமைகளையும் இழந்தார். அவருடைய நினைவாக 'நெல்லை மாவட்டம் இன்று முதல் நெல்லை கட்டபொம்மன் மாவட்டம்' என்று அழைக்கப்படும்.

'அண்ணா நாமம் வாழ்க!
நன்றி! வணக்கம்!'

—(மாண்புமிகு முதல்வர் அவர்கள் 19.10.86 அன்று சிதம்பரனார் மாவட்டத்தைத் தொடங்கி வைத்து ஆற்றிய உரை)





# சிதம்பரனார் மாவட்டம் தொடக்க விழா

(19-10-1986)

# மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்கள் பங்கேற்ற நிகழ்ச்சிகள்





# சிதம்பரனார் மாவட்டம்

# வளர்ச்சிப் பணிகள்










சில

## வட்டங்கள் 7

1. தூத்துக்குடி
2. ஸ்ரீவைகுண்டம்
3. திருச்செந்தூர்
4. சாத்தான் குளம்
5. கோவில்பட்டி
6. ஓட்டப்பிடாரம்
7. விளாத்திக்குளம்

## ஊராட்சி ஒன்றியங்கள்

1. புதுக்கோட்டை
2. ஸ்ரீவைகுண்டம்
3. கருங்குளம்
4. சாத்தான்குளம்
5. உடன்குடி
6. திருச்செந்தூர்
7. ஆழ்வார் திருநகரி
8. ஓட்டப்பிடாரம்
9. விளாத்திக்குளம்
10. புதூர்
11. கோவில்பட்டி
12. கயத்தாறு

## நகராட்சிகள் 2

1. தூத்துக்குடி
2. கோவில்பட்டி





# சிதம்பரனார் மாவட்டம் ஓராண்டு நிறைவு



## தகவல்கள்

**வருவாய்க் கோட்டங்கள் 2**

1. **தூத்துக்குடி :** தூத்துக்குடி, ஸ்ரீவைகுண்டம், திருச்செந்தூர், சாத்தான் குளம்.

2. **கோவில்பட்டி :** கோவில்பட்டி, விளாத்திக் குளம். ஓட்டப்பிடாரம்.

| | | |
|---|---|---|
| வருவாய்க் கிராமங்கள் | ... | 457 |
| ஊராட்சி மன்றங்கள் | ... | 408 |
| பேரூராட்சிகள் | ... | 20 |
| மாவட்ட | | |
| மொத்த மக்கள் | ... | 13,50,581 |
| ஆண்கள் | | 6,57,303 |
| பெண்கள் | | 6,93,278 |
| படித்தவர்கள் | | 7,57,530 |
| தாழ்த்தப்பட்டோர் | ... | 2,17,664 |
| மக்கள் தொகை ஒரு சதுர கி. மீட்டருக்கு | | 291 |
| மாவட்டத்தின் மொத்தப்பரப்பு | | 4635.1ச.மீ. |
| பயிரிடப்பட்ட பரப்பளவு | | 2,54,971 எக்டேர் |
| கால்நடைகள் | | 6,53,797 |

### கல்வி நிலையங்கள் :

| | |
|---|---|
| ஆரம்பப் பள்ளி | 1122 |
| உயர்நிலைப் பள்ளி | 58 |
| மேல்நிலைப் பள்ளி | 53 |

தொழிற் கல்லூரி
கலைக் கல்லூரி

### முக்கியச் சாலைகள் :

தூத்துக்குடி—மதுரை
திருநெல்வேலி—தூத்துக்குடி—
தேசிய நெடுஞ்சாலை 7ஏ.

### தொழில் :

முத்துக் குளிப்பு, உப்புத் தொழில்.
தீப்பெட்டி தொழிற்சாலைகள்,
தூத்துக்குடி அல்காலிக் கெமிக்கல்ஸ்.
தாரங்கதாரா கெமிக்கல்ஸ்
நாசரேத் ஸ்பின்னிங் மில்ஸ், எட்டயாபுரம் கூட்டுறவு நூற்பாலை.
பனைப்பொருள் பயிற்சி நிலையம்.
தூத்துக்குடி துறைமுகம்.
தூத்துக்குடி அனல் மின் நிலையம்.





# உலக அளவில் உயர்ந்தோங்க....!

தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் திருக்கரங்களால் தேசபக்தர் சிதம்பரனார் பெயரால் இம்மாவட்டம் துவக்கப்பட்டு ஓராண்டு ஆகிறது!... எண்ணிப் பார்க்கிறேன்!.. இந்த ஒரு வயதுக் குழந்தை மற்ற மாவட்டங்களோடு சரிசமமாகப் போட்டி போட்டு முனைப்போடு செயலாற்றி இன்று எல்லோரும் பாராட்டும் வண்ணம் முன்னேறியிருப்பதற்கு இந்தமாவட்டத்தில் பணி புரியும் அத்துணை அரசு அலுவலர்களும்தான் காரணம். ஊழியர்களின் அயராத பணியை எண்ணி வியந்து, அவர்களைப் பாராட்டுவதில் பெருமைப்படுகிறேன். இந்தப்புதிய மாவட்டத்தின் முதல் ஆட்சித் தலைவராய்ப் பொறுப்பேற்று செயலாற்றக் கிடைத்த வாய்ப்புக்குக் காரணமாயிருந்த அனைவருக்கும் இந்த இனிய நேரத்தில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வெள்ளையரை எதிர்த்து வீர முழக்கமிட்ட கட்டபொம்மனையும், கப்பலோட்டிய தமிழரையும், தேசியக் கவியையும், உமறுப் புலவரையும், முத்துசாமி தீட்சிதரையும் பெற்றுச் சிறப்படைந்துள்ளது இம்மாவட்டம். ஆறுபடை வீடுகளில் ஒன்றான திருச்செந்தூரும், கிருத்துவர்களின் புனித ஆலயமான பரிசுத்த மேரி ஆலயமும் இங்கு உள்ளன. முத்துக் குளிப்புக்குப்பெயர் பெற்றதைப் போலவே உப்பு உற்பத்தியிலும் தன்னிகரற்று விளங்குகிறது. இம்மாவட்டத்தில் இந்த ஓராண்டில் ....

இம்மாவட்டத்தில் நிலவிய கடுமையான வறட்சியைச் சமாளிக்க விவசாயிகள் மற்றும் கைவினைஞர்கள், சிறுதொழில் புரிவோருக்கு மாவட்டத்திலுள்ள வங்கிகள் மூலம் கடனுதவி வழங்கிட ரூபாய் 14 கோடிக்குச் செயல் திட்டம் போட்டு அமுல் படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி கடந்த செப்டம்பர் திங்களில் மட்டும் வங்கிகள் ரூபாய் 1.57 கோடி கடன்ாக வழங்கியுள்ளன.

மற்ற மாவட்டங்களில் உள்ளது போல் இங்கேயும் மாவட்டத் தொழில் மையம் தனியாகத் தொடங்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் சிப்காட் தொழிற்பேட்டை உருவாகி வருகிறது. தூத்துக்குடி அருகே மீளவிட்டான் கிராமத்தில் 1000 ஏக்கர் நிலப்பரப்பில் சிப்காட் தொழிற்பேட்டை அமைக்கும் பணி தீவிரமாய் நடைபெற்று வருகிறது. நல்ல பல தொழிலதிபர்களைக் கொண்டுள்ள இம்மாவட்டம் இத் தொழிற்பேட்டை மூலம் தொழில் வளத்தில் மேலும் முன்னேறும். இம்மாவட்டத்தில் விளாத்திகுளம் போன்ற பகுதிகளைத் தொழில் முன்னேற்றத்தில் பின்தங்கிய பகுதியாக அரசு அறிவித்துள்ளதால் இங்கு தொழில் நிலையான முதலீட்டில் 15% மானியமாக வழங்கப்படும்.



ரெ. ஆறுமுகம், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர்,
சிதம்பரனார் மாவட்டம்.

மேலும் ரூபாய் 45 இலட்சம் மதிப்பில் இம்மாவட்டத்திற்கென ஒரு மாபெரும் விளையாட்டு மன்றம் கட்டப்படவுள்ளது. அதற்கான பணிகள் விரைவில் துவங்கப்பட உள்ளன.

பேரறிஞர் அண்ணா பிறந்த நாளன்றும் இம்மாவட்டத்தில் 32,000 குழந்தைகளுக்கு சொட்டு மருந்தும், தடுப்பு ஊசி போடும் தீவிரத் திட்டப் பணியும் துவக்கப்பட்டு, வெற்றிகரமாக அப்பணி நிறைவேற்றப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்திற்கு இந்த நிதியாண்டில் அரசு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் திட்டங்களை நிறைவேற்றிட ரூபாய் 9.5 கோடி அனுமதித்துள்ளது. இதன் மூலம் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபாய் 4.05 கோடி அனுமதித்துள்ளது. இந்தத் தொகை வங்கிகள் மூலம் ஏழை மக்களுக்குக் கறவை மாடுகள், ஆட்டுப் பண்ணை வளர்த்தல், சைக்கிள் கடை, பெட்டிக்கடை, ஜவுளிக்கடை, மற்றும் சிறு தொழில்கள் தொடங்கிடக் கடனாக வழங்கப்படும். இத்தொகையில் 33% அரசு மானியமாக வழங்குகிறது. இதன் மூலம் இம்மாவட்டத்தில் 9,068 நபர்கள் பயன் பெறுவார்கள். விவசாயப் பெருநோக்குத் திட்டத்தின் கீழ் ரூ. 1.95 கோடி கடனாக வழங்கப்படுகிறது. இதில் ரூ. 65 இலட்சம் மானியமாக வழங்கப்படும். இதன் மூலம் 2,203 நபர்கள் பயன் பெறுவர். தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ.1.18 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிட மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க 50% ஒதுக்கப்பட்டுள்ளது. சமூக நலக்காடுகள் வளர்ப்புத் திட்டத்தில் 5 இலட்சம் மரக்கன்றுகள் நடப்படும். மேலும் மத்திய அரசின் ஆணைப்படி 40வது சுதந்திர தினத்தையொட்டி, இம்மாவட்டத்தில் உள்ள அனைத்து

# சிதம்பரனார் மாவட்டத்தில்...

கல்வி சிறந்த மாவட்டங்களில் சிதம்பரனார் மாவட்டமும் ஒன்று. கல்வி வளர்ச்சிக்கான அடித்தளமும் கட்டுக்கோப்பும் அருமையாக அமைந்துள்ளன. இப்பொழுது 1,122 தொடக்கப்பள்ளிகளும், 58 உயர்நிலைப்பள்ளிகளும், 53 மேல்நிலைப்பள்ளிகளும் 8 கலை, அறிவியற் கல்லூரிகளும் ஒரு பொறியியல் கல்லூரியும், ஒரு வேளாண்மைக் கல்லூரியும், ஒரு மீன்துறைக் கல்லூரியும், இரண்டு பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளும் (Polytechnic) 9 தொழிற் பயிற்சிப் பள்ளிகளும் செயல்படுகின்றன. ஆகையால், தொழில்வளர்ச்சிக்கு வேண்டிய கற்றவர்களும், தொழில் நுட்ப வல்லுநர்களும் தொடர்ந்து கிடைக்க வாய்ப்பு உள்ளது.

தொழில் முயல்வோர்களுக்கும் (Enterpreneurs) இம் மாவட்டத்தில் பஞ்சமில்லை. மிக நீண்ட காலத்திற்கு முன்பே தூத்துக்குடியில் நூற்பாலைகள் அமைந்தன. உப்பளத் தொழில் உறுதியான அடிப்படையில் நடைபெற்று வருகின்றது. தாரங்கதாரா இரசாயனத் தொழிற்சாலை, ஸ்பிக் உரத் தொழிற்சாலை போன்ற புதிய தொழில்கள் தற்காலத் தொழில் வளர்ச்சியின் நுட்பங்களை உணர்த்தியுள்ளன. தொழில்களைச் செய்யும் ஆர்வமுடையவர்களும், உழைக்க உள்ளமும் உரமும் கொண்டவர்களும் மாவட்டம் எங்கும் உள்ளனர்.

**மீன்பிடி தொழில் :** மரபு வழியாக, நீண்ட நெடுங்காலமாக மீன்பிடிக்கும் தொழில் இம்மாவட்டத்தில் நடைபெற்று வருகின்றது. இதனை ஒட்டி அமைந்ததுதான் பருவகாலத்திற்கேற்ப நடைபெறும் முத்துக்குளிக்கும் தொழில்.

இன்றும் கட்டு மரங்களை நம்பி இத்தொழில் செய்கின்றவர்கள் உள்ளனர். எந்திரப்படகுகள் ஓரளவு பயன்படுத்தப்படுகின்றன. ஏற்றுமதி செய்கின்ற சிறப்புவகை மீன்களையும் பிடிக்கின்றனர்.

இப்பொழுது மாவட்டத்தில் பிடிக்கின்ற சிலவகை மீன்களை பக்கத்திலுள்ள கேரள மாநிலத்திற்குக் கொண்டு சென்று பதப்படுத்தி, பின் வெளிநாடுகளுக்கு அனுப்புகின்றனர். மீன்களைப் பதப்படுத்தவும், மீன்பிடிக்க வேண்டிய கருவிகளைச் செய்யவும் ஏற்ற தொழில்களை அமைக்க இம்மாவட்டத்தில் நிறைய வாய்புகள் உள்ளன.

**உப்பளத் தொழில் :** நீண்டகாலமாக இங்கு நடைபெறும் மற்றொரு தொழில் உப்பளத் தொழில். நமது நாட்டில் பல இடங்களுக்கும் உப்பு இங்கிருந்து செல்கின்றது. உப்பை மூலப் பொருளாகக் கொண்டு அமைந்ததுதான் தாரங்கதாரா இரசாயனத் தொழிற்சாலை.

**பனைத் தொழில் :** மரபு வழியாக அமைந்த மற்றொரு தொழில் பனைத் தொழில். இம்மாவட்டத்தில் போதுமான அளவு பனைகள் உள்ளன. அவற்றைப் பயன்படுத்தி கருப்புக் கட்டி காய்ச்சுகின்ற தொழில் செய்பவர்கள் ஏராளமாக உள்ளனர்.

கிராமங்கள் ஒவ்வொன்றிலும், 40 மரக்கன்றுகள் நடப்பட்டு அவை பராமரிக்கத்தக்க ஏற்பாடுகள் செய்யப்படும். இத்திட்டங்களின் மூலம் சுமார் 6 இலட்சத்து 19 ஆயிரம் மனித நாட்கள்

பயன்படுத்தப்படும். ஊரக நில மற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் அரசு ரூபாய் 1 கோடியே 5 இலட்சம் வழங்கியுள்ளது. இதில் ஆதிதிராவிட மக்களுக்கு 400 வீடுகள் கட்டித் தரப்படும். இந்தத் திட்டத்தின் கீழும் 7 இலட்சம மரக்கன்றுகள் இம்மாவட்டத்தில் நடப்படும். ஆக மொத்தம் சுமார் 15 இலட்சம் மரக்கன்றுகள். இந்த நடப்பாண்டில் இம்மாவட்டத்தில் பாதி கிட்டத்தட்ட பாலைவனம் போல் காட்சியளிக்கும் நிலைமை மாறி சோலைவனமாக மாறும் நாள் விரைவில் உதயமாகும்.

சிதம்பரனார் மாவட்டத்தின் முன்னோடி வங்கியாக பாரத வங்கி செயல்பட்டு வருகிறது. பட்டுத்தொழில் வளர்ச்சித் திட்டம், பால் பெருக்குத் திட்டம் மற்றும் மீன் வளம் பெருக்குத் திட்டம் ஆகிய மூன்று முத்தான திட்டங்களைச் செயல்படுத்த முனைப்புடன் இறங்கியுள்ளது முன்னோடி வங்கி. வளர்ச்சிப் பணிகளைச் செயல்படுத்துவதில் அனைத்து வங்கிகளும் மாவட்ட நிர்வாகத்திற்கு நலல ஆதரவை நல்கி வருகின்றன.

இம்மாவட்டத்தில் உள்ள 12 ஊராட்சி ஒன்றியங்களில் 8 ஊராட்சி ஒன்றியங்கள் வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. இதன் மூலம் கசிவு நீர்க் குட்டைகள், நீர் அரண்கள் அமைக்கப்படுகின்றன. காற்றின் மூலம் ஏற்படும் மண் அரிப்பைக் குறைக்க, தாவர அரண்களை வேளாண் பொறி இயல் துறையினர் அமைத்துள்ளனர். இது பாராட்டத்தக்க சாதனை.

வறட்சி என்ற பரிசினை இயற்கை அன்னை தொடர்ந்து அளித்து வந்த போதிலும், புன்முறுவலோடு அந்தச் சோதனைகளுக்கு ஈடுகொடுத்து வருகிறார்கள் இம்மாவட்டத்தின் விவசாயப் பெருங்குடி மக்கள். நன்கு திட்டமிடப்பட்ட நீர்ப்பாசனத் திட்டம்தான், இந்த மாவட்டத்திற்கு நீண்ட காலத் தீர்வாக அமையும். அத்தகைய திட்டத்தினை உருவாக்க தாலுக்கா அளவில் நீர்ப்பாசனக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன. விரைவில் மாவட்ட அளவிலான கருத்தரங்கம் நடத்தப்பட்டு திட்டப் பணிகள் முழுமையான செயல் வடிவம் பெறும்.

மேலும் சுற்றுலாத்துறை மூலம் பழம் பெருமை படைத்த கொற்கையை 5 இலட்சம் ரூபாய் செலவில் சுற்றுலா மையமாக மாற்றும் பணியும் தொடங்கப்படவுள்ளது. இம்மாவட்டத்தில் புகழ் பெற்று விளங்கும் திருவைகுண்டம் பகுதியில் உள்ள புண்ணியத் திருத்தலங்களான "நவ திருப்பதி" என்று அழைக்கப்படும் கோவில்கள் அனைத்தும் புதுப்பிக்கப்படவுள்ளன.

இம்மாவட்டத்தின் புதிய ஆட்சியர் கட்டட வளாகம் சுமார் 260 ஏக்கர் பரப்பில் கட்டிட திட்டங்கள் இறுதியாக்கப்பட்டுப் பணிகள் துவக்கப்படவுள்ளன.

புதிய இம்மாவட்டத்தில் சாலைப் போக்குவரத்து மிகவும் முக்கியமான ஒன்று. இவைகள் அனைத்தையும் புதுப்பிக்க மாநிலஅரசுக்குக்கருத்தும் அனுப்பப்படவுள்ளது. புதிய, புதிய தொழில்கள் தொடங்கி முன்னேறிக் காட்டுவதில் ஆர்வம் காட்டும் தொழிலதிபர்களும் உழைப்பாளிகளும் நிரம்பியது இம் மாவட்டம்! வர்த்தகம் செழித்தோங்கி உதவிடத் துறைமுகம் உள்ளது பெருமைப்படத்தக்க ஒன்று!

சேது-சமுத்திரத் திட்டம் மற்றும் தூத்துக்குடித் துறைமுகம் ஆழப்படுத்தும் பணி போன்றவைகள் இனிவரும் காலங்களில் நிறைவேற்றப்படும் போது, இப்புதிய சிதம்பரனார் மாவட்டத்தின் முக்கியத்துவம் உலக அளவில் உயர்ந்தோங்கும் என்பது என் அசைக்க முடியாத நம்பிக்கை! அது ஈடேற அனைவரும் பாடுபடுவோம் !

# நமது பெருமை

## இளசை அருணா



'சிதம்பரனாரும்' செந்தமிழ்பாரதி சிந்தைகவர்ந்த எல்லையதாம்
சிறந்தகரிசல் எங்கும்நிறைந்த கோவில்பட்டி நுழைவாயில்
இதமாய்வருக! என்றேஅழைக்கும் வேளாண்மையதின் ஆய்வகமாம்
எங்கள்சிதம்பர னார்மாவட்டம் இதயந்தன்னில் புகழ்பாடும்

காருகுறிச்சி நாதஸ்வரத்தால் கானம்இசைத்த ராகங்கள்
காணும்விழிகள் உயர்த்திக்காட்ட கொண்டையராஜு ஓவியங்கள்
கீரின்சுனையாய் வியர்வைவடித்துத் தீப்பெட்டித்தொழில் ஆக்கிவரும்
நகரப்பதிவே கோவில்பட்டி; கிழக்கேகொஞ்சம் நாம்நகர்ந்தால்

பாட்டுத்திறத்தால் நாட்டுப்புகழை நாட்டியபாரதி மண்பெருமை
பதித்துப்புகழ்கிற எட்டயபுரம்எனும் மனிதச்சரிதப் புகழ்த்திறமை
மீட்டும்முத்து சாமிதீட்சதர் இசைத்தகிருதிகள் எத்தனையோ!
முகம்மதுநபியின் பெருமைகள்பாடிய உமறுப்புலவர் வாழ்ந்ததுவும்

இத்திருமண்ணே.. எட்டயபுரமாம்.. பாரதிமண்டபம் வரவேற்கும்
எழிலாம்மங்கை பயின்றிடஇங்கு தொழிலின்நுட்பக் கல்வியொடு
சித்திரநெசவும் கூட்டுறவாலை இங்கேபுகழே பாடிவிடும்
சிந்தைகவர்ந்த நல்லப்பசுவாமிகள் வாழ்ந்தஊரே விளாத்திகுளம்.

உப்பின்மெருகை உலகிற்கேற்றும் கடலின்அலையாம் வேப்பலோடை
உதிரம்துடித்த பாஞ்சைவீரன் கட்டபொம்மன் எல்லையொடு
கப்பல்விட்டுச் சரிதம்படைத்த வ.உ.சி.யின் ஒட்டப்பிடாரம்
தானாபதியும் சுந்தரலிங்கம் வாழ்ந்ததும்இந்த மண்மணமே!

வெப்பக்கொடுமை தாங்காது'ஆஷ்' ரயிலில்பயணம் செய்கையிலே
விடுதலைப்பெருமை ஆக்கிவடித்த வாஞ்சிநாதன்தம் மணியாச்சி
எல்லைமுழுதும் பெருமைகள்பாடும் இதயச்சிறப்பே சிதம்பரனார்
இயலாம்நாடக எழுத்துவடித்த சங்கரதாஸ்சிற்பி சுவாமிகளும்

முல்லைமணமாய் எழுத்துவடித்த நாணல், அ.சீ.ரா. நினைவுகளும்
முகிழ்த்துஎடுக்கும் முத்துக்குவியல் மகிழ்ச்சிப்பதிவே தூத்துக்குடி
புனல்கள்பாடிக் கதிர்கள்பாய 'ஸ்பிக்'கின்ஆலை ஆசியொடு
புகையின்மெருகால் தொழிலேபெருகும் புதுவரலாறே தூத்துக்குடி

அனல்மின்சாரம்.. கனநீர்துறைமுகச் செழுமைமிகுந்த பதிவாகி
அருமைச்சிதம்பர னார்மாவட்டம் அனைவரும்நாமே போற்றிடலாம்
கற்பகஉயர்வும் கனிவாம்ஒலைப் பதநீர் குடிசைத் தொழில்களோடு
கடலலைபாடும் செந்தில்நகரம் முருகன்பெருமை பாடிவிடும்

சிற்பம்நிகர்த்த சிதம்பரனாரின் எல்லையேகாண வாருங்கள்
சிந்தைநிறைத்துச் செவிகள்நனைக்கும்'சிதம்பரனா'ரைப் பாருங்கள்!



## சிதம்பரனார் மாவட்டத்திற்குச் சிறப்புச் சேர்க்கும்

# துறைமுகம்


**ஆர். ஜெயமோகன் பிள்ளை,**
**இ.ஆ.ப.,**

**தலைவர்,**
**தூத்துக்குடி துறைமுக சபை**




துறைமுகமானது ஒரு நாட்டின் வாணிபத்திற்குத் திறவுகோல்; அத்துறைமுகத்தைச் சூழ்ந்துள்ள பகுதிகள் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்குத் தூண்டுகோல் என்று சொன்னால் மிகையாகாது.

இப்பொழுதெல்லாம் தூத்துக்குடி என்றதுமே முத்துச்குளிக்கும் இடம் என்ற நினைவுமாறி, நாட்டிற்குச் சொத்துக் குவிக்கும் துறைமுகம் என்று மக்களின் நினைவிற்கு வருகிறது.

**வாழ்க்கைத் தரம் உயர்வு**

தூத்துக்குடி துறைமுகம் நம் நாட்டிற்குப் பொன்கோடி ஈட்டிக் கொண்டிருக்கிறது. நாளொரு மேனி பொழுதொரு வண்ணமாய் வளர்ந்து பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்புகளை தந்து வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்திக் கொண்டிருக்கிறது. சரக்குகளைக் கையாள்வதன் மூலம் பல்லாயிரக்கணக்கானோர் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

துறைமுகத்தை மையமாகக் கொண்டு செயல்படும் அனல் மின்நிலையம், உரத் தொழிற் சாலை ( TAC, SPIC ) தாரங்க தாரா கெமிக்கல்ஸ் போன்ற நிறுவனங்களினாலும் பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் நல்வாழ்வு பெறுகின்றன.

இத்துறைமுகத்திற்கு இரண்டு பிரம்மாண்டமான அலைத் தடுப்புச்சுவர்கள் உள்ளன. அவற்றின் வடபுறச் சுவர்தான் உலகிலேயே நீளமான அலைத்தடுப்புச்சுவர்களில் ஒன்று. இச்சுவரின் நீளம் சுமார் 4103 மீட்டர்களாகும். இச்சிறப்பம்சம் இத்துறைமுகத்திற்குப் பெருமை சேர்க்கிறது.




### கப்பலில் பொருட்கள்

தூத்துக்குடி துறைமுகத்தில் உப்பு, சிமெண்டு மற்றும் உரம் போன்ற சரக்குகளைக் கப்பலில் ஏற்றி இறக்க 6 தளங்கள் உள்ளன. இத்தளங்களில் லாரிகளிலிருந்தும் சரக்கு இரயில்களிலிருந்தும் வரும் சரக்குகளை நேரடியாகக் கப்பல்களுக்கு ஏற்றலாம். அதே போன்று கப்பல்களில் இருந்து லாரிகளுக்கும் சரக்கு ரெயில்களுக்கும் நேரடியாக இறக்கலாம். இத்தளங்களில் சரக்குகளை ஏற்றி இறக்க 23 கிரேன்கள் உள்ளன. 18 (Fork lift) கருவிகளும் 4 இராட்சத சரக்கு லாரிகளும் 4 ரெயில் எஞ்சின்களும் உள்ளன.

### நிலக்கரி இறக்கும் தனித்தளம்

இவை தவிர நிலக்கரி இறக்குமதிக்கு என்று ரூ.3 கோடி செலவில் ஒரு தனித்தளம் கட்டப்பட்டுள்ளது. இத்தளத்தில் மணிக்கு 2000 டன் வரை நிலக்கரி இறக்கலாம். இவ்வாறு இறக்கப்படும் நிலக்கரி 5 கி.மீ. தொலைவிற்கு ( Conveyor ) என்று சொல்லப்படுகின்ற தானியங்கியில் அனல்மின் நிலையத்தை அடைகிறது.

பெட்ரோலிய எண்ணெய் மற்றும் திரவப் பொருட்களின் இறக்குமதிக்கென்று ஒரு தனித் தளமும் இத்துறைமுகத்தில் உள்ளது. இத்தளத்தில் பெட்ரோலிய எண்ணெய்ப் பொருட்களை இறக்குவதற்கென்று (Marine unloading arms ) என்று சொல்லுகின்ற சிறப்புக்கருவிகள் உள்ளன. இவற்றின் உதவியால் மணிக்கு 700 டன் பெட்ரோலிய எண்ணெய் பொருட்களை இறக்குமதி செய்யலாம்.



### பிரயாணிகள் நிலையம்

இத்துறைமுகத்தில் பிரயாணிகள் ஏற இறங்க நவீன வசதிகளுடன் கூடிய பிரயாணிகள் நிலையமும் கட்டப்பட்டுத் தயார் நிலையில் உள்ளது.

தூத்துக்குடி துறைமுகம் சென்ற ஆண்டில் ரூ.15.13 கோடி வருவாயை ஈட்டி உள்ளது. 1979ஆம் ஆண்டு 3.7 கோடியாக மட்டும் இருந்த வருமானம் இன்று 15.13 கோடியாக உயர்ந்திருப்பது இத்துறைமுகத்தின் பரிணாம வளர்ச்சியைக் காட்டுகிறது.

### கப்பலின் வரத்து அதிகரிப்பு

சரக்குகள் துரிதமாகவும், சேதமின்றிப் பத்திரமாகவும் இத்துறைமுகத்தில் கையாளப்படுகின்றன. இதனால் இங்குவரும் கப்பல்கள் சரக்குகளை ஏற்றியோ அல்லது இறக்கியோ விரைவில் திரும்ப ஏதுவாக உள்ளது.

ஆண்டிற்கு 40 கப்பல்களே வந்த நிலைமை மாறி 452 கப்பல்கள் வந்து போகும் வளர்ச்சி நிலையை இத்துறைமுகம் அடைந்துள்ளது.

### எதிர்காலம்

மக்களின் அன்றாட வாழ்வில் பல்வேறு வழிகளில் ஒன்றறக் கலந்துள்ள இத்துறைமுகம் வலிவும் வனப்பும் பெற்று இப்பகுதிக்கு ஒளிமயமான எதிர்காலத்தை வழங்கும் என்பது நிச்சயம்.



# சிதம்பரனார் மாவட்ட வளர்ச்சியில் வருவாய்த்துறை

கன்னித் தமிழ்நாடு கலைகளுக்கெல்லாம் தாய்வீடு. வீரம் செறிந்த மண்ணில் விவேகம் வளர்த்த நாடு - பொன்னையும் பொன் போன்ற தன் இன்னுயிரையும் ஈந்து தேசிய உணர்வை திக்கெல்லாம் பரப்பிய பாரம்பரிய மிக்க நாடு. இச்சிறப்புமிகு தமிழ்நாட்டின் இருபதாவது மாவட்டமாக தேச பகதர் செக்கிழுத்த செம்மல், சிதம்பரனார் பெயர் தாங்கி புதிய மாவட்டமாக தூத்துக்குடியை தலைமையிடமாகக் கொண்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட இம் மாவட்டம் கடந்த 20.10.1986 முதல் சிறப்பாகச் செம்மையாக செயல்பட்டு வருகிறது. இம் மாவட்டத்தின் முதல் ஆட்சித் தலைவராக திரு ரெ. ஆறுமுகம், இ.ஆ.ப., பொறுப்பேற்று செயல்பட்டு வருகிறார்.



**சிவசூரியன்,**
**மாவட்ட வருவாய் அலுவலர்**

## வருவாய் நிர்வாகம்

### மாவட்ட நிர்வாகம்

மாவட்ட ஆட்சித் தலைவரின் நேரடி தலைமையில் இயங்கும் வருவாய்த் துறையின் வருவாய் அலுவலராக திரு சிவசூரியன், பொறுப்பேற்றார். இம்மாவட்டம் தூத்துக்குடி, கோவில்பட்டி என்ற இரு வருவாய்க் கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டு தூத்துக்குடி வருவாய்க் கோட்டத்தில் தூத்துக்குடி, ஸ்ரீவைகுண்டம், திருச்செந்தூர், சாத்தான்குளம் என்ற வட்டங்களும் கோவில்பட்டி வருவாய் கோட்டத்தில் கோவில்பட்டி விளாத்திக்குளம், ஓட்டப்பிடாரம் என்ற மூன்று வட்டங்களும் செயல்பட்டு வருகின்றன.

இம்மாவட்டத்தில் இரு வருவாய்க் கோட்ட அலுவலகங்களைத் தவிர நான்கு துணை ஆட்சியர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளராகப் பொறுப்பேற்றனர். பின்னர் உதவி ஆணையர் (கலால்) மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கணக்கு), உதவி இயக்குநர் (நில அளவை) மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வறட்சி) ஆகிய பதவிகளில் துணை ஆட்சியர்கள் பொறுப்பேற்றனர்.



மாவட்டம் மலர்ந்த போது வட்டாட்சியர்கள் தகுதியில் 31 வட்டாட்சியர்கள் பணியேற்றனர். அதே போன்று 30 துணை வட்டாட்சியர்கள் பணியேற்றனர். பின்னர் 7 துணை வட்டாட்சியர்களுக்கு வட்டாட்சியர்களாகவும் 43 உதவியாளர்களுக்கு துணை வட்டாட்சியர்களாகவும் பதவி உயர்வு வழங்கப்பட்டது.

அடுத்து 15 உதவியாளர்கள் தேர்வு நிலை உதவியாளர்களாகவும் 15 இளநிலை உதவியாளர்கள் உதவியாளர்களாகவும் பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளனர்.

கருணை அடிப்படையில் 4 இளநிலை உதவியாளர்களும் ஒரு தட்டச்சரும், ஒரு பதிவறை எழுத்தரும் ஒரு அலுவலக உதவியாளரும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இம்மாவட்டத்தில்பணியாற்றிய திரு மாரியப்பன் என்ற வட்ட ஆட்சியருக்கு துணை ஆட்சியராகத் தமிழக அரசு பதவி உயர்வு அளித்துள்ளது.

### வருவாய் நிர்வாகம்

இம்மாவட்டத்தில் 38 குறு வட்டங்களும் 465 வருவாய் கிராமங்களும் உள்ளன.

இம்மாவட்ட நிலவரி கேட்பு 19.10.1986ல் ரூ.66,28,740.93 ஆக இருந்தது. இன்று வரை ரூ. 54,41,390.28 வசூல் செய்யப்பட்டுள்ளது. 1396ஆம் பசலியில் வறட்சியை முன்னிட்டு ரூ. 27,99,111.38 நிலவரி தள்ளுபடி செய்ய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரால் அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

SHIPPING COMPLEX UNDER ONE ROOF AT TUTICORIN

Telegrams : "PROMINENT"
Telex : 434 252 PSTS IN

Telephones :
OFF : 20322
24022

# P.S.T.S. THIRAVIARATNAM & SONS

22, South Raja Street
TUTICORIN - 628 001

Pioneers and Specialized in the Field of
Shipping, Clearing and Forwarding
Representing Several Indian and
Overseas Shipping Lines

Telegrams : "GLXY
Telex : 434 257 GLXY IN

Telephones :
OFF : 21809
22120

# GALAXY (Tuticorin) AGENCIES

22, South Raja Street,
Tuticorin - 628 001

Steamer Agents, Stevedores, and
Transport Operators

## முதியோர் உதவி

இம்மாவட்டத்தில் முதியோர் உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் கீழ்க்கண்டபடி பயனடைந்து வருகிறார்கள்.

| | | மாவட்டம் மலர்வதற்கு முன்பு இருந்த எண்ணிக்கை | தற்போதுள்ள எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | முதியோர் உதவித்தொகை | 4378 | 4378 |
| 2. | ஊனமுற்றோர் உதவித்தொகை | 500 | 500 |
| 3. | விதவை உதவித்தொகை | 1607 | 1684 |
| 4. | விவசாயக் கூலி உதவித்தொகை | 1316 | 1324 |
| 5. | கணவனால் கைவிடப்பட்ட கைம்பெண் உதவித்தொகை | | 85 |
| 6. | தியாகிகள் உதவித்தொகை | 3 | 8 |
| 7. | உலமா ஓய்வூதியத் தொகை | -9 | 10 |

## நில நிர்வாகம்

சிதம்பரனார் மாவட்டத்தின் மொத்தப் பரப்பளவு 4,635 சதுர கிலோமீட்டர் ஆகும். இம்மாவட்டத்தின் மொத்த மக்கள் தொகை 1981ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 13,50,581 ஆகும். நன்செய் பரப்பு 30,824 எக்டேர் ஆகும். இதில் 23,594 எக்டேர் தாமிரபரணி ஆற்றுப் பாசனத்தின் கீழும் மானாவாரி குளப் பாசனத்தின் கீழ் 7,227 எக்டேர் நிலமும் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. இம்மாவட்டத்தின் மொத்த புன்செய் நிலப் பரப்பளவு 2,24,158 ஆகும்.

## பாரதப் பிரதமரின் 20 அம்சத் திட்டம்

இம்மாவட்டத்தில் கடந்த ஓர் ஆண்டில் பாரதப் பிரதமரின் இருபது அம்சத் திட்டத்தின் கீழ் 4,791 நபர்களுக்கு இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. மேலும் 28 நபர்களுக்கு 33.57 எக்டேர் நிலங்கள் விவசாய உபயோகத்திற்காக ஏழை எளிய மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

## நில ஆர்ஜிதம்

தூத்துக்குடியில் தொழில் வளத்தை மேம்படுத்த சிப்காட் நிறுவனத்திற்குத் தொழிற்பேட்டை நிறுவ இதுவரை 1,069 ஏக்கர் 88 செணட் நிலம் ஒப்படை செய்யப்பட்டுள்ளது. புதிய மாவட்டத் தலைநகர் தூத்துக்குடியில் செயல்பட ஆரம்பித்ததையொட்டி அரசு அலுவலர்கள், மற்றுமுள்ளோருக்கு வீட்டு வசதி ஏற்படுத்திக் கொடுப்பதற்காக தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு இதுவரை 68 ஏக்கர் 46 சென்ட் நிலம் ஒப்படை செய்யப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் வல்லநாடு அருகேயுள்ள கிள்ளிக்குளம் கிராமத்தில் உள்ள வேளாண்மைக் கல்லூரிக்குத் தேவையான நிலம் ஒப்படை செய்து வழங்க தேவையான பணிகள் ஒரு தனி வட்டாட்சியரின் கீழ் நடைபெற்று வருகின்றன.

## நிலச்சீர்திருத்த நிர்வாகம்

சிதம்பரனார் மாவட்டத்தில் இப்பணிக்குத் தனி அலுவலர்கள் இல்லாவிடினும் மாவட்ட வருவாய் அலுவலரே இதனைக் கவ



Telegrams :
'JEWELS'

Phone : 21709
21596

Favourite Firm For Artistic
Ornaments and Silver Ware

# A. V. M.

## Marimuthu Nadar & Sons

*Specialist in :*

**PEARLS AND SEMI-PRECIOUS STONE NECKLACES**

10, 183, North Cotton Road,
TUTICORIN-628 001.

னித்து வருகிறார். இவ்வினத்தில் இம்மாவட்டத்திற்குரிய கேட்பு ரூ.4,91,401.25ல் இதுவரை ரூ.3,74,885.53 வசூல் செய்யப்பட்டுள்ளது.

**நீதி நிர்வாகம்**

இம்மாவட்டத்தில் சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகள் காவல் துறையின் முழு ஒத்துழைப்போடு கடந்த ஓராண்டு காலத்தில் மிகவும் அமைதியாகப் பராமரிக்கப்பட்டு வரப்பட்டுள்ளன. 85 புதிய தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கு உரிமங்களும் 6 திரையரங்கம் கட்ட அனுமதியும் 2 புதிய திரையரங்கம் நடத்துவதற்கு உரிமமும் கொடுக்கப்பட்டுள்ளது.

**நில அளவை நிர்வாகம்**

இம்மாவட்டம் பிரிவதற்கு முன்பு 35 கிராமங்களுக்குப் புலப்பணி முடிக்கப்பட்டு இருந்தது. 20.10.1986ல் இருந்து 15.05. 1987க்குள் ஏழு மாதத்தில் முடித்துள்ள 7 கிராமங்களுக்கும் புலப்பணி முடிக்கப்பட்டது. திட்டப் பணிகள் முடிந்த விவரம் கீழே தரப்பட்டுள்ளன.

வட்டங்களில் இரண்டாம் கட்ட நில உடைமைப்பதிவு மேம்பாட்டுத் திட்டப்பணி நடைபெற்று வருகின்றது. முதல் கட்ட நில உடைமைப்பதிவு மேம்பாட்டுத் திட்டப்பணி 31.03.1987ல் முடிக்கப்பட்டு நில அளவைக் கணக்குகள் வருவாய்த் துறைக்கு ஒப்படைத்து, வருவாய்த் துறையுடன் நில அளவைத் துறை இணைந்து இம்மாவட்டத்தைச் சார்ந்த கோவில்பட்டி, விளாத்திகுளம், ஓட்டப்பிடாரம், தூத்துக்குடி, ஸ்ரீவைகுண்டம் ஆகிய ஐந்து வட்டங்களில் பராமரிப்புப் பணிகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. மேற்கண்ட ஐந்து வட்டங்களில் உள்ள 375 கிராமங்களுக்கு 31 குறு வட்டங்களில் பராமரிப்பு நில அளவர்கள் பணியாற்றி வருகின்றனர்.

சிதம்பரனார் மாவட்டம் ஆரம்பித்த பின் நில அளவைப் பராமரிப்புப் பணியின் கீழ் 10,411 பட்டா மாறுதல் மனுக்கள் நடவடிக்கை எடுத்து முடிக்கப்பட்டுள்ளன. புல எல்லை அளந்து காட்டக்கோரிய 823 மனுக்களைப் பரிசீலனை செய்து பட்டாதாரர்களுக்கு எல்லைகள் அளந்து காண்பிக்கப்பட்டுள்ளன. நில அளவைக் தணிக்கை செய்த கற்களின் எண்ணிக்கை 12,225 ஆகும். கற்கள் காணப்படாத இடங்களில் 4,769 அளவைகற்கள் புதிதாக நடப்பட்டுள்ளன. பட்டா மாறுதல் உத்தரவிற்குப் பின் வருவாய்த் துறை நிலப்பதிவேடுகளில் தக்க மாறுதல்கள் செய்யப்பட்டு வருகின்றன. புதிதாக அளக்கப்பட்ட உட்பிரிவுகளை உத்தரவிற்குப் பின் புலப்படச் சுவடிகளில் வரைந்து பராமரிப்பு பணி மூலம் வட்டம் மற்றும் கிராமங்களில் பராமரிக்கப்படும் நில அளவைப் பதிவேடுகள் நடப்புக் காலம் வரை சரி செய்யப்பட்டு வருகிறது. மற்றும் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலரிடமுள்ள கணக்குகளிலும் வட்ட அலுவலகத்திலுள்ள கணக்குகளிலும் திருத்தங்கள் செய்து நில அளவையின் கீழ் ஏற்படும் புதிய மாறுதல்கள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டு சரியாகப் பேணி பராமரித்து வரப்படுகின்றது.

**ஈட்டுறுதி ஓய்வூதியத் திட்டம்**

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 1984ஆம் ஆண்டு அமைப்பு இல்லாத தொழிலாளர்கள் கிராமக் கைவினைஞர்கள்

| பணி விவரம் | 1.4.86 முதல் 19.10.86 வரை முடிக்கப்பட்டது (மாவட்டப் பிரிவினைக்கு முன்) | 20.10.86 முதல் நாளது தேதிவரை (மாவட்டப் பிரிவினைக்குப் பின்) |
|---|---|---|
| பட்டா வழங்கல் | 10 கிராமங்கள் மட்டும் | 71 கிராமங்கள் (31.8.87 உடன் எல்லா கிராமங்களுக்கும் வழங்கப்பட்டுவிட்டது) |
| தூயக் கணக்கு ஒப்படைத்தல் | 6 கிராமங்கள் மட்டும் | 75 கிராமங்கள் (25.9.87க்குள் கொடுக்கப்பட்டு எல்லாகிராமங்களுக்கும் முடிந்துவிட்டன) |
| உட்பிரிவு அளத்தல் | 29,377 | 22,572 (மே'87 உடன் முடிக்கப்பட்டது) |
| கற்கள் புதுப்பித்தல் | 14,171 | 9,646 (மே' 87 உடன் முடிக்கப்பட்டது) |
| ஆக்கிரமிப்புப் பதிவு செய்தல் | 86 | 70 (மே'87 உடன் முடிக்கப்பட்டது) |
| முடிவு செய்யப்பட்ட மனுக்கள் | 89 | 3,852 |
| வழங்கிய பட்டாக்கள் | 13,418 | 97,179 |
| இந்தத்திட்டத்தின் மூலம் பயனடைந்தோர் | 25,335 | 2,06,419 |

**வருவாய்ப் பதிவேடுகளும் பராமரித்தலும்**

சிதம்பரனார் மாவட்டத்தில் திருச்செந்தூர் சாத்தான் குளம்

கற்கள் பட்டாதாரர்களால் பூமியில் பாதுகாத்து வரப்படுகின்றனவா எனப் பராமரிப்பு நில அளவர்களால் தணிக்கை செய்யப்பட்டு வருகின்றன. அவ்வாறு

மற்றும் சிறு விவசாயிகள் பயனடையும் வகையில் தொடங்கப்பட்ட இத்திட்டத்தில் சிதம்பரனார் மாவட்டத்தில் 20.10.1986 வரை 25,976 நபர்

முத்துக் குளித்த தென்கடலின் ஓரத்தில்..

முத்தமிழ்க் கவிஞன் பாரதி-தியாகவேள்வியில்

மூக்குளித்த வ.உ.சி ஆகியோரின்

மூச்சுக்காற்று உலவிவரும் பூமியில்...

மாவட்டச் சிறப்பு மலராய் மலரும் 'தமிழரசு' தழைக்க

தமிழர் வாழ்வு செழிக்க ... நல்வாழ்த்துக்கள்!

அபிராமி டெக்ஸ்டைல்ஸ்

சிதம்பரனார் மாவட்ட சிறப்புமிகு ஜவுளி சங்கமம்!

75, கீழரத வீதி, தூத்துக்குடி-2.

தொலைபேசி : 23007

உரிமையாளர் : ஆ. திருச்சிற்றம்பலம்

கள் என இருந்த உறுப்பினர் எண்ணிக்கை தற்பொழுது 37,921 என கடந்த ஓராண்டில் உயர்ந்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் இது வரை 13 நபர்கள் நிவாரணம் பெற்றுள்ளனர்.

**அகதிகள் மறுவாழ்வுத் திட்டம்**

சிதம்பரனார் மாவட்டத்தில் கடந்த ஆண்டில் அகதிகள் மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் 2 குடும்பங்களுக்கு ரூ.6,000 - வியாபாரக் கடனும், 41 குடும்பங்களுக்கு ரூ.1,30,000 - வீடு கட்டக் கடனும் வழங்கப்பட்டுள்ளன. மாப்பிள்ளை யூரணி என்னும் கிராமத்தில் இலங்கை அகதிகள் தங்கியிருக்க 100 வீடுகள் கொண்ட முகாம்கள் அமைக்கப்பட்டு தற்போது 107 குடும்பங்களில் 418 நபர்கள் வசித்து வருகின்றனர். அக்குடும்பங்களுக்கு ரூ.4 05,272 75 பணக்கொடையாகவும் ரூ. 61,835.00க்கு மலிவு விலையில் அரிசியும் ரூ.53,214.00க்கு 414 நபர்களுக்கு துணி மணிகள், பாத்திரங்கள் மற்றும் அத்தியாவசியப் பண்டங்களும் வாங்கி கொடுக்கப்பட்டுள்ளன. 40 குழந்தைகளுக்கு பள்ளிச் சீருடையும் வழங்கப்பட்டுள்ளது. 60 நபர்கள் இதுவரை அகதிச் சான்றுடன் பள்ளி மற்றும் கல்லூரிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மாவட்டம் தொடங்கியபோது 470 ஆக இருந்த அத்தியாவசியப் பண்டங்கள் வியாபார ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் சீரான பல்வேறு உரிமங்கள், தற்போது 565 ஆக உயர்ந்துள்ளது.

புதிதாக அமைக்கப்பட்ட 2 அரிசி ஆலைகளையும் சேர்த்து மொத்தம் 346 அரிசி ஆலைகள் இயங்கி வருவதோடு, மேலும் எட்டு ஆலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

*With Best Compliments From :*

Telex : 444-263-SALT IN
Telegram : GROUP SALT

Phone : 21040
22340

Tuticorin Small Scale Salt Manufacturers Association
(Regd. S.No. 29 of 1975)
**42, Periera Street, Tuticorin-628 001**

Thiru A.R. **Subramania Pillai** President
Thiru P. **Perinbam, B.A.** Vice President
Thiru R. **Krishna Konar** Vice President
Thiru **M.S. Arunachalam** Hony Secy.,
Thiru S. **Rajendran** Joint Secretary
Thiru J. **Edward** Joint Secretary
Thiru G. **Grabadurai**, M.Sc., Treasurer

"நாடென்ப நாடா வளத்தது'' என்ற குறள்நெறிக் கேற்ப நாடா வளம் நிறைந்தது இம்மாவட்டம். ஆம். நாடு விடுதலை பெற அன்று வெள்ளையரை எதிர்த்துப் போராடிய வீரச் செம்மல் சிதம்பரனாரின் பெயரைத் தாங்கிய இம்மாவட்டத்தில் ஒரு நாடு வளம் பெறத் தேவையான மின்விசை நிறைய விளைகிறது. நம்மாநிலத்தின் மின்விளைச்சலில் இம்மாவட்டம் முதலிடம் பெறுகிறது. தூத்துக்குடியில் 1976-ஆம் ஆண்டில் துவக்கப்பட்டு முதற்கட்டமாக ரூ. 178 கோடி செலவில் முதலிரண்டு விசைப்பொறிகள் கட்டி முடிக்கப்பட்டு 1979ல் செயல்படத் துவங்கிய அனல்மின்நிலையம் படிப்படியாக வளர்ந்தது. மீண்டும் இரண்டாங்கட்டமாக மூன்றாவது விசைப்பொறியும் ரூ. 58 கோடி செலவில் நிறுவப்பட்டு 1982ல் இயங்கத் தொடங்கி 630 மெகாவாட் விசையினை உண்டாக்கி நம் மாநில முழுவதும் அனுப்புகிறது. இவ்வனல் மின்நிலையத்தை மேலும் விரிவாக்கி கூடுதலாக 210 மெகாவாட் திறன் கொண்டமேலும் இரு விசைப் பொறிகள் ரூ. 357 கோடி செலவில் நிறுவும் பணியும் தொடங்கப்பட்டுள்ளது. இப்பணி முடியும் போது இவ்வனல் மின் நிலையத்தின் திறனளவு 1050 மெகாவாட்டுகளாக உயரும். அப்போது இம்மின்நிலையம் தமிழ் நாட்டிலேயே மிகப் பெரிய அனல் மின் நிலையமாக (நிலக்கரியினால் இயங்கும்) இருக்கும்.

# சிதம்பரனார் மாவட்டத்தில் மின் விசைப் பெருக்கம்



பொறிஞர் கு. ம. சுப்பிரமணியம்

நிலக்கரியினால் இயங்கும் அனல்மின் நிலையம் மட்டுமின்றி இயற்கையின் அருட்கொடையாம் காற்றினால் மின்விசையுண்டாக்கும் மின்காற்றாலைகளும் இங்குதான் மாநிலத்திலேயே முதன்முதலாக நிறுவப்பட்டுள்ளன. ஒவ்வொன்றும் 55 கிலோவாட் மின்விசையினை அளிக்கும் 20 மின்காற்றாலைகள் தூத்துக்குடியை அடுத்துள்ள முல்லைக்காடு என்னும் ஊரில் 1986 சனவரியிலிருந்து மொத்தம் 1,000 கிலோவாட் திறனுடன் இயங்கி வருகின்றன.

இக்காற்றாலைகள் தரும் மின்விசை தமிழக மின்தொடர் கட்டமைப்புக்குள் செலுத்தப்பட்டு தமிழக மக்களனைவரும் அதன் பயனைக் கடந்த இரண்டாண்டுகளாக துய்த்து வருகின்றனர். மேலும் இம்மாவட்டத்தின் வரலாற்றுச் சிறப்பு மிக்க கயத்தாற்றில் ஒவ்வொன்றும் 90 கிலோவாட் திறன் கொண்ட 16 காற்றாலைகள் நிறுவும் பணி தொடங்கப்பட்டுள்ளது. இயற்கை வளங்கள் எனின் நீர்வளம், நிலவளம், கனிவளம் போன்ற வளங்களே நம் நினைவுக்கு வரும். ஆயின் இயற்கையதாய் மனித முயற்சி எதுவுமின்றிக் கிடைக்கும் காற்று விசையும் ஒரு வளமே. சிதம்பரனார் மாவட்டம் இவ்வளம் நிறையப்பெற்ற ஒரு மாவட்டமாகும். இக்காற்று வளத்தால் மின்வளம் இம்மாவட்டத்தில் மேலும் மேலும் பெருகக் கூடிய வாய்ப்புக்கள் நிறைய உள.

அனல் மின்நிலையங்கள் நீர் மின்நிலையங்கள் மற்றும் அணு மின்நிலையங்கள் ஆகிய அனைத்தும் உண்டாக்கும் மின்விசையினை விசைத் தொடர்கள் மூலம் மாநில முழுதும் கொண்டு சென்று சற்றேறத்தாழ 60 இலட்சம் பயனீட்டாளர்களுக்குப் பகிர்ந்தளிக்கும் மின்அமைப்புக்கள் (distribution systems) மாவட்டத்திற்கு ஒன்றாக இப்போது 29 உள்ளன. அவற்றில் சிதம்பரனார் மாவட்டத்திற்கென ஓர் அமைப்பும் கடந்த 1.1.1987 முதல் மாவட்டத் தலைநகரான தூத்துக்குடியில் இயங்கி வருகிறது. மேலாளும் பொறிஞர் ஒருவரின் கீழ் இயங்கும் இச்சிதம்பரனார் மின்னமைப்பில் நான்கு கோட்டங்களும் 19 உட்கோட்டங்களும் 54 பிரிவுகளும் அடங்கும். இம்மின்னமைப்பில் உள்ள பல்வேறு வகையான மின் இணைப்புக்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| வீட்டு இணைப்புக்கள் | 1,47,074 |
| வணிக இணைப்புக்கள் | 24,316 |
| தொழில் இணைப்புக்கள் | 6,642 |
| வேளாண்மை இணைப்புக்கள் | 27,219 |
| தெருவிளக்கு இணைப்புக்கள் | 1,137 |
| குடிசை இணைப்புக்கள் | 13,223 |
| உயர்அழுத்த இணைப்புக்கள் | 63 |
| மொத்தம் | 2,19,674 |

சிதம்பரனார் மாவட்டம்
ஓராண்டு நிறைவு விழா

எமது நல்வாழ்த்துக்கள்



# எண்ணெய் ஆலை
# உரிமையாளர்கள்

தூத்துக்குடி

மொத்தமுள்ள 27,219 வேளாண்மை இணைப்புக்களில் 12,880 சிறிய உழவர்களுக்கான சலுகை பெற்றனவாகையின் அவைகளுக்குக் .கட்டணமில்லை. அதேபோல குடிசை இணைப்புகளனைத்துக்கும் கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை.

இம்மாவட்டத்தில் தூத்துக்குடி அனல் மின்நிலையத்தையொட்டி மிகப் பெரிய தொழிற்சாலைகள் எழுந்துள்ளன. மிகு உயர் அழுத்தத்தில் (E.H.T) விசைபெறும் ஸ்பிக் உரத்தொழிற்சாலையும் தரங்கதாரா இரசாயனத் தொழிற்சாலையும் மற்றும் உயர் அழுத்த விசை பெறும் கனநீர் ஆலையும் இம்மாவட்டத்தின் தொழில் வளத்திற்குப் பெரிதும் உதவும் நிறுவனங்களாம். மேலும் உப்பு விளைக்கும் உப்பளங்களுக்கும் பெரிய பெரிய நூற்பாலைகளுக்கும் மின்விசையளித்துத் தொழில் வளரத் துணைபுரிகிறதுமின்வாரியம் இவ்விணைப்புகளனைத்துக்கும் சீரான அழுத்தத்தில் விசையளிப்பதற்கான பல்வேறு துணை மின்நிலையங்கள் இம்மாவட்டத்தில் உள்ளன. அவையாவன:

| | | |
|---|---|---|
| தூத்துக்குடி | 230 கிலோவோல்ட் | துணை மின் நிலையம் |
| தூத்துக்குடி | 110 கிலோவோல்ட் | ,, |
| ஆறுமுகநேரி | 110 கிலோவோல்ட் | ,, |
| சாத்தான்குளம் | 110 கிலோவோல்ட் | ,, |
| கோவில்பட்டி | 66 கிலோவோல்ட் | ,, |
| எப்போது வென்றான் | 66 கிலோவோல்ட் | ,, |
| நாகலாபுரம் | 66 கிலோவோல்ட் | ,, |
| கழுகுமலை | 66 கிலோவோல்ட் | ,, |
| ஓட்டப்பிடாரம் | 66 கிலோவோல்ட் | ,, |
| திருவைகுந்தம் | 33 கிலோவோல்ட் | ,, |
| உடன்குடி | 33 கிலோவோல்ட் | ,, |



இவையன்றி எப்போதுவென்றானில் ஒரு 110 கிலோ வோல்ட் துணை மின்நிலையமும் எட்டையபுரம், கடம்பூர், நாகலாபுரம் குளத்தூர், நாசரேத் ஆகிய ஊர்களில் 33 கிலோ வொல்ட் துணை மின் நிலையங்களும் அமைக்கும் பணி விரைவில் துவங்கப்பட உள்ளன.

இம்மாவட்டத்தில் பல பகுதிகளில் விசை அழுத்தக்குறைவு (Low Voltgae) கள் உள்ளன. இக்குறை மேற்சொன்ன துணை மின்நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டபின் அறவே நீக்கப்படும். தூத்துக்குடி நகரிலும் மற்ற நகரங்களிலும் பழுதடைந்துள்ள மின்தொடர்கள் மற்றும் கருவிகள் புதுப்பிக்கப்படும் பணிகளும், சீரமைப்புப் பணிகளும் முறையாகத் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நடப்பு ஆண்டில் சுமார் 1100 வேளாண்மை மின்விசையேற்றங்களுக்கும் 400 தொழிற்சாலைகளுக்கும் புதிய மின் இணைப்புக்கள் வழங்கப்பட உள்ளன. அத்துடன் நகர்ப்புறங்கள் தவிர்த்த ஊர்ப்புறங்களில் உள்ள குடிசைகளுக்கும் அரசு சலுகையில் கட்டித்தரும் ஆதிதிராவிடர் குடியிருப்புக்களுக்கும் இணைப்புக்கள் உடனுக்குடன் கொடுக்கப்படும். தூத்துக்குடிக்கருகில் மீளவிட்டானில் அமையவிருக்கும் தொழிற்பேட்டையில் புதிதாகத் தோன்றும் தொழிற்சாலைகளுக்கு தாழ் அழுத்த வகையிலும் உயரழுத்த வகையிலும் மின் இணைப்புக்கள் அளிக்கப்படும். இவற்றால் பெருகிவரும் மின்விசைத் தேவையைக் கருத்தில் கொண்டு இதற்கென்றே தனியாக ஒரு 230 கிலோ வோல்ட் மின்நிலையம் அமைக்கும் திட்டமும் உள்ளது. தெருவிளக்குகள் அனைத்தையும் பழுதுற்றவைகளைப் புதுப்பித்துப் பராமரிக்கும் பணி எப்போதும் போல மேற்கொள்ளப்படும். புதிய தெருவிளக்குகள் அமைக்கும் பணியும் மேற்கொள்ளப்படும். இம்மாவட்டத்தில் உள்ள 220119 பயனீட்டாளர்கள் அனைவரும் மனநிறைவோடு பாராட்டும் வண்ணம் பணியாற்றி வருகிறது மின்துறை.



சிதம்பரனார் மாவட்ட முதல் ஆண்டு

நிறைவு விழாவிற்கு எங்களது

இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள்

0 ஜோதி விஜயா ரைஸ் மில், கோவில்பட்டி

0 ஸ்ரீ வெங்கடேஸ்வரா ரைஸ் மில், கோவில்பட்டி

0 ஸ்ரீனிவாசா ரைஸ் மில், கோவில்பட்டி

0 வெங்கடாசலபதி ரைஸ் மில், கோவில்பட்டி

0 நாராயணசாமி ரைஸ் மில், கோவில்பட்டி

0 செண்பக விலாஸ் ரைஸ் மில், கோவில்பட்டி

0 விஜயலட்சுமி ரைஸ் மில், கோவில்பட்டி

0 இராமலிங்கா ரைஸ் மில், கோவில்பட்டி

0 மகாலட்சுமி ரைஸ் மில், கோவில்பட்டி

# சிதம்பரனார் மாவட்டத்தில் மருத்துவத் துறை வளர்ச்சி

டாக்டர் செ. பிளாரன்ஸ் ஆவிஸ்,
மாவட்ட மருத்துவ அலுவலர்,
சிதம்பரனார் மாவட்டம்.

சிதம்பரனார் மாவட்டம் மலர்ந்து ஓராண்டு முடிந்து இரண்டாவது ஆண்டில் அடி எடுத்து வைத்துள்ளது. கடந்த காலச் சாதனைகளைத் தன்னகத்தே பெருமையுடன் அடக்கி வருங்காலச் சாதனைகளை நிகழ்த்திக் காட்டத் தன்னைத் தயார்ப் படுத்தி நடை போடக் காத்திருக்கும் சிதம்பரனார் மாவட்டத்தில், மருத்துவத்துறையின் வளர்ச்சியை ஈண்டு குறிப்பிடுவது இம்மாவட்டத்தின் எண்ணற்ற சிறப்புப் பணிகளில் ஒன்றாகும்.

சிதம்பரனார் மாவட்டத்தில் கீழ்க்கண்ட இடங்களில் அரசு மருத்துவமனைகள் செயல்பட்டு வருகின்றன.

| | படுக்கைகள் |
|---|---|
| அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனை, தூத்துக்குடி | (256+260 படுக்கைகள் புதிய வார்டுகட்டப் பட்டு முடியும் நிலையில் உள்ளன) |

வட்டத் தலைமை மருத்துவமனைகள்:
அரசு மருத்துவமனை

| | | |
|---|---|---|
| 1. | கோவில்பட்டி | 110 |
| 2. | திருச்செந்தூர் | 64 |
| 3. | விளாத்திகுளம் | 56 |
| 4. | ஸ்ரீவைகுண்டம் | 20 |
| 5. | ஒட்டப்பிடாரம் | 6 |
| 6. | சாத்தான்குளம் | 6 |

வட்டம் அல்லாத மருத்துவமனைகள்:
அரசு மருத்துவமனை

| | | |
|---|---|---|
| 1. | காயல்பட்டினம் | 49 |
| 2. | எட்டையபுரம் | 36 |
| 3. | காலன்குடியிருப்பு | 12 |

தூத்துக்குடியிலுள்ள மாவட்டத் தலைமை மருத்துவமனை வளாகத்திற்குள் மாவட்டக் காசநோய் அலுவலரின் தலைமையகமும் மற்றும் மருத்துவச் சிகிச்சை நிலையமும் உள்ளன. அவருடைய கட்டுப்பாட்டின் கீழ் இரண்டு பிசிஜி குழுக்கள் மாவட்டத்தில் செயல்பட்டு வருகின்றன. மேலும் சித்த ஹோமியோபதி வைத்திய முறையும், மாவட்ட சித்த மருத்துவ அலுவலரின் கட்டுப்பாட்டின்கீழ் இத்தலைமை மருத்துவமனை வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. அதேபோல் மாவட்டத் தலைமை மருத்துவமனை வளாகத்திற்குள் மாவட்டத் தொழுநோய் அலுவலரின் தலைமையகமும், தொழுநோய்ப் பிரிவும் செயல்பட்டு மக்களுக்குச் சேவை புரிந்து வருகின்றன. கோவில்பட்டி சீருடையார்புரத்தில் அரசினர் தொழுநோய்க் கட்டுப்பாட்டு நிலையங்கள் உள்ளன. ஒவ்வொரு நிலையத்திலும் ஜீப் ஒன்று (தனித்தனியாக) வழங்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத் தலைமை மருத்துவமனை 1870ல் நகராட்சியால் ஒரு சிறிய மருந்தகமாக ஆரம்பிக்கப்பட்டு 1874ல் ''பெரைரா மருத்துவமனையாக'' நகரின் முக்கிய வீதியான கிரேட் காட்டன் ரோட்டில் செயல்பட்டு வந்தது.

பல்வேறு வளர்ச்சிக்குப்பின் நவீன வசதிகளுடன் திருநெல்வேலி சாலையில் புதிய மருத்துவமனை கட்டுவதற்கு ரூ. 15.95 இலட்சம் ஒதுக்கி அரசு ஆணை பிறப்பித்தது இந்தப் புதிய மருத்துவமனை 1955ல் இருந்து பழைய கட்டடத்திலிருந்து மாற்றப்பட்டு செயல்பட ஆரம்பித்தது. 1954 வரை 60 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனை 1955ல் 100 படுக்கை வசதியுடனும், 1961ல் 130 படுக்கை வசதியுடயும் பெருகிற்று. இப்படியாக மக்களின் சேவைக்காக நாளுக்குநாள் வளர்ந்து வந்த மருத்துவமனை 12.12.1968 மாவட்டத் தலைமை மருத்துவமனையாக வளர்ந்து பெருகியது. அந்நாள்வரை மாவட்ட மருத்துவமனை பாளையங்கோட்டையில் செயல்பட்டு வந்தது. தற்போது 256 படுக்கை வசதிகளுடன் இம்மாவட்ட மருத்துவமனை செயல்பட்டு வருகிறது.

மக்களுக்குச் செய்யவேண்டிய மருத்துவக் கடமையைக் கண்ணுற்ற அரசு தற்போது மேலும் 260 படுக்கை வசதிகளுடன் நவீன வசதியுடன் கூடிய மருத்துவப் பகுதியை ரூ. 42 இலட்சம் செலவில் கட்டுவதற்கு ஆணை பிறப்பித்துள்ளது. இது சம்பந்தமான கட்டடப்பணியில் 98% வேலைகள் முடிந்து விட்டன.

தற்போது மாவட்டத் தலைமை மருத்துவமனையில் இயங்கிவரும் 256 படுக்கை வசதிகள் கீழ்க்கண்ட பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு நோயாளிகளுக்குத் தரமான சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன.

| | படுக்கைகள் |
|---|---|
| ஆண்கள் மருத்துவம் | 28 |
| ஆண்கள் அறுவை | 20 |
| பெண்கள் மருத்துவம் | 14 |
| பெண்கள் அறுவை | 16 |
| காசநோய் | 25 |
| தொத்துநோய் | 6 |
| தொழுநோய் | 20 |
| அறுவைச் சிகிச்சைக்குப்பின் கவனிப்புப் பிரிவு | 10 |
| பேறுகாலப் பின் கவனிப்புப் பிரிவு | 55 |
| பேறுகாலப் பிரிவு | 20 |

சிதம்பரனார் மாவட்ட முதல் ஆண்டு நிறைவு விழாவுக்கு எங்களது மனமார்ந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்

1. ஸ்ரீ நாராயணசாமி தியேட்டர், கோவில்பட்டி
2. ஸ்ரீ இராமசாமி தியேட்டர் கோவில்பட்டி
3. மூர்த்தி தியேட்டர், கோவில்பட்டி
4. சரஸ்வதி தியேட்டர், கோவில்பட்டி
5. பாரதமாதா தியேட்டர், கோவில்பட்டி
6. பாலசுப்பிரமணியம் தியேட்டர், கழுகுமலை

| | |
|---|---|
| குழந்தைகள் பிரிவு | 6 |
| தொழிலாளர் ஈட்டுறுதிப் பிரிவு | 10 |
| 'பி' வகுப்பு | 4 |
| 'சி' வகுப்பு | 12 |
| விபத்து மற்றும் அவசரப்பிரிவு | 10 |
| மொத்தம் | 256 |

இத்தலைமை மருத்துவமனையில் சிறப்புப் பிரிவுகளும் இயங்கி வருகின்றன.

மருத்துவம் (குடிமுறை மருத்துவர் பணியில் உள்ளார்) அறுவை முழுவசதியுடன் கூடிய ஊடுருவி கதிர்நிலையம் (மின் இதயமானிப் பிரிவுடன்) பல் மருத்துவம், காது, மூக்கு, தொண்டை, கண். எலும்பு முறிவு, மனநோய் இரத்த வங்கி மாவட்டப் பொதுச் சுகாதார ஆய்வுக்கூடம், தோல் பால்வினை நோய் குழந்தை நலம் (குடிமுறை மருத்துவர் பணியில் உள்ளார், காசநோய் மருத்துவம் மாவட்டக் காசநோய் அலுவலர் உள்ளார்) பேறுகாலப்பின்கவனிப்பு, விபத்து மற்றும் அவசரக்காலப் பகுதி.

விபத்து மற்றும் அவசரக்காலத்திட்டப் பணியின் கீழ், விபத்துக்குள்ளானவர்கள், மற்றும் ஒரு அரசு மருத்துவமனையில் உள்ள நோயாளி ஆபத்து நிலையில் உள்ளபோது மேல் மருத்துவ உதவி தேவைப்படும் அவசர நிலை போன்றவற்றிற்கு உள்ளானோர் எந்த விதமான வருமான வரம்பின்றி அனைவருக்கும் இலவசமாக ஆம்புலன்ஸ் வசதி செய்து கொடுக்க அரசு ஆணை பிறப்பித்தது. இதைச் சென்னையிலுள்ள மருத்துவத்துறை இயக்குநரகம் உடனடியாக அமல்படுத்தியது. இத்திட்டத்தின் கீழ் ஆம்புலன்ஸ் ஊர்திகள், தூத்துக்குடி, கோவில்பட்டி, திருச்செந்தூர் அரசினர் மருத்துவமனைகளில் இயங்கி வருகின்றன.

மேற்கண்ட சிறப்புப் பிரிவுகள் தவிர, இத்தலைமை மருத்துவமனையில் பீடி மற்றும் கைத்தறி நெசவாளர்களுக்கு, மாவட்ட அளவில் விரிவான காசநோய் நலத்திட்டம் இயங்கிவருகிறது. ஊடுகதிர்கருவி (எக்ஸ்ரே) பொருத்தப்பட்ட ஊர்தியும், ஜீப் —ஒன்றும் இது சம்பந்தமான பணிகள் செய்ய ஒதுக்கப்பட்டுள்ளன.

**குடியிருப்பு வசதிகள்**

இத்தலைமை மருத்துவமனை வளாகத்திற்குள் செவிலியர் குடியிருப்பு தனியாகவும் இரண்டு உதவி மருத்துவர்களுக்கும், பன்னிரண்டு உதவிச் செவிலியர்களுக்கும் மற்றும் எட்டு கடைநிலை ஊழியர்களுக்கும் குடியிருப்பு உவசதிகள் உள்ளன. மேலும் மாவட்ட மருத்துவ அதிகாரிக்கு ரூ. 2.60 இலட்சத்தில் தனியாக ஒரு குடியிருப்பு அனுமதிக்கப்பட்டு கட்டட வேலை முடிந்து கடந்த 11.9.87ல் இம்மருத்துவத்துறையால் பெற்றுக் கொள்ளப்பட்டது.

**புதிய கட்டடங்கள்**

அதிகப்படியான 260 படுக்கைகளுடன் குளிர்சாதன வசதி பொருந்திய அறுவை அரங்கு, மின்தூக்கி போன்ற நவீன வசதிகளுடன் ரூ. 12 இலட்சத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன் கட்டட வேலைகள் 98 விழுக்காடுகள் முடிந்துவிட்டன.



**தீவிர சிகிச்சைப் பகுதி**

4 படுக்கைகளுடன் கூடிய தீவிர சிகிச்சை பகுதி குளிர்சாதன வசதியுடன் ரூ. 1.20 இலட்சத்தில் அனுமதிக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இம்மருத்துவமனை வளாகத்திற்குள் தொழுநோய் அலுவலகக் கட்டிடம் தற்போதுள்ள தொழுநோய் பகுதிக்கு மேல் கட்டப்பட்டு பொதுப்பணித்துறையினரால்21.3.87ல் ஒப்படைக்கப்பட்டது.

இத்தலைமை மருத்துவமனையின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு 'உயர்மின் அழுத்த வசதி' செய்து கொடுக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அதற்கான கட்டுமானப்பணி நடைபெற்று வருகிறது.

**நவீன சமையல் கூடம்**

இத்தலைமை மருத்துவமனையில் நவீன சமையல்கூடம் கட்டுவதற்கு ரூ.1.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**அரசு மருத்துவமனை, திருச்செந்தூர்**

அரசு மருத்துவமனை திருச்செந்தூரில் 8 படுக்கைகள் கொண்ட கண் பகுதியும், 6 படுக்கைகள் கொண்ட பேறுகாலப் பகுதியும் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்தினரால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட தொகை ரூ.4.13 இலட்சத்தில் கட்டப்பட்டுள்ளது. 8.1.86ல் கட்டடம் முடிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டது. தேவையான மருந்துகள், நவீன கருவிகள், துணிகள், மரஅணிகள் வாங்கப்பட்டு பகுதிகள் ஆரம்பிக்கும் தறுவாயில் உள்ளது.

**அரசினர் மருத்துவமனை, காயல்பட்டினம்**

அரசினர் மருத்துவமனை, காயல்பட்டினத்தில் ரூ. 8 லட்சத்தில் 24 படுக்கைகள் கொண்ட பகுதி, ஊடுருவு கதிர்ப் பகுதி, மற்றும் பரிசோதனைக்கூடம் ஆகியவை அனுமதிக்கப்பட்டு கட்டடம் 20.9.85ல் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இப்பகுதிக்குத் தேவையான பணியாளர்கள், மருந்துகள், உபகரணங்களுக்கான அனுமதி ஆணை அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

| நிதி ஒதுக்கீடு | 1987-88 |
|---|---|
| மருந்துகள் | 31 இலட்சங்கள் |
| உபகரணங்கள் | 2.6 ,, |
| உணவு | 9.76 ,, |
| மருத்துவமனைத் தேவைகள் | 3.80 ,, |
| துணிகள் | 1.16 ,, |

சிதம்பரனார் மாவட்ட
ஓராண்டு நிறைவு விழா

எமது நல்வாழ்த்துக்கள்

# நெல் அரிசி மொத்த வியாபாரிகள்

தூத்துக்குடி டவுன்

# தண்ணீர் பற்றாக்குறையை நீக்க...

**பி. சி. மாரிமுத்து** மாவட்ட ஆட்சித் தலைவரின்
நேர்முக உதவியாளர், சிதம்பரனார் மாவட்டம்

**1986**-இல் மலர்ந்த இந்த மாவட்டம், 2 வருவாய்க் கோட்டங்கள், 7 வட்டங்கள், 12 வட்டார வளர்ச்சிப் பகுதிகள், 20 பேரூராட்சிகள், 2 நகராட்சிகள், 466 வருவாய்க் கிராமங்கள் உடையதாக அமைக்கப்பட்டுள்ளது. இவைகளில் 5 வட்டங்கள் முற்றிலும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன. இதர 2 வட்டங்களும் 60 சதவீதம பாதிக்கப்பட்டுள்ளன. மழையினால் பாசனம் கொடுக்கக் கூடிய 581 குளங்களும், ஆற்றுநீர் வரத்தால் பாசனம் கொடுக்கக் கூடிய 64 பெரிய குளங்களும் உள்ளன. ஏறத்தாழ 26 ஆயிரம் எக்டேர் நஞ்சை நிலச் சாகுபடியும், 3.5 இலட்சம் எக்டேர் புஞ்சை, மானாவாரி சாகுபடி செய்ய வாய்ப்புள்ள நிலங்களும் இருக்கின்றன.

1982-ஆம் ஆண்டு முதல் மழையின் அளவு வெகுவாகக் குறைந்து விட்டது. சராசரி 700 எம்.எம. அளவு பெய்யக்கூடிய மழை 1986இல் 325 எம்.எம். அளவே பெய்துள்ளது. 1987-இல்மேற்குப் பருவ காற்று மழை தவறிவிட்டது. தொடர்ந்து மழை பொய்த்து விட்டதால் நீரின அளவு (வாட்டர்டேபிள்) கீழே இறங்கிவிட்டது. அதனால் குளம் ஏரி, கிணறு, பம்புகள், ஆழ்குழாய்க் கிணறுகள் ஆகிய நர் நிலைகள் அனைத்தும் வறண்டு விட்டன. எங்கு நோக்கினும் நீரில்லாப் புழுதியாகக் காட்சி அளிக்கிறது. கடுமையான வறட்சியின் சின்னமாகப் பனை மரங்கள் கூட வாடி வதங்கிய நிலையில் நிற்கின்றன. விவசாயம் பெரிய அளவில் பாதிக்கப்பட்டதோடு குடி தண்ணீர்ப் பற்றாக்குறையும் மேலோங்கிவிட்டது.

குடிநீரை உடனடியாக வழங்குவதற்கும், பாதிக்கப்பட்ட விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுப்பதற்கும், தமிழக அரசு போர்க்கால அடிப்படையில் திட்டங்களை வகுத்து, தீவிரமாகச் செயல்படுத்தி வருகிறது. நிதி ஒதுக்கீடு செய்து தனி அலுவலர்களையும் நியமித்து வறட்சிப் பணி செயல் திட்டத்தை நிறைவேற்றி வருகிறது. இந்த மாவட்டத்தை வறட்சி நிவாரண சிறப்பு ஆணையர் மற்றும் மத்தியக் குழுவினர் பார்வை யிட்டுள்ளனர்.

சிதம்பரனார் மாவட்டத்தின் ஆட்சித்தலைவர் திரு வெ. ஆறுமுகம், இ.ஆ.ப., அவர்களின் தீர்க்கமான திட்டத்தினாலும், அறிவுரையினாலும் ஏழை, எளிய மக்களுக்கு உடனடியாகப் பயன் தரும் திட்டப்பணிகள், வேலை வாய்ப்புப் பணிகள், 24 மணி நேரத்திற்குள் குடிநீர் வழங்கும் தீவிர செயல்முறைகள் ஆகியவற்றை அமைத்து அல்லும் பகலும் கிராமங்கள் தோறும் சென்று அயராது பணியாற்றி வறட்சி நிவாரணப் பணிகளை நிறைவேற்றுவதில் தொய்வு ஏற்படாமல் இருப்பதற்கு மண்டல மேற்பார்வையாளர்களை நியமித்துப் பணியாற்றிவருகிறார்கள். பணிகள் வாரந்தோறும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களினால் ஆய்வு செய்யப்படுகிறது. அனைத்துத் துறைகளைச் சார்ந்த அலுவலர்களின் குழுவோடு, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கிராமங்கள் தோறும் சென்று வறட்சி நிவாரணப் பணிகளை நேரிடையாகப் பார்வையிட்டுக் குறைகளைக் களைந்து அறிவுரை வழங்குவதோடு, மக்களின் குறைகளைத் தெருத்தெருவாகச் சென்று கேட்டறிந்து அந்த இடத்திலேயே உத்தரவு பிறப்பித்து உடனுக்குடன் நிறைவேற்றும்படி அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டு வருகிறார்கள்.

**குடிநீர்:** ஏறத்தாழ 600-க்கும்



சிதம்பரனார் மாவட்டம்
ஓராண்டு நிறைவு விழாவிற்கு
எங்கள் நல்வாழ்த்துக்கள்



**திருச்செந்தூர் வட்ட நெல் - அரிசி**
**மொத்த வியாபாரிகள் சங்கம்**



**சிதம்பரனார் மாவட்டத்திலுள்ள அரசுத்துறை மற்றும் தனியார்துறை நிறுவனங்களுள் 1986-87-ல் ரூ.8.50 இலட்சம் சிறு சேமிப்புத் திட்டத்தில் முதலீடு செய்து முதலிடம் வகித்த தூத்துக்குடி கத்தோலிக்க திருச்சபை மறை மாவட்டம் சார்பாக மறைத்திரு ராபின்ஸ்டன் 15-8-1987 அன்று நடைபெற்ற சுதந்திர தின விழாவின்போது மாவட்ட ஆட்சித்தலைவர் திரு ரெ. ஆறுமுகம் அவர்களிடம் திரு மணிராஜ்குமார் அன்பளிப்பாக வழங்கிய சுழற்கேடயத்தைப் பெற்றுக் கொண்டார்.**

மேற்பட்ட குடிநீர்க் கிணறுகள், 2,158 கைப்பம்புகள், 377 விசையிறைப்பான்கள், 399 மேல்நிலை குடிநீர்த் தொட்டிகள் உபயோகத்தில் இருக்கின்றன. ஆனால் மழையின்மையினால் இவைகள் அனைத்தும் நீரின்றி வறண்டுவிட்டன.

**புதிய ஆழ்குழாய்க் கிணறு;** குடிதண்ணீர் உடனடியாக வழங்குவதற்கு ஏதுவாக 575 புதிய ஆழ்குழாய்க் கிணறுகளை அமைப்பதற்கு 3 கட்டமாக ஒதுக்கீடு பெறப்பட்டது. ஊராட்சிப் பகுதிகளுக்கு 450-ம், கிராமப் பேரூராட்சிக்கு 20-ம், நகரப் பேரூராட்சிக்கு 94-ம், நகராட்சிகளுக்கு 11-ம் என்ற வீதத்தில் பிரித்துக் கொடுக்கப்பட்டு, 460 வேலைகள் பூர்த்தியாகிவிட்டன. எஞ்சிய பணிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. விரைவில் முடித்துவிடுவார்கள். இந்தப் பணியை மாசார்பட்டி போன்ற கிராமங்களில் 4 மணி நேரத்தில் செய்து முடித்துள்ளனர். மத்திய குழுவினர் இந்தப் பணியைநேரில் பார்வையிட வாய்ப்புஏற்பட்டது.

**புதிய கிணறு:** ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சிப் பகுதிகளில் புதிய கிணறுகளை அமைப்பதற்கு ரூ. 16.10 இலட்சம் மூன்று கட்டமாக நிதி பெறப்பட்டுள்ளது. 62 கிணறுகள் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. 40 கிணறுகள் முடிவு பெற்றுள்ளன. மீதமுள்ள பணிகள் துரித முன்னேற்றத்தில் உள்ளன. குறிப்பாகத் தாப்பாத்தி என்ற கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள கிணறு மத்தியக் குழுவினரால் பாராட்டப்பட்டுள்ளது.

**கிணறுகளை ஆழப்படுத்துதல்:** வறண்டு கிடக்கும் கிணறுகளை தூர் எடுத்து ஆழப்படுத்தும் பணிக்காக 3 கட்டமாக ரூ. 7.82 இலட்சம் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. 379 கிணறுகளை ஆழப்படுத்தும் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு 275 பணிகள் முடிக்கப்பட்டன. மீதமுள்ள 95 பணிகள் துரித முன்னேற்றத்தில் உள்ளன. குறிப்பாக சென்னமரெட்டிபட்டி என்ற கிராமத்தில் தூர் எடுத்து ஆழப்படுத்தியதால் ஏற்பட்ட தண்ணீர்ப் பெருக்கு மத்திய குழுவினரால் பாராட்டப்பட்டது.

**உறை கிணறு:** கடலோர கிராமங்களில் அதிக ஆழமான கிணறு அமைத்தால் உப்புத் தண்ணீர் வரும் என்பதால் சிறிய ஆழங்கொண்ட உறை கிணறுகள் அமைப்பதற்கு ரூ. 4.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. 77 வேலைகள் மேற்கொள்ளப்பட்டதில் 40 பணிகள் முடிந்துவிட்டன. மீதமுள்ள 37 வேலைகளும் துரிதமாக நடைபெற்று வருகினறன.

**லாரி மூலம் குடிதண்ணீர்:** நீர்நில ஆதாரங்களில்ருந்து குடிதண்ணீர் பெறுவதற்குச் சிறிதும் வாய்ப்பில்லாத 107 கிராமங்களுக்குக் குடிதண்ணீர் லாரி மூலம் வழங்கப்பட்டு வருகிறது. இதுவரையில் 21,600 நடைகள லாரி மூலம் வழங்கப்பட்டுள்ளன. நிதி ஒதுக்கீடு ரூ. 35.25 இலட்சம் பெறப்பட்டுள்ளது.

**குழாய்க் கிணறுகளைப் பழுது பார்த்தல்:** ஆழ்குழாய்க் கிணறுகள பழுதுபட்டிருப்பின் அவைகளை உடனுக்குடன் சரிசெய்து இயங்க வைப்பதற்கு, நிரந்தர அலுவலர்களும் பறக்கும் படை அலுவலர்களும் சுறுசுறுப்புடன் பணியாற்றி வருகிறார்கள். இந்தப் பணிக்காக ரூ. 2 இலட்சம நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

**தனி பீடர் லைன்:** நகராட்சிப் பகுதிகளில் தனி பீடர் லைன் அமைக்கும் பணிக்கு ரூ. 2 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வேலைகள்நடைபெற்று வருகின்றன.

**கூட்டுக் குடிநீர்த் திட்டம்:**

சிதம்பரனார் மாவட்டம் ஓராண்டு நிறைவு விழா

எமது நல்வாழ்த்துக்கள்



# பருப்பு மற்றும் தானிய மொத்த

# வியாபாரிகள், தூத்துக்குடி டவுன்

பேரூராட்சி பகுதிகளில் கூட்டுக் குடிநீர்த் திட்ட வேலைகளுக்கு ரூ. 3 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

**விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு:** இந்த மாவட்டத்தில் 75 சதவீதம் தொழிலாளர்கள் விவசாயத் தொழிலையே நம்பியுள்ளனர். இந்தத் தொழில் கடுமையாகப் பாதிக்கப்பட்டதால் அதில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு வேலை கொடுத்து குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற அடிப்படையில் ரூ. 72.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. இதில் ஊராட்சி ஒன்றியம், நகராட்சி, பேருராட்சி, பொதுப்பணித்துறை, விவசாயப் பொறியியல் பிரிவு தாமிரபரணி பொதுப்பணி பிரிவு ஆகியவைகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. ஊராட்சி ஒனறியங்களுக்கு ரூ. 45 இலட்சம் நிதி மூனறு கட்டமாக ஒதுக்கப்பட்டு, சிறு பாசன குளங்களைத் தூர் எடுத்து ஆழப்படுத்துதல், ஓடைகள், ஊரணி, தணணீர் வரத்துக் கால்வாய்கள் போன்றவைகளில் தூர் எடுத்து ஆழப்படுத்துவதற்காக ரூ. 518 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. 400 பணிகள் முடிவு பெற்றுள்ளன. மீதமுள்ள பணிகள் துரித முன்னேற்றத்தில் உள்ளன.

பொதுப்பணித்துறையின் மூலம் நீர்ப்பாசனக் குளங்களைத் தூர் எடுத்து ஆழப்படுத்தும் பணக்கு ரூ. 7 இலட்சம் நதி ஒதுக்கீடு பெறப்படடு 44 பணிகள எடுத்துக் கொள்ளப்பட்டன. 34 பணிகள் முடிக்கப்பட்டு, மீதிப்பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது. ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சிகள் மூலம், கசிவுநீர்க் குட்டைகள் அமைப்பதற்கும் குடிநீர் ஆதாரமான தண்ணீர் தேக்கக் குளங்கள் அமைப்பதற்கும், வீணாகப்போகும் தண்ணீரைத் தேக்கி வைப்பதற்குத் தடுப்புச் சுவர் கட்டுவதற்கும் ரூ.7.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 25 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன.

விவசாயப் பொறியியல் பிரிவு அலுவலகத்தால் விவசாயக் கிணறுகளில் நீர்ப்பிடிப்பு அதிகப்படுத்தும் வகையில் கசிவு நீர்க்குட்டைகள் அமைப்பதற்கும், 'வெட்டாம்' கட்டுவதற்கும் சமுதாய நீர்ப்பாசனக் கிணறுகள் அமைப்பதற்கும் ரூ. 8 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. 4 கசிவு நீர்க் குட்டைகளும், 4 சமுதாயக் கிணறுகளும் முடிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக மாசாம்பட்டி கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள கசிவு நீர்க் குட்டையும், விளாத்திக்குளம் கிராமம் பெரிய குளத்தில் அமைக்கப்பட்டுள்ள சமுதாய நீர்ப்பாசனக் கிணறும், மத்திய வறட்சிக் குழுவினரின் பாராட்டுதலைப் பெற்றுள்ளன. தாமிரபரணி பொதுப்பணிப் பிரிவிலுள்ள பாசனக் குளங்களையும, கால்வாய்களையும் தூர் எடுத்து ஆழப்படுத்துவதற்கு ரூ. 5 இலட்சம் நிதி பெறப்பட்டதுள்ளது. 22 பணிகள் எடுக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

மானிய விலையில், உரம், விதைகள் விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகிறது. போதிய விதைகள் கையிருப்பில் உள்ளன. உணவுத் தட்டுப்பாடு இல்லை. வங்கிகள் மூலம் கடனுதவி பெறவும், குறுகிய கால விவசாயக் கடனை நீண்டகாலக் கடனாக மாற்றுவதற்கும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். நிலவரி செஸ், செஸ் சர்சார்ஜ் போன்ற இனங்களில் ரூ. 36.72 இலட்சம் ரத்து செய்ய அரசுக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

இந்த மாவட்ட வறட்சி நிவாரணப் பணிகளுக்கு இதுவரையில் ரூ. 147.92 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. தொடர்ந்து வறட்சி நிலை நீடிக்குமானால் எஞ்சிய பணிகளை நிறைவேற்ற ரூ. 173 இலட்சம் கூடுதல் நிதி ஒதுக்கீடுக்கு கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

*With Best Compliments From:*



Telex: (434)204 SOMA IN

Estd. 1985

Phone: Off. 20110

Cable: 'MUNICSANKA'

Res. 20905

**Messrs. P.S.S. EXPORTS**

*Senna, Crude Drugs & Marine Products Exporters*

**52, P. S. S. Nadar Street,**

**TUTICORIN - 628 001**

**South India**

போன் : 20285, 20690

# தி. ஆறுமுகம் பிள்ளை

**ஜவுளிப் பெருங்கடல்**

**தூத்துக்குடி-2**



சிதம்பரனார் மாவட்ட முதல் ஆண்டு

நிறைவு விழாவிற்கு எங்கள் மனமார்ந்த

வாழ்த்துக்கள்

**கே.ஆர்.டி. சிவத்தையா நாடார் & கம்பெனி**
நெல், அரிசி வியாபாரம், கோவில்பட்டி

**பி. கிருஷ்ணன் செட்டியார்**
நெல், அரிசி வியாபாரம், கோவில்பட்டி

**அ. செல்லையா நாடார்**
நெல், அரிசி வியாபாரம், கோவில்பட்டி

**ஏ.என். நாராயணசாமி**
நெல், அரிசி வியாபாரம், கோவில்பட்டி

**எஸ்.எஸ்.டி. துரைசாமி நாடார் & சன்ஸ்**
நெல், அரிசி வியாபாரம், கோவில்பட்டி

**ஏ.பி. காசி நாடார் & சன்ஸ்.**
நெல், அரிசி வியாபாரம், கோவில்பட்டி

**அரசன் & கோ**
பெட்ரோல் பங்கு. கோவில்பட்டி

# சிதம்பரனார் மாவட்டத்தின் சிறப்பு

**சீனு. அரங்கநாதன்,**
**கோட்ட ஆட்சித் தலைவர்**
**தூத்துக்குடி**

சிதம்பரனார் மாவட்டத்திலுள்ள கோவில்பட்டி கோட்டத்தில் தான் செக்கிழுத்த செம்மல் தியாகி வ.உ.சிதம்பரனார் அவர்கள் பிறந்த ஊர் ஓட்டப்பிடாரம் வட்டத்தில் உள்ளது.

அத்துடன் அவர்களுக்கு முன்னதாகவே, ''வானம் பொழியுது, பூமி விளையுது, உனக்கேன் தரவேண்டும் வரி?'' என்று வெள்ளைக்காரனைப் பார்த்து வெற்றிமுழக்கமிட்டு வீரமரணமடைந்த வீரபாண்டிய கட்டபொம்மன் கோட்டையும் தூக்குமேடையும் பாஞ்சாலங்குறிச்சியிலும், கயத்தாறிலும் உள்ளன. வெள்ளைக்கார ஆதிக்க வெறி பிடித்த கலெக்டர் ஆஷ்துரையை சுட்டுக்கொன்று தானும் தற்கொலை செய்து கொண்ட வீரத்தியாகி வாஞ்சிநாதன் பிறந்ததும் இதே மண்ணில் தான்.

அதேபோல் பாட்டிலே வீரத்தைக் கொட்டி ''ஆடுவோமே பள்ளுப்பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோமென்று'' என்று பல்லாயிரம் பாடல்களைப் பாடிய தேசியக்கவி, தீர்க்கதரிசி சுப்பிரமணியபாரதியார் வாழ்ந்த எட்டையபுரம் இருப்பதும் கோவில்பட்டி வட்டத்தில்தான்.

இதே எட்டயபுரத்தில்தான் சங்கீத வித்பன்னர் முத்துசாமி தீக்ஷிதர் அவர்களும் உமறுப்புலவர் அவர்களும் தங்கள் இறுதி நாட்களைக் கழித்துத் தங்கள் பூத உடலை விட்டுச் சென்றுள்ளனர். இவர்கள், இருவருடைய சமாதிகளும் இங்கு உள்ளன.

தூத்துகுடி கோட்டத்திலே தூத்துக்குடி ஸ்ரீவைகுண்டம், திருச்செந்தூர், சாத்தான்குளம் ஆகிய நான்கு வட்டங்கள் உள்ளன. இவற்றில் தூத்துக்குடி ஒன்றுதான் நகராட்சி. தூத்துக்குடி வட்டத்தில் மன்னார் வளைகுடாவுக்குத்தான் முதல் சிறப்பு. இங்குள்ள பழைய துறைமுகத்தில்தான் முதன்முதலாக வெள்ளையர் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து சுதேசிக் கப்பலைவிட்டு ''கப்பலோட்டியதமிழன்'' என்ற சிறப்புப் பெயர் பெற்றார் சிதம்பரனார். இந்த இடத்தில்தான் 40வது சுதந்திர தினத்தை முன்னிட்டு புனித மண் எடுத்து தியாகிகள் திரு சோமயாஜுலு மற்றும் திரு கிருஷ்ணசாமி பாரதி ஆகியோர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டு சென்னைக்குக் கொண்டு சென்றனர். இந்த இடம் தற்போது மீன்பிடிக்கும் துறைமுகமாகப் பயன்பட்டு வருகிறது. இதை அடிப்படையாகக்கொண்டு தான் புதிய துறைமுகத்தை உருவாக்கி சிறப்போடு செயல்படுத்தி வருகிறார்கள்.



துறைமுகத்தை அடுத்து அனல்மின் நிலையமும், அதற்கு அருகிலேயே ஸ்பிக் நிறுவனமும், பக்கத்தில் ட்டாக் இரசாயன தொழிற் சாலையும், கனரக நீர் நிலையமும், தூத்துக்குடிக்கு சிறப்பையும் வளத்தையும் சேர்க்கின்றன.

உணவுக்கு முக்கியமானது உப்பு. இந்த உப்பை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளும், தொழிலாளர்களும் இங்கு அதிகம். அதற்கு அடுத்து மீன் தொழிலும் சிறந்து விளங்குகிறது.

அடுத்துள்ள ஸ்ரீவைகுண்டம் வட்டத்தில் தான் வைணவச் சிறப்புமிக்க நாலாயிர திவியபிரபந்தத்தை நாட்டுக்களித்த நம்மாழ்வார் தோன்றிய ஆழ்வார்திருநகரியும் அவரால் ஏற்றம் பெற்ற நவதிருப்பதிகள் என்று சிறப்புப்பெற்ற கீழ்க்கண்ட திருத்தலங்களும் தாம்பிரபரணி நதிக்கரையில் உள்ளன.

ஸ்ரீவைகுண்டம், திருப்புளியங்குடி, வரகுணமங்கை என்னும் நத்தம், பெருங்குளம், ஆழ்வார்திருநகரி, தென்திருப்பேரை, திருக்கோளூர், இரட்டைத் திருப்பதி

இவற்றிற்கு அண்மையில் மாண்புமிகு சுற்றுலா வளர்ச்சி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் வருகை தந்தபோது இத்திருக்கோயில்களை சுற்றுலா மையமாக ஆக்கி இவற்றின் சிறப்பை உலகறியச் செய்ய வேண்டுமென்று பணித்துள்ளார்கள்.

இதனை அடுத்து அக்காலத்தில் பாண்டிய மன்னர்களின் துறைமுகமாக இருந்து காலப் போக்கிலே கடல் குறைந்து நிலப்பகுதி அதிகமாகியுள்ள சுற்றுலா சிறப்புப் பெற்ற ''கொற்கை'' என்ற இடமும் இங்குதான் உள்ளது. அண்மையிலே ''கொற்கை'' விழாவுக்கு வருகைதந்த மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு சட்ட மன்றப் பேரவைத்தலைவர் திரு பி. எச். பாண்டியன் முன்னிலையில் கொற்கையை சுற்றுலா மையமாக அறிவித்துள்ளார்கள்.

## சிதம்பரனார் மாவட்டம் ஓராண்டு நிறைவு விழா

எமது நல்வாழ்த்துக்கள்

**மெஸர்ஸ் சுசீ ஆட்டோ லிமிடெட்**
இண்டியன் ஆயில் கார்ப்பரேஷன் டீலர்
தூத்துக்குடி

**மெஸர்ஸ் சித்ரா ஏஜென்ஸிஸ்**
இந்துஸ்தான் பெட்ரோலியம் டீலர்
தூத்துக்குடி

**மெஸர்ஸ் முத்துவேல் அன் சன்ஸ்**
இந்துஸ்தான் பெட்ரோலியம் டீலர்
தூத்துக்குடி

# நெல்-அரிசி சில்லரை வியாபாரிகள்

வ.உ.சி. மார்க்கட்

தூத்துக்குடி

# தச்சுக்கொல் உற்பத்தி நிலையம்
# நல்லூர்

திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றியம், சிதம்பரனார் மாவட்டம்

அன்புடையீர்,

திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த நல்லூர் தச்சுக்கொல் உற்பத்தி நிலையத்தில் அலுவலகத்திற்குத் தேவையான மேஜை நாற்காலி முதலிய தள வாடங்களும் பள்ளிகளுக்கு தேவையான பெஞ்சு, டெஸ்க், கரும்பலகை முதலியனவும் கட்டிட வேலை சம்பந்தப்பட்ட நிலை ஜன்னல் முதலியனவும் மற்றும் இல்லத்திற்கு தேவை யான சோபா, கட்டில் முதலியனவும் நாகரீகமான முறையில் குறைந்த விலையில் செய்து கொடுக்கப்படும். தேவைக்கு ஆணையாளர் முகவரிக்கு எழுதவும்.

எஸ். கந்தசாமி, பி.ஏ.,
ஆணையாளர்
ஊராட்சி ஒன்றியம்,
திருச்செந்தூர்.

ஏ.எஸ். பாண்டியன்,
பெருந்தலைவர்
ஊராட்சி ஒன்றியம்,
திருச்செந்தூர்.

# தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம்
# தச்சு உற்பத்தி நிலையம்—புதுக்கோட்டை






பொதுமக்களுக்கும் மற்றும் எல்லா அரசு அலுவலகங்களுக்கும் தேவையான பர்னிச்சர்களும், சோபா செட் போன்ற நவீன மரச் சாமான்களும் ஆர்டரின் பேரில் நல்ல முறையில் குறைந்த விலையில் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. ஆகவே பொதுமக்கள் யாவரும் தேவையான பர்னிச்சர்களை எங்களிடம் வாங்கி பயனடைய வேண்டுகிறோம்.

S. பத்மனாபன், DRS
ஆணையாளர்

த. ராமச்சந்திரன், B.A.
திட்ட ஆணையாளர்

M. ஆதிலிங்கம், M.A.B.L.
பெருந்தலைவர்

தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம், புதுக்கோட்டை, சிதம்பரனார் மாவட்டம்.

போன் : 22

# தொல்புகழ் சான்ற கொற்கை மாநகர்

பாண்டிய நாட்டில் தண்பொருநையாம் தாம்பிரபரணி கடலோடு கலக்கும் இடத்தில் பன்னெடுங் காலத்திற்கு முன்னரே புகழ் வாய்ந்த கோநகராகத் திகழ்ந்தது கொற்கைத் துறைமுகப் பட்டினம். ஆத்தூர்-ஏரல் சாலையில் வாழவல்லான் என்னும் சிற்றூருக்கு மூன்று கல் கிழக்கிலும், குமரிக்காட்டுக்கு நான்கு கல் வட கிழக்கிலும் கொற்கை இடம் பெற்றுள்ளது. வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த கொற்கை தென்னிந்திய நாகரிகத்தின் தொட்டிலாகவும் பழந்தமிழ்ப் பண்பாட்டுக் கட்டிலாகவும் மிளிர்கிறது. வெளிநாட்டார் பயணக் குறிப்புகளில் சிறப்பிடம் பெற்ற கொற்கை பழந்தமிழ் இலக்கிய ஏடுகளில் பெரிதும் பாராட்டப்பட்டுள்ளது.

**ஊரும் பேரும்:** அத்தீனிய அரசர் (கி.மு. 1400) பாண்டிய நாட்டுத் துறைமுகத்தை ''கொல்சிசு'' ( Colchis ) எனக் குறித்துள்ளார். தொலீமுது மாந்தரின் கையே



கொல்லும் கருவியாகப் பயன்பட்டது எனவும், கொல் மாந்தரின் கையே "கொற்கை" ஆயிற்று எனவும் அறிஞர் கால்டுவெலார் கழறுகிறார். கடலலைகள் தம் கைகளில் கொல்லும் (தாக்கும்) இடமே கொற்கை என்றும் கூறுவர். தொண்டியும் பூம்புகாரும் சேர, சோழ நாடுகளின் துறைமுகங்களாக விளங்கின. அதுபோன்று கொற்கை பாண்டிய நாட்டுத் துறைமுகமாகத் திகழ்ந்தது. இருபது வகையான ஊர்ப் பெயர்களுள், இருக்கும் இடத்தன்மையால் பெயர்பெற்றது கொற்கை என்பர். "கொற்கு' ( Indian Laburnam ) என்னும் மரத்தின் பெயரோடு தொடர்புடையதாக அறிஞர் பி.எல்.சாமி சுட்டிக் காட்டியுள்ளார்.

"மீனொடு பொலிந்த வானின் தோன்றித்
தேம்பாய்ந்து ஆர்க்கும் தெரியிணர்க
கொற்கின்
காலுறக் கழன்ற கட்கமழ் புதுமலர்"
(நற்றிணை 302)

கொல்லுத் தொழிலால் பெயர் பெற்றது கொற்கை என்பர் புலவர் இளங்குமரன் ("செந்தமிழ்ச்செல்வி" இதழ் 56:1) அணிகலன்களும் உண்கலன்களும் செய்தல் பொதுக் கொல்லுத் தொழிலாகும்; நாணயம் செய்தல் சிறப்புக் கொல்லுத் தொழிலாகும். நவீன வேலையாகிய நாணயத் தொழிற்கூடம் (Mint) உள்ள இடமே 'அக்க சாலையாம்.

**கோவிலும் மேவுபுகழும்:** "அக்கசாலை ஈசுவரமுடையார்" என்று கல்வெட்டில் குறிக்கப்பட்ட திருக்கோவிலைச் சுற்றிப் பதின்மூன்று தெருக்கள் இருந்தனவாம். சேரன் செங்குட்டுவன் காலத்தில் வெற்றிவேற் செழியன் கொற்கை நகரை அரசாண்டான்.

வெற்றிவேற் செழியன் எழுப்பிய கண்ணகி கோவில் செழிய நங்கை அம்மன் கோவிலாக மாறியது! கோவிலருகே உறைகிணறுகளும் மண்பாண்டச் சிதைவுகளும் உள்ளன. ஊராட்சி மன்றத்தருகே சமணச்சிலையும் வன்னி மரமும் அமைந்துள்ளன. ஊரின் வடக்கே குளத்தின் எதிரே காட்சி தரும் அக்க சாலை விநாயகர் கோவில் விநாயகர் திருவுருவின்மீது சூரியக் கதிர்கள் வட, தென் செலவுகளின் போதெல்லாம் விழுவது குறிப்பிடத்தக்கது. திருக்குறுங்குடிக் கல்வெட்டு கொள்கைக்குச் செல்லும் வழியினை மொழிகிறது. திருச்செந்தூர்க் கல்வெட்டு "குடநாட்டுக் கொள்கை" எனக் கூறும் இவ்வூருக்கு மதுராந்தரக நல்லூர்; மதுரோதய நல்லூர் மதிவரோதய நல்லூர் என்னும் பல பெயர்கள் தோன்றியுள்ளன. சோழர் கைப்பற்றியபோது இராசராசப் பாண்டிய நாடாகப் பேசப்பட்ட இப்பகுதி, சோழேந்திர சிம்ம சதுர்வேதி மங்கலம் எனத் திரிந்தது; பாண்டியன் திருவோலக்கம் செய்த காலத்தில் மாறோக்கம் எனத் திகழ்ந்தது; மாறோக்க மண்டிலத்துப் பட்டினம் காலப் போக்கில் மாறமங்கலம் ஆயிற்று!

**வெளிநாட்டார் மொழிந்த செய்தி:** பெரிப்ளுசு என்னும் பயண வழிகாட்டி நூலின் ஆசிரியர் (கி.பி.80) "கொற்கை கன்னியாகுமரிக்கு அப்பால் உள்ள துறைமுகம்: முத்தெடுக்கும் தொழில் தண்டிக்கப்பட்ட குற்றவாளிகளால் செய்யப்படுகிறது. கொற்கை (COLCHAE) பாண்டிய மன்னனைச் சார்ந்தது" எனஎடுத்தியம்பியுள்ளார். 'இடைக்காலப் பயணிகளின் இளவரசர் 'என்று போற்றப்படும் இத்தாலியப் பயணி மார்க்கோபோலோ (1292) சீனப்பேரரசின் சீர்மையினைப் புலப்படுத்தியவர்; அவர் கொற்கையின் பெருமையினைப் பறைசாற்றியுள்ளார்; "பொருநையாறு கடலுடன் கலக்கும் இடத்திலிருந்து இரு கல் தொலைவில் கொற்கை இருந்தது. நாகரிக மாந்தர் உலகில் வாழ்ந்த முதன்மை வாய்ந்த இடங்களுள் ஒன்று கொற்கை."

**கொற்கையும் நற்றமிழும்;** கொற்கை இருந்த இடமே "கபாடபுரம்" என்று வழங்



*With best Compliments from*

# V. V. Dhanushkodi Nadar & Sons



**Post Box No. 2**

90-91, South Raja Street,

TUTICORIN–628 001.

Phone : Off : 20038 & 21438
Telex No. 444-238 VVD IN

Grams : "STEAMSHIP"
"VEEVEEDEE"



Steamer Agents of
Repute Representing
Steamer Companies
for Generation

Trust Worthy and
Efficient Clearing,
Forwarding Agents
of the Tuticorin Port

Manufacturers of Popular
V.V.D. Coconut Oil,
Renowned Crown Brand
Groundnut Oil,
The Fine
V.V.D. Gingelly Oil,
Also Manufacturers of
High Grade
Salt and Gypsum and
Iodised Salt

கப்பட்டது என்பர் பி.டி. சீனிவாசன் (தமிழர் வரலாறு, 11,242). 'கொற்கைக் கோமான் கொற்கையம் பெருந்துறை'' என்று ஐங்குறுநூறு (188) கூறும் தொடரால் பாண்டியன் பெருமை புலனாகிறது. மூவாயிரத்து எழுநூறு ஆண்டுகளாக வெண்டேர்ச்செழியன முதல் முடத்திருமாறன் முடிய ஐம்பத்தொன்பது மன்னர் பேணிக் காத்த இரண்டாம் தமிழ்ச் சங்கம் இங்கேதான் நிலை பெற்றிருந்தது. நற்றிணை, அகநானூறு, ஐங்குறுநூறு சிறுபாணாற்றுப்படை, மதுரைக் காஞ்சி, சிலப்பதிகாரம், முத்தொள்ளாயிரம் ஆகிய பழந்தமிழ் இலக்கியங்கள் கொற்கையின் செழுமையினைச் செப்பியுள்ளன. மாறோக்கத்து நப்பசலையார், வெள்ளூர்க் காப்பியனார் (சீர்வைகுந்தம்). பனம்பாரனார் (சாத்தன் குளம்). அதிவீரராமபாண்டியன், குமரகுருபரர் ஆகிய புலவர் பெருமக்கள் இவ்வட்டாரத்தில் வாழ்ந்தவர் ஆவர்.

**அகழ்வாய்வும் புகழ்மேம்பாடும்:** நெல்லைத் திருமண்டிலத்தின அருளாளர் பலர் உருவாக்கிய ஊர்கள பற்றி ஆசிரியர் சீனிவாசன் (ஊரும் பேரும், ப.36) ஆங்கிலத்தில் எடுத்துரைத்துள்ளார். சாமுவேல் சாயர் பெருமைபேசும் சாயர்புரம், சாண்தாமசு புகழ்பாடும் மெய்ஞ்ஞானபுரம், கோலப்பு கொள்கை கூறும் நாசரேத்து (முதலியார் புரம்) ஆகியவை அவற்றுள் குறிப்பிடத்தக்கவை. பத்தொன்பதாம் நூற்றாண்டில் திருமறைத் தொண்டாற்ற வந்த அயர்லாந்து நாட்டவரான அருளாளர் கால்டுவெல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் (1856) எழுதியும், திருநெல்வேலியின் அரசியல், பொதுவரலாறு (1881) வரைந்தும், கொற்கை காயல் அகழாய்வு (1871) மேற்கொண்டும் தமிழ்மொழிக்கும் நாட்டுக்கும் பெரும் புகழ் சேர்த்துள்ளார். நான்கு நாட்களாகப் பத்து பன்னிரண்டு தொழிலாளர் துணையுடன் அவர் செய்த அகழாய்வு கொற்கையின் புகழ்வாய்ந்த பழம்பெருமையினைப் பறைசாற்றியது. அகசுதசு மன்னன் (கி.மு.63-கி.பி 24) நீரோ மன்னன் 54-68) ஆகியோர் காலத்துப் பொற்காசுகளும் கண்டெடுக்கப்பட்டன. கிரேக்கரோடும், எகிப்தியரோடும் சுமேரியரோடும் தமிழர் கொண்டிருந்த வணிகத் தொடர்புகள் விளக்கமாயின. கொற்கைப் பண்பாட்டின் காலம் கி.மு.285 என்று பம்பாயில் அண்மையில் உறுதி செய்யப்பட்டது. (சிங்கப்பூர் ''தமிழ்முரசு'' 12.7.1970). செருமானிய அறிஞர் சாகோரும் (1876), பிரெஞ்சு அறிஞர் உலூயி இனாப்பிக்கும் ஆதித்த நல்லூரில் அகழாய்வு மேற்கொண்டு பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட இரும்பு நாகரிகம் உலகிலேயே உயரிய தமிழ் நாகரிகம் எனத் தெளிவுறுத்தத் தூண்டியது என்பர். இராமச்சந்திர தீட்சிதர் (1951), கொற்கைப் பாண்டியர் வெளியிட்ட காசுகள் பற்றி ஆராய்ந்த அறிஞர் இ.உலோவந்தால் ''திருநெல்வேலிக் காசுகள்'' (1888) பற்றி அரியதொரு நூல் வெளியிட்டார். ஆரப்பா (1920 மொகஞ்சதாரோ (1922) அகழ்வாய்வுகள் சிந்துவெளியில் எண்ணாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே செம்பு நாகரிகம் இருந்ததாகச் செப்பியுள்ளன.

**இலக்கியம் விளம்பும் நலக்கூறுகள்**

''நற்றேர் வழுதி கொற்கை முன்றுறையில்'' கடலின் புல்வு நாற்றத்தைப் போக்கு



மளவுக்குத் தாழை மரங்கள் பூத்துக் குலுங்கின (அகநானூறு,130), ''புகழ்மலி சிறப்பின் கொற்கை'' (201) எனவும் ''பேரிசைக் கொற்கை'' (296) எனவும், ''கலிகெழு கொற்கை'' (350) எனவும் அகநானூறு கொற்கைப் புகழ் கூறுகிறது.

> ''மறப்போர் பாண்டியன் அறத்தின் காக்கும்
> கொற்கை அம்பெருந்துறை முத்தின்
> அன்ன
> நகைப் பொலிந்து இலங்கும் எயிறுகெழு
> துவர்வாய்'' (அகம் 27)

என்று கொற்கை முத்து ஒளியுடன் மிளிர்வது உயரிய உவகையால் உணர்த்தப்படுகிறது. ''முத்துப்படு பரப்பின் கொற்கை முன்றுறை'' (நற்றிணை, 23) எனவும், 'தத்துநீர் வரைப்பின் கொற்கை'' (சிறுவாண், 62) எனவும் கொற்கையில் முத்துக்கள் மிகுதியாய் விளைந்தமை கூறப்பட்டுள்ளன.

''கொற்கைக் கொண்கன் குமரித் துறைவன்'' (சிலம்பு, 23:11) பற்றி இளங்கோவடிகளும் குறித்துள்ளார். மூவேந்தர் புகழ்பாடும் முத்தொள்ளாயிரத்திலும் ஒருபாடல் இடம் பெற்றுள்ளது.

> ''உருவாய் நிலத்துயர் மணல்மேல்ஏறி
> நகுவாய் முத்தின் நசைந்த சங்கம்,
> புகுவான்
> திரைவரவு பார்த்திருக்கும் தென்
> கொற்கைக் கோமான்
> வரைவு பாத்திருக்கும் நெஞ்சு''

**நிறைவுரை:** ''சீருடை விழுச்சிறப்பின் விளைந்து முதிர்ந்த முத்துக் குளிக்கும் தொழிலாளர் தனிச்சேரியில் குடியிருந்த செய்தியினை மதுரைக் காஞ்சி (133-138) எடுத்து மொழிகிறது. பிற்காலச் சோழர் காலத்தில் 'மணல்மேடிட்டுப் போனது கொற்கை: எனவே, தூத்துக்குடி புதிய செயற்கைத் துறைமுகம் ஆயிற்று. தில்லி சுல்தானின் தளபதி சேகுசமாலுதீன் 1394–ஆம் ஆண்டிலும், மாலிக்காபூர 1410ஆம் ஆண்டிலும் கொற்கை வேந்தன் சுந்தரபாண்டியன் அரண்மனையிலிருந்துரு பத்துக்கோடிக்கு மேற்பட்ட பொன் நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றதாகப் பேராசிரியர் பி.டி. சீனிவாசன் (தமிழர் வரலாறு, ப.198) கூறியுள்ளார். ஒரு காலத்தில் பெரும்புகழுடன் திகழ்ந்தகொற்கை மாநகரரைத் தொல்பொருள் ஆய்வகமும் சுற்றுலாத்துறையும் பேணிக்காத்து வரலாற்று விளக்கம் வழங்க வேண்டும். இறந்தொழிந்த பழைய நலமும், புதுப்புலமையும் மீண்டும் சிறந்தொளிர அயராது செயலாற்றும் ஆர்வம் கொள்வோம்!

# வறட்சியின் பிடியிலிருந்து விடுதலை பெற
# வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டம்
# சிதம்பரனார் மாவட்டம், தூத்துக்குடி.

**பயனடையும் வட்டாரங்கள்**

கயத்தாறு,

கோவில்பட்டி,

விளாத்திகுளம்,

புதூர்,

ஒட்டப்பிடாரம்,

சாத்தான்குளம்,

உடன்குடி,

தூத்துக்குடி.

**உதவி பெறும் துறைகள்**

வேளாண்மை,

வேளாண்மைப்பொறியியல்,

தோட்டக்கலை,

எண்ணெய் வித்துக்கள் துறை,

கால்நடைப் பராமரிப்பு,

பட்டு வளர்ச்சித் துறை,

மீன்வளத்துறை,

கோழி அபிவிருத்தித் திட்டம்.

**ஹாஜி இ. முகமது கவுஸ்**, பி.எஸ்ஸி.,(வே)
திட்ட அலுவலர்,
வறட்சிக்கு இலக்காகும் பகுதி
மேம்பாட்டுத் திட்டம்
சிதம்பரனார் மாவட்டம், தூத்துக்குடி

**ரெ. ஆறுமுகம்**, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும்
பெருந்தலைவர்,
வறட்சிக்கு இலக்காகும் பகுதி
அபிவிருத்தித் திட்டம்.
தூத்துக்குடி.

# சிதம்பரனார் மாவட்டத்தில்



# பட்டுத்தொழில் வளர்ச்சி

**என். டேனியல் குணசீலன்**
உதவி இயக்குநர்,
பட்டு வளர்ச்சி,
சிதம்பரனார் மாவட்டம்.

'நூல்களின் ராணி' என அழைக்கப்படும் பட்டு நூல் தமிழகமெங்கும் பரவி வரும் காலத்தில் புது வரவுபெற்ற சிதம்பரனார் மாவட்டத்திலும் வளர்ச்சி பெறப் பல சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. சிதம்பரனார் மாவட்டம் உருவாகுமுன் இம் மாவட்டப் பட்டு வளர்ப்புப் பணிகள் தென்காசி பட்டுவளர்ப்பு உதவிஇயக்குநர் அவர்களால்மேற்பார்வையிடப்பட்டன. தற்போது தனி மாவட்டமாக இயங்கும் தருணத்தில் பட்டுத் தொழிலிலும் தனி இடம் பெறும் உயர்வைப் பெறும் வாய்ப்பைப் பெற்றுள்ளது சிதம்பரனார் மாவட்டம்.

சிதம்பரனார் மாவட்ட உஷண நிலையில் இரவை நிலங்களில் பட்டுச் செடி வளர்த்து உற்பத்தியாகும் இலைகளை பட்டுப் புழுக்களுக்கு உணவளித்து வருமானம் பெறலாம். பட்டுச் செடி ஐந்தாண்டுகள் தொடர்ந்து பலன் கொடுப்பதோடு ஆண்டுக்கு ஆறு முறை இலை அறுவடை செய்யலாம். மருந்தடிப்பு தேவை இல்லை. திருடர் பயமில்லை. குறிப்பாக வறட்சியைத் தாங்கக் கூடிய செடி ஆகும். பட்டுப்புழு வளர்ப்பிலும் அதிக வேலை வாய்ப்பும் வருமானமாக நிகர லாபம் 10,000 ரூபாயும் ஆண்டுக்குப் பெற முடிகிறது.

சிதம்பரனார் மாவட்டம் ஓராண்டு வயது அடைந்தபோதிலும் இம் மாவட்ட பட்டுத் தொழில் பல ஆண்டுகளாக வளர்ச்சி பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

நிர்வாகம்: 19.12.1987 முதல் சிதம்பரனார் மாவட்டத்திற்கென தனி பட்டு வளர்ப்பு உதவி இயக்குநர் அலுவலகம் செயல்பட உள்ளது.

பட்டு விஸ்தரிப்பு: சாத்தான்குளம், செம்மறிகுளம், பசுவந்தனை, புதுக்கோட்டை.

மாதிரிப்பட்டுப் பண்ணைகள்: ஓட்டப்பிடாரம், திருமலாபுரம், சூரன்குடி ஆகிய இடங்களில் நிறுவப்பட்டு வருகின்றது.

இளம் பட்டுப்புழு வளர்ப்பு மையங்கள்- மெஞ்ஞானபுரம், சேரகுளம், நாகலாபுரம்.

அரசு பட்டுக் கூடு அங்காடி: சாத்தன்குளம் மற்றும் தூத்துக்குடி.

பட்டுத்தொழிலை விவசாயிகள் மேற்கொள்வதற்காக அனைத்து வசதிகளும் அளிக்கப்பட்டாலும் பட்டுத் தொழிலை ஊக்கப்படுத்தும் வகையில் பல திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன.

**வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம்**

பட்டுத் தொழிலைமேற்கொள்ளும் விவசாயிகளுக்கும் கீழ்க்கண்ட சலுகைகள் வழங்கப்படுகின்றன.

1. ரூ. 500 பெறுமான இலவச இரசாயன உரங்கள்.

2. ஒரு மாத காலப்பயிற்சி ரூ. 100 ஊதியத்துடன்.





3. பயிற்சி முடிந்ததும் ரூ.400 பெறுமான இலவசத் தளவாடச் சாமான்கள்.

4. பிற மாவட்ட பட்டுத் தொழில் அறிய அரசு செலவில் கல்விச் சுற்றுலா.

5. இலவசமாக புழுவளர்ப்பு மனைகள் மருந்தடித்தல்.

**மாநிலத் திட்டம்**

1. ஏக்கருக்கு ரூ. 100 நடவு மானியம்.

2. பட்டுப் புழு வளர்ப்பில் ரூ. 100 ஊதியத்துடன் ஒரு மாத காலப் பயிற்சி.

3. பயிற்சி முடிந்ததும் ரூ.400 பெறுமான இலவசத் தளவாடச் சாமான்கள்.

4. பட்டு நூற்புத்தொழில்மேற் கொள்ளும் தொழிலதிபர்களுக்கு நடைமுறை மூலதனத்திற்கு ஒரு வருட வட்டி மான்யம்.

**ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மூலம் கடன் வசதி**

பட்டுத் தொழிலை மேற் கொள்ளப் பட்டுச் செடி வளர்ப் பிற்கும் புழு வளர்ப்பு மனை அமைக்கவும் புழுவளர்ப்புத் தள வாடச் சாமான்கள் கொள்முதல் செய்யவும் ஏக்கருக்கு ரூ.8,000 கடன் வசதி தேவை. முன்னோடி வங்கித் திட்டத்தின்கீழ் முன் னோடி பட்டுவளர்ப்புத் திட்டம் அமலாக்கம் செய்யப்பட்டது. இதன் மூலம் 1250 விவசாயி களுக்கு மூன்று ஆண்டுகள் தலைக்கு ரூ. 8,000 வீதம் ரூ. 1 கோடி வழங்கத் திட்ட மிடப்பட்டுள்ளது. இதற்கு ஒருங் கிணைந்த ஊரக வளர்ச்சித் திட் டத்தின்கீழ் மானியம் வழங்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பட்டுத் தொழில் செய்வதற் காக வசதிகள் உள்ளன. அரசு சலுகைகள் உள்ளன. பட்டுத் தொழில் வளர்ச்சிபெறஅனைத்து வாய்ப்புகளும் உள்ளன. சிதம்பர னார் மாவட்டம் பட்டுத் தொழி லுக்கு ஊக்கம் அளித்து வரு கிறது. விவசாயிகளுக்கு இது ஒரு வரப்பிரசாதம். இது தனிமாவட் டமானது சிறந்த வருமானம் ஈட்டித் தரவல்லது. தொடர்ந்து இத்திட்டங்கள் யாவும் மாவட்ட வளர்ச்சிக்கு ஆதரவாயிருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.


## தூத்துக்குடி துறைமுகத்தின் நல்வாழ்த்துக்கள்

### பொதுமக்கள் சேவையில் தூத்துக்குடி துறைமுகம்

தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்குத் தேவையான நிலக்கரி முழுவதையும் சுமார் 20 இலட்சம் டன்கள் இறக்குமதி செய்ய சிறந்த வசதிகளை துறைமுகம் செய்து தருகிறது.

இரசாயன உரங்களையும், உரங்கள் உற்பத்தி செய்யத் தேவைப்படும் மூலப் பொருட்களையும் ஏறத்தாழ 20 இலட்சம் டன் இறக்குமதி செய்ய நல்ல வசதிகள் செய்து விளைச்சலுக்கு உதவி வருகிறது.

### ஊழியர்களின் சேவையில்

சுகாதாரமான குடியிருப்பு, போக்குவரத்து மற்றும் இலவச மருத்துவ வசதிகள், பல்வேறு குடும்பநலத் திட்டங்கள், கண் மற்றும் தோல் நோய் சிகிச்சை முகாம்கள் நடத்தி வருகிறது.

சுதந்திரத்தின் பயனை மக்களுக்கு நல்கும் நிறுவனம்.......
**தூத்துக்குடி துறைமுகம்!**
உங்கள் அன்றாட வாழ்வில் இணைந்த உங்கள் நண்பன்........
**தூத்துக்குடி துறைமுகம்!**



**ஆர். ஜெயமோகன் பிள்ளை, இ.ஆ.ப.,**
தலைவர்
தூத்துக்குடி துறைமுக பொறுப்புக்கழகம்,
தூத்துக்குடி—628004.

தொலைபேசி : 21790 (13 இணைப்புகள்)
தொலைஅச்சு : 0434-243



ஆசிரியரும் வெளியிடுபவரும் : இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப.,
இயக்குநர், தமிழ்நாடு அரசு, செய்தி - மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
DIPR/Efficient

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23






# தமிழகத்தில் புதுமையான தொழிற் புரட்சி!

## டிட்கோவின் எதிர்காலத் தொழிற் திட்டங்கள்

- ரூ. 125 கோடி செலவில் கண்ணாடி (ஃப்ளோட் கிளாஸ்) தயாரிக்கும் தொழிற் திட்டம்.
- ரூ. 18 கோடி மூலதனத்தில் டெலிபோன் கேபிள் தயாரிக்கும் தொழிற் திட்டம்.
- ரூ. 250 கோடி செலவில் உருவாகும் 210 மெகாவாட் திறனுடைய மின் நிலையம்.
- ரூ.5.5 கோடி செலவில் மரவள்ளிக் கிழங்கிலிருந்து ப்ரக்டோஸ் திரவம் உற்பத்தி செய்யும் தொழிற்திட்டம்.
- ரூ. 6 கோடி செலவில் இண்டஸ்ட்ரியல் டைமண்ட் தொழிற்திட்டம்.
- ரூ. 40 கோடி செலவில் உருவாகும் 'பென்சிலின்' மருந்து தயாரிக்கும் தொழிற்திட்டம்.
- ரூ. 25 கோடி மூலதனத்தில் உருவாக்கப் படவிருக்கும் லாம்ப் மற்றும் லாம்ப் பாகங்கள் தயாரிக்கும் தொழிற் திட்டம்.
- ரூ. 10 கோடி செலவில் பேப்பர் லாமினேடட் எச்.டி.பி.இ. (HDPE) பைகள் தயாரிக்கும் தொழிற் திட்டம்
- ரூ. 12 கோடி மூலதனத்தில் உருவாகும் செராமிக் டைல்ஸ் தொழிற் திட்டம்

ஈ.வெ.கி. சுலோசனா சம்பத்
தலைவர்

டிட்கோ

**தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்**
(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
735, அண்ணா சாலை, சென்னை-600 002